உ

சிவமயம்

புகழேந்திப் புலவரவர்கள் இயற்றிய

சித்திராபுத்திர நயினார் கதை



மணி விழா தம்பதியர்

திரு. ராம.அழ.பழனியப்பன்

திருமதி. P. மணிமேகலை (எ) லெட்சுமி

மணிவிழா நாள் :

5-4-2013 வெள்ளிக்கிழமை

இடம் : கண்டனூர்

உ
சிவமயம்.

புகழேந்திப் புலவரவர்கள் இயற்றிய

சித்திராபுத்திர நயினார்கதை.



(ஐதீகப்படங்களுடன்)

மணி விழா தம்பதியர்

திரு. **ராம.அழ.பழனியப்பன்**

திருமதி. **P. மணிமேகலை (எ) லெட்சுமி**


மணிவிழா நாள் : 5-4-2013 வெள்ளிக்கிழமை

இடம் : கண்டனூர்

Designed & Printed by : MISBA OFFSET PRINTERS, SIVAKASI.
Ph : 04562-274208, 94433 74275



அருள்மிகு சித்திர புத்திரன் சுவாமி
தீர்த்ததொட்டி கோயில், தேனி.





அருள்மிகு சித்ரகுப்த சுவாமி
காஞ்சிபுரம்



திரு. ராம.அழ.பழனியப்பன் - திருமதி. P. மணிமேகலை (எ) லெட்சுமி
குடும்பத்தினர் நல்லாசியுடன்
அறுபதாம் ஆண்டு நிறைவு சாந்தி கல்யாண மணி விழா









Dr.A.சுப்பிரமணியன் M.A., B.Ed., DA.,
ஜோதிடர், மறைமலையடிகள் தெரு
சதாசிவ நகர்
மதுரை - 20

அணிந்துரை

டாக்டர்.க.பரமேஸ்வரன் தமிழ்த்துறைத் தலைவராக நாசியா கல்லூரியில் பணி ஆற்றுகிறார். இவர் இலக்கிய இலக்கணங்களில் நல்ல ஈடுபாடுடையவர். படைப்பிலக்கியவர்தி குறிப்பாகச் சந்தக்கவிதைகளையும், ஆசுகவிகளையும் இயற்றுவதில் வல்லவர். சிலேடை நயம் இவர் கவிதைகளில் சரளமாக அமைவது வியப்புக்குரியது. இவருடைய படைப்புகளில் சிறந்தவைகளான, அசுரகாவியம், வேல்விடு தூது, மயில் விடு தூது, கோழிக்குஞ்சு விடுதூது, நாய் விடு தூது ஆகிய தூது இலக்கியங்களும் மாரநாட்டான் பிள்ளைத்தமிழ், ஏசு நாதர் பிள்ளைத்தமிழ் ஆகிய பிள்ளைத்தமிழும், சொல்லாற்றுப்படை என்ற ஆற்றுப்படை நூலும், முத்திரை பதிக்கக்கூடிய படைப்புகளாகும். இவருடைய செய்யுட் தொகுப்பு, சிலேடை, தொகுப்பு, திருப்புகழ் அகவுரை (13 பாகங்கள்), விட்டிசை இலக்கணத்தில் அகப்பாட்டு, குழந்தைப்பாடல்களின் தொகுப்பு ஆகியன சிறந்த படைப்புகளாகும். இது வரை இவருடைய இலக்கியப் படைப்புகள் எட்டாயிரத்து ஐந்நூறு ஆகும். இருந்தபோதிலும் இன்னும் படைத்துக் கொண்டுதான் இருக்கிறார்.

சித்திரபுத்திரன் கதை :- இவரது உரைநூல் ஆகும். நீதி, தருமம், கருணை, ஒழுக்கம் மற்றும் நல்ல செய்திகள் முதலியவைகளை வலியுறுத்தும் வகையில் உள்ளது. மார்க்கண்டனின் சிவபக்தியும், அமராவதி செட்டிச்சியின் அறச்செயலும் தவச்செயலும் எடுத்துரைக்கக் காணலாம். தீமை செய்பவர்க்கு கிடைக்கக்கூடிய தண்டனைகளை எமலோகத்தில் பட்டியலிடக்காணலாம். மனிதனுடைய வாழ்க்கையில் தருமம் தலைகாக்கும் என்ற செயலை முன்னிறுத்திச் செல்கின்றன. மனிதன் வாழும் முறைப்படி வாழ வேண்டும். இதுவே சித்திரபுத்திரன் கதையின் நோக்கம். இவ்வுரை எழுதிய ஆசிரியர் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஒன்றியம், சங்கங்களும் என்ற ஊரில் பிறந்தவர். இவரின் பெற்றோர் ந.கருப்பையா, க.முத்துலெட்சுமி ஆகியோராவார். இவர், முந்நாளில் பாகவதம், பரங்கிரி அம்மான எழுதியும் பாடியும் தென்னாடுகளில் பெயரும் புகழும் பெற்ற வித்துவான் நல்லகுமார் கவிராயரின் மகன் வழி பேரானாவர். தொண்டுள்ளம் கொண்டவர். நற்பண்புகளையும் நன்னடைத்தையும் உடையவர். இவ்வாசிரியர் இறையருள் பெற்று நீடோடி வாழ்க.

வாழ்த்தும் அன்பர்
டாக்டர்.சுப்பிரணமணியன் (ப.நி).

சித்திரா புத்திரநயினார் கதை

காப்பு

சிவனும் பிரமனும் திருமாலும் போற்றுகின்ற நெறியில், நல்ல முனிவர்கள், தேவர்கள் தினமும் பயன்தரக்கூடிய பலாபலன்களைக் கூறவும், சித்திராபுத்திரன் பிறந்த கதையைப் பாடுவதற்கு யானைமுகமும் தொந்தி வயிறுமாகிய விநாயகப் பெருமானே அருள் புரிந்து காக்க வேண்டும்.

வெண்பா

இவ்வுலகம் புகழை உடையது. இவ்வுலகில் சித்திராபுத்திரன் கதையைச் சிறப்பு மிக்க செந்தமிழால் பாடிடவே. அதற்கு ஏர் கொண்டு உழவுத் தொழிலுக்கு இடம் தந்த நிலத்திற்கு உரியவளான உமையாள் பெற்றேடுத்த யானை முகம் கொண்ட விநாயகப் பெருமானே காக்க வேண்டும்.

விருத்தம்

யானைமுகமும், ஒரு கொம்பும், அகன்றமார்பும் சிறிய கண்ணும், பூணுநூலும் உடைய தோற்றத்தில் தோன்றும் விநாயகப் பெருமான் எனது உள்ளத்தில் வாழக் கூடியவன். அவனின் பாதங்களைத் தொழுதேன். அதனால் கணபதியே - நீ எனது நாவில் உதிக்க வேண்டும்.

நூல்

சித்திராபுத்திரன் வாழ்ந்த அந்தக் கதையை விருப்பமுடன் பாட விநாயகனே - நீ மனமகிழ்ந்து முன்னின்று நடத்த வேண்டும். விக்கினனே, விநாயகனே, வேழ முகத்தோனே, ஐங்கரத்தானே, தொந்திக்கணபதியே, தூயவனே, - நீ முன்னின்று உதவ வேண்டும். முதன்மை அருள் பெற்ற கணபதியே - நீ காத்தருள் புரிய வேண்டும். சத்திக் கணபதியே, உமையாளின் புத்திரனே, எல்லாத்திசைகளிலும் போற்றுகின்ற இறைவனே, திருமகனே, பத்தியுடன் தொழுவார்க்கு பாவங்கள் அனைத்தையும் தீர்த்தவனே - நான் சித்திராபுத்திரர் கதையை சொல்லுவதற்கு அருள் புரிய வேண்டும்.

சிறப்புடன் வாழ்ந்து விளங்கும் சித்திராபுத்திரர்கதைக்கு நீலமயில் வாகனனே - நீ பார்வதித்தாயே சிவனாரிடத்திருக்கும் உமையாளே - நீ வெள்ளை நிற ஒளியாய் முன்னின்று உதவவேண்டும். பக்தியுடன் எப்போழுதும் பாங்காக தந்து உதவவேண்டும். பொற்கொடியான உமையாளே - நீ புத்தி மிக உண்டாகி விளங்கும்படி வந்து உதவவேண்டும். நான் பக்தியுடன் சித்திராபுத்திரர் கதையை பாடுகின்றேன். சிவனும், விஷ்ணுவும், பிரம்மாவும், தீது இல்லாத முப்பது முக்கோடி தேவர்களும் எல்லோரும் இருக்கின்றனர். ஓர் நாளில் மனமகிழ்ந்து சொல்லுவார் ஈசர். நன்று தீது என்று தெரியும் படி ஒரு நடுநிலைமையாக கணக்கை எழுதும் ஈசனுடைய அருள்பெற்ற எமதருமர். அவர்

தன்னிடத்திலுள்ள கணக்கை நிச்சயமாக நேசமுடன் எழுதுவார். இந்நிலத்தில் வாழும் மக்களுக்கு புண்ணிய பாவங்ககளைப் பிரித்துக் காட்டியவர். அவர் புண்ணியம் செய்தவரையும், பாவம் இயற்றினோரையும் ஒன்று தவறாமல் உள்ளபடி எழுதக்கூடியவர். அவ்வாறு வெற்றிபுனைய நற்கணக்காய் விரைந்து எழுதிவரும் நிலையில் அத்திரிநாட்டுக்கான கணக்கை எழுதும் அதிகாரியாகக் கணக்கரானார். எல்லா நாட்டுக்கெங்கும் முதற்கணக்கராய் விளங்குபவர். நாட்டுக் கணக்கும் எமனது பெருங்கணக்கும் எட்டுத்திசைகளிலும் எழுதும் மொழியின், நல்ல கணக்கரானார். அவர் நல்லவருடைய குணங்களை நடுமைநிலைகொண்டு எழுதும் நாயகனாக ஆனவர். அவர் பொல்லாங்கு குணங்களைப் பிரித்து எழுதும் புண்ணியனாக ஆனவர். அவர் தன்னை நினைத்தவர்க்கும் தன்னோடு சேர்ந்தவருக்கும் இந்நிலத்தில் மகிழ்வுடன் வாழச் செல்வதை விரும்பி தானாக அருளக்கூடியவர். இந்நிலத்தில் நான் சித்திராபுத்திர நாயனாரின் கதையைப் பாடுகின்றேன். இதனை நீங்கள் எல்லோரும் கேட்கவேண்டும். உத்தமனார் கதையை அன்பாக கேட்க வேண்டும். கடவுளின் திருக்கதையை அன்பாகக் கேட்கவேண்டும். மன்னவனாரின் கதையை மகிழ்ந்திருந்து கேட்கவேண்டும். தென்னவனாரின் கதையைத் தினமும் வந்து கேட்டுக் கொண்டாட வேண்டும். பரமனார் கதையை பக்தியுடன் கேட்டவர்கள், பார்வேந்தனது கதையை பண்புடன் கேட்டவர்கள், சித்திராபுத்திரன் கதையை சிந்தையுடன் கேட்டவர்கள், உத்திரங்கள் சொல்லாமல் உண்மையாய் கேட்டவர்கள், புத்திர நல்ல பாக்கியங்கள் பொருந்தியேதான் வாழ்வார்கள். ஈசனருள் வேணுமென்று விரிவாகச் சொன்ன கதை ஆகும். அதை இனிமேல் நடத்துவோம். இப்போது செய்யும் வகையை அறிவோம். ஒவ்வொரு சித்திரைப் பௌர்ணமிக்கு விரதமிருந்து, வெண்மையான பட்டாடை உடுத்தி, புண்ணியமான பூக்களை; தானம் கொடுத்து,, வெள்ளியையும் தேங்காயும் கொடுத்து, பூ, பசு முதலியன தானம் கொடுத்து, பந்தலைச் சிறப்பாக செய்து, அப்பந்தலில் தோரணம் கட்டி விளங்குகிற வித்தையான விநாயகரை விரைந்து போற்றிட வேண்டும். செய்கின்ற செயல் சிறக்க வைக்க வேண்டுமென்றால் பின்பு முழுமையான கும்பம், பொன்னாலான குடத்தை வைக்க வேண்டும். அதில் வஸ்திராபாணங்கள் சாத்த வேண்டும். தட்சணைகள் வைத்து திருமாலைகள் சாத்த வேண்டும். சந்தனம் குங்குமம் சேர்த்து வைக்க வேண்டும். வாழையும் பாக்கும் கரும்பும் தானாக நிருத்த வேண்டும். பொன்னாலான விளக்கை வைத்து பூமலர்கள் சாத்த வேண்டும். வாழை இலையைப் பரப்பி அதில் பலவகைகனிகள் வைக்க வேண்டும். அதாவது வாழைப்

பழமும், பலாச்சுளையும், மாங்கனியும் தேனும் கலந்த நல்ல கனியும், மாங்கனியும் விளாங்கனியும் சர்க்கரையும் விரவிப் படைக்க வேண்டும். மேலும், கடலையும் சிறுபயிறு வகையான தட்டப்பயிறும், கடலைபொரியும், அவலும், பனியாரம். தேனும், தினையும் திறமாகப் படைக்க வேண்டும். மேலும் கரும்போடு இளநீரும், கர்கண்டும், நற்கனியும், பெருவிளாங்காயும், பிட்டமுதும், எள்ளுருண்டையும் கொழுக்கட்டையும் தேங்காயும் கொண்டுவந்து படைக்க வேண்டும். தோசை, வடை, இட்லி, அப்பம், அதிரசம், தேன்குழல், பாயசம், பானம் முதலியன் வைக்க வேண்டும். அன்னம் சமைத்து முருகன் முன்னே வைக்க வேண்டும். புதிதாக உருக்கப்பட்ட நெய்யும், பொறிக்கறியுள்ள தெல்லாம் வெள்ளியிலையில் அன்புள்ளத்தோடு படைக்க வேண்டும். ஈசன் தம் அருளால் அமுது செய்யப்பண்ணுவித்து, பூசித்து தோத்திரங்கள் செய்து தொழுது மிகப் பணிந்து வணாங்கவேண்டும்.

விருத்தம்

ஈசன் கங்கையை முடியில் தரித்தவன். அவனது மகன் யானை முகத்தனின் பாதங்களை உலகில் வாழ்வோர்கள் போற்றி செய்ய வேண்டும். நன்மைகள் தரும்படி வந்து அருளும் நாதனே - நீ எங்கும் நிறைந்தாய். உன்னை போற்றி என்றும் துதிக்கின்றோம்.

வசனம்

இதுபோல் கணபதியை வணங்கி, அர்ச்சனை செய்து நெய்வேத்திய முதலானதும் செய்து தூபதீபங்கொடுத்து - பிறகு சித்திரபுத்திராநாயினார் கதையை சொல்ல வேண்டும்.

நடை

சிவனார் புகழும்படி எமதருமன் கணக்குப்படி எழுதிய சித்திராபுத்திரரை சிறப்புடன் காணவேண்டும். பீதாம்பரஞ்சாத்தி, பெருத்தவட்டஞ்சாத்தி, சீதனங்களான செண்பகம் சாத்தி, கிடைத்தவையெல்லாம் சாத்தி, அறிவால் முறைப்படி அர்ச்சனை செய்து பின்பு வெள்ளிலையோடும் விளங்குமடைகாயும் உள்ளமகிழ்ந்து நெய்வேத்தியம் உவந்து படைக்க வேண்டும். புத்தகத்தினோடு விளங்கும் பொன்னெழுத்து ஆணியுடன் பூமியிலுள்ள புதுப்பண்டமுள்ளதெல்லாம் விருப்பமுடனே படைக்க எல்லோரும் சித்திரபுத்திரநயினார் கதையை சொல்ல வேண்டும். இக்கதையைப் பக்தியுடன் பகர்தல் வேண்டும். பரவுகின்ற புகழ்மாதர் மைந்தர் உண்மையுடன் கேட்க வேண்டும். சொல்லுகின்ற உமையாளின் கதையை துன்பமறக்கேட்டலுற்றார். கல்லுமுருகிக் கருத்துடனே கேட்கலுற்றார். மலடிகளெல்லாம் மனமுருகிக் கேட்கலுற்றார். அகம்பாம்விட்டு அன்புடன் கேட்டவர்கள் புண்ணியங்கள் செய்து புதுமையுடன் கேட்டவர்கள், நன்றாக கேட்டவர்கள், கதைமுழுவதும் கேட்டவர்கள்

கயிலைநாதரின் பாதங்களைப் பெறுவர். குறைவந்தவகை நீங்குமென்று ஈசனார், பிச்சையிடாத பெரும்பாவியாகிவிட்டார். நச்சுமனம் படைத்தவர்கள், கேடு செய்தவர்கள், கன்னிகளாக உள்ளவர்கள், கணவன் பேச்சைக் கேட்காதவர்கள், பிச்சையிட்டு உண்ணாத பெரும்பாவிகள், உண்டு உடலை வளர்த்த கொடும்பாவியானவர்கள், உற்று நின்று உறவை முறித்தவர்கள், பல நினைவுகளில் திரியும் பாவிகளானவர்கள், கணவரைத் தள்ளி வைத்த கொடும்பாவிகள், பிறரைத் தேடி வாழ்ந்திருக்கும் மகாபாவிகள், பிள்ளைகளை அழிக்கும் பெரும்பாவிகள், சண்டையிட்டு நித்தம் தன்பேச்சே மேலானது என்று இறைவனைப் பேணாத கொடும்பாவிகள். தன்வீட்டைச் சாத்திவிட்டு, பிறர் வீட்டிற் போய் நின்று தகாதவைகளைப் பேசும் பெரும்பாவியானவர்கள், பசித்தவரை பார்த்திருந்த பாவியர்கள் முதலியோர்களெல்லாம் இக்கதையை கேளாமல் கடந்தார்கள், இது உண்மை ஆகும். இந்நிலத்தில் விளைந்து புதிதாக வந்த புதுமண்டலம் என்றால் பெரியவர் முதலானவர்க்கு பிசகாமல் தாழ்ந்து நீ கொடுத்து, வேதியர் கருத்துகளுக்கு இடம் கொடுத்து விரதங்கள் இருந்து கொண்டாடி, கேட்டவர்க்கெல்லாம் கொடுத்து தூய்மையாக வாழ்ந்திருந்தவர்கள் காரணமாய் நடந்த கதையைக் கூறுகின்றோம். தெய்வபக்தியுடன் பாங்குடன் கேட்க வேண்டும். அவ்வாறு பக்தியுடனே கேட்டார். அதனால் இனிகதையைப் பாடுகிறேன். அது உத்தமனார் கதை ஆகும். அதை உரைக்கின்றேன். இனி நீங்கள் கேட்க வேண்டும். ஈசனது அருளால் எமதர்மர் நேசமுடன் கணக்கு எழுதியது நிச்சயம். புண்ணியம் செய்தவர், பூமியில் வாழ்பவர், பாவங்கள் செய்தவர் முதலான கணக்குகளைப் பகுந்து வேணுமென்று பிரமன் படைத்து உருவான கதையை சொல்லலுற்றார். இது கயிலாச மீது உருவான கதையாகும். இது தெய்வலோகப் பட்டணத்தில் திறமாய் நடந்த கதை ஆகும். நாடு அறியும் படி நன்றாகச் சொல்லுகின்றேன். இந்திரனும் இந்திராணியும் உடனிருந்து வாழ்க்கையில் குழந்தை வேண்டுமென்ற ஆசைபிடித்து மிக புலம்பினர். இது நடந்த கதையாகும். இதனைச் சொல்லுகின்றோம் எல்லோரும் நன்றாக கேட்க வேண்டும். நல்ல ஒரு பசுவை இறைவன் கொடுத்தான். எனினும் பிள்ளையில்லாத வாழ்வு பெருமையடையாது என்று இந்திராணியம்மை ஏங்கி மிக வாடினார். அவர் சொன்ன வார்த்தைகளைச் சொல்லுகின்றேன் அனைவரும் கேட்க வேண்டும். பட்டிபலுகாது, பாவங்கள் தீராது, ஆளடிமைகன்று விண்ணுலகம் போனகதைப் பாருங்கள். ஆபரணங்களெல்லாம் அழிந்திடுவதைப் பாருங்கள். மண்ணவரே - மனக்காரியங்கள் சிதறியே போய்விடுவதைப் பாருங்கள். அதனால் தருமங்கள்

செய்யவேண்டுமென்று இந்திரன் நினைத்தார். கன்னிகாதானம் கருத்துடன் செய்வதைப் பாருங்கள். யானை பசு முதலியன தானம் செய்தார். வஸ்திர தானங்கள், விமரிசையாய் தருமங்கள் செய்வதைப் பாருங்கள். பிறகு அவள் தபசு செய்ய வேண்டுமென்று நினைத்தார். அதனால் தன்னுடைய தேவரும், உத்தமரும், உத்தமியும் , உலகை ஆண்டவனையும் நினைத்து தபசுகள் செய்த கதையை கூறுகின்றேன். இனி நீங்கள் கேட்க வேண்டும். இந்தக் கதையை எள்ளளவும் தப்பாமல் கேட்டவர்களெல்லாம் கிளைச்சுற்றம் வாழ்ந்திருத்தார்.

விருத்தம்

சித்திரபுத்திரர் கதையைச் சிறப்புடன் கேட்டே, நோன்பு இருந்து பக்தியாயிருந்தவர்க்கெல்லம் பழவினைகள் நீங்கும். உமையாள் தன் கணவனுடன் சேர்ந்து வாழ்வார். இக்கதையை கூறப்பட்ட நூலில் உள்ள படி பத்தியாய், நூல்கற்றுச்சிறந்த வல்லவர்கள் பகர்ந்தனர்.

வசனம்

அது எப்படி சாத்தியம்? என்று கேட்கலாம். ஆனால் அநேகமான திரவியங்கள் முதலான சகல பாக்கியங்களிருந்தாலும் மைந்தனில்லாத வாழ்வு, வாழ்வு ஆகாது. அதனால் இந்திரனும் இந்திராணியும் வெகு மனஸ்தாபமாய் வருந்தி, தனது பொக்கிஷக் களஞ்சியத்திலுள்ள திரவிய முதலானதையெல்லாம் கொண்டு அநேக தான தருமங்களைச் செய்து பின்பு பார்வதிபதியாகிய ஈசனை நினைத்து தவசு செய்யும் பொழுது சித்திரா புத்திரநயினார் வந்து பிறந்தார். இத்தரணியில் நடந்த கதையானதால், இதை அன்பாகவும் பக்தியுடனும் கேட்பவர்களுக்கு பலனை இனிமேல் சொல்லுகின்றோம் கேட்க வேண்டும். அவர் உத்தமர் ஆவார். உயர்ந்த குடியாவார். பத்தினிகள் ஆவார். பல பிள்ளைகளுக்கு தாயாவார். சக்தி சிவம் பொருந்தி தாட்டியகராய் வாழ்ந்திருப்பார். நீண்டகாலம் நேசமுடன் வாழ்ந்திருப்பார். இன்பமுடன் வாழ்ந்து மகிழ்ச்சி உண்டாகும். செல்வம் மிக உண்டாகி சீராகத்தானிருப்பார். ஆழ்கடல்வற்றினாலும் அவர் முகழ்குன்றாது. மாற்றமில்லாத செம்பொன் மதிக்கும் அவர் வசத்தில் புண்ணியவானானாலும் போதமுள்ளோரானாலும் மண்ணும் மதியுள்ளளவும் வாழ்வு மிக உண்டாகும். ஒவ்வொரு சித்திரை மாதத்திலும் சிறப்புடன் பௌர்ணமியில் நோன்பு கொள்ள வேண்டும். இந்நோன்பு உத்தமரை நோக்கி செய்தவர்கள் மைந்தர்களானலும் மடந்தையர்களானாலும் எந்தக் புலத்தில் எவர்களேயானாலும் தந்தையைக் கோன்ற பெரும்பாவியானாலும் நித்தமும் திகைக்கும் ஈசரேயானாலும் இந்தக் கதையை இயல்பாய் கருத்தில் வைத்து இயற்கை என்று யோசியாமலேயிருந்து இளகும்படி மனதில் என்னேரமும் நினைத்தால் அங்கே அவரே

வெளிப்படுவார். இந்திரனைப் போல இனிதாக வாழ்வு உண்டாம். அந்த திருமாலின் பாதத்தில் இனிமையுடன் வாழ்ந்திருப்பார். சிவனருளும் உண்டாகும். ஒரு நாள் கூட தீங்கு வராது. நாளுக்கு நாள் செல்வங்கள் உண்டாகிப் பெருகும். ஆதியில் உருவான பரமனின் அருள் பெறுவார்கள். முத்தியருள் கொடுக்கப்படும். மோகங்கள் நீங்கிவிடும். வல்வினைகளானதெல்லாம் வழிவிலகிதான் போகும். நல்லதொரு புண்ணியங்கள் நாள்தோறும் உண்டாகும். ஆர்வமுடன் இக்கதையை அன்புடனே கேட்க வேண்டும். நயினார் பிறப்பை இனி நன்றாக சொல்லுகின்றேன். கயிலாசத்தில் நடந்த காரணத்தையும் சொல்லுகின்றேன். சிவனார் கயிலையில் சிறப்பாக இருக்கும் பொழுது, அவர் மனமகிழ்ந்து பராசக்தியுடன் கிருபையை கேட்க வேண்டும். உமையவளே கிருபையைச் சொல்லுகின்றேன் கேட்க வேண்டும். ஊழின் விதிப்படியே உள்ளபடியே உலகில் அவரவர் செய்த புண்ணிய பாவங்கள் அறியாமலிருப்பர். நாம் மட்டும் அறிய வேண்டுமென்றால் நியாயமில்லை, பார்த்தாயே. நம்மை நினையாமல் நாள்தோறும் வைத்தவர்கள், சிவ சிந்தையில்லாமல் நாள்தோறும் வைத்தார்கள், முன்வினையைவிட்டு மோட்சம்பெறுவதற்கு வேணும்வரங்கொடுத்து மேதினியிற்றானவர்கள் அசுரர் அரக்கர் அநேக முதலானோர், சக்திசிவமறந்து தானிடுக்கம் செய்வதனால், அப்படியே வராமல் அதற்கான செய்தி நன்று என்று தப்பில்லாத பெண்யே உமையவளே என்று நீ கேட்டாய் சிறப்புடன் கணக்கு சீராகத்தான் எழுதியும், திட்டமுடன் செய்து, நாமே கணக்கெழுத நல்லதல்ல கண்டாயே. மூத்தபிள்ளை கணபதியே என்று மொழிவது நல்லதல்ல. மூலப்பொருளாக மூத்த பிள்ளையை வைத்தோம். அழகான மயில் வாகனான முருகன் கொடுஞ்சூரனைக் கொல்ல தேவதைகள் வைத்தமையைக் காண்போம். தந்தைக்கு உபதேசம் செய்து பிரமாவைக் கொண்டு சிறையும் வைத்தான். அவனைத் துதித்தால் அநேக வரங்கொடுப்பான். அவன் உலகக் கணக்கெழத புகார் சொல்வான். அவன் உமையாள் மகன். பாலனிருந்தும் பழிப்பார்க்கு இடமானோம். மக்களிருந்து மனுநீதியதனால் எழுதப்பட்ட கணக்கு உண்டு. நல்வினைகள் தீவினைகள் நன்றாக எழுதிவர, எந்த வினையானாலும் இயல்பாக உள்ளபடி கணக்குப்படியே கருமங்கள் தான் பொசிக்க இருக்கும். பிறர் சாட்சியால் கணக்கு பிரபஞ்சமாக இருக்கும் என்றார். சிவன் சொல்ல இயல்பான பார்வதியும் நல்லது தான் சொல்ல வந்தீர் என்றார். நாகரே - உனது திருவுள்ளத்துக்கு ஏற்றபடி செய்யும் என்றாள். பார்வதியும் இருந்தூமிகப் பேசி ஈசருமே ஏது? சொல்வார். பூமா தேவியை நோக்கிப் பொற்பலகை என்ற பொழுது

இயல்பான பொற்பலகை ஒன்றெனவே பார்வதியும் நாதன் முன்பு வைத்தார். பார்வதி கொண்டு வர பரமனார் ஏது? சொல்வார் என்று நிற்க. ஈசன் மனமகிழ்ந்து சித்திரக்கோல் தர வேண்டுமென்று கூற, அதன்படி உமையாள் சித்திரக்கோல் கொண்டு வர ஏற்றுக் கொண்டார். சாதி சிங்ககாரனான சிவன் பவளநிறப்பச்சையுடன் நீலமணி வெண்மையுடன் நெறியாகச் சேர்ந்து உடனே பால்நிறமுகமாகப் பாலித்தார். பலகையின் மேல் அமர்ந்து ஈசன் சித்திரத்தில் குறித்தார். அவர் பஞ்சவர்ணமாகவும் போகாது தப்பாமலும் திருக்கரத்தால் சிறப்பாக எழுதினார். தம்மைப்போலிருக்கும்படி தானே எழுதினார். உண்மையுடன் பார்த்து, திருவுரை உருவை எழுதினார். சித்திரத்தைப் பார் என்றார். அழையுமேன்றபோதே நானுமதை அப்புதல்வரை அழைஎன்றார். எவருமறியாத சிவனின் தம் பேரருளால் சித்திரத்தாலே உதித்த புத்திரனாக வரக்கண்டேன். வாராய் மகனே என்று திருக்கரங்களால் தொட்டார். கையைக் காட்டி, முகத்தைக்காட்டி. கருமையான உருவமாகத் தான் திரண்டு கருணை விழிநோக்க, மாதர் கையில் பிறந்தனர். அவர்களுக்கு வேணும் வரம் பெருக உத்தமனார் செய்தார். பணிந்தவர்களுக்கொல்லாம் இருள்கொடுக்கும் பரமனது சன்னதியில் தொண்டனிட்டு வாய்புனர்ந்து தலையின் மேல் கை குவித்து நிற்கும் அந்த உத்தமரை நீலகண்டர்தான் பார்த்து எக்கோடிகாலம் இயல்பாக உள்ளமட்டும் அக்காலம் நெடுநாள் வாழ்ந்திருப்பீர். பல்லாயிரங்கோடி பகிரண்டமுள்ள மட்டும் எள்ளுக்குள் எண்ணெய் போலெங்கும் நிறைந்திருப்பீர்கள். பூவுக்குள் வாசம் போல் இருந்திருப்போம். நாம் உரைக்கும் பண்புகளைக் கண்டீரே. ஒன்றாயிருக்குமிடத்தை ஒருவரும் அறியார். தவமுடையார் அடையாளம் சொல்லுகின்றோம். இது அறியார் நன்றாயுரைக்கின்றோம். நல்ல மகனே கேளப்பா என்றார். மோட்ச வழிகாட்டும் சக்தியுடன் மொழிந்தோம். அதுபோல அன்று உனக்கு மோட்சவழி உபதேச மொழிந்தோம். எங்களுடன் மனதிலிருக்கும் நினைவுகளும் தேவர், அசுராள், முனிவர்கள், மாதவர்கள், எறும்புகடையானதவை எண்பத்து நானூறு ஆயிரம் பேதம் ஆகும். உயிர்களெல்லாம் செய்கின்றதெல்லாம் திறமாக எழுதுமென்றார். நல்ல கணக்குங்காட்டி எழுதுமென்றார். கைலாயத்திலுள்ள கணக்கெல்லாம் எழுது என்றார். மேருமலையின் நற்கணக்கும் வைகுண்டத்தின் நற்கணக்கும் பிரமலோகக் கணக்கும் பின்புமற்றதுள்ளது எல்லாம் எல்லாக்கணக்கும் எழுத அருள் கொடுத்து, உண்மையாக உமையாள் அழைத்தார். அப்பொழுது, அதே நேரம் ஆபரணப்பெட்டியை அழைப்பித்தார். அப்பெட்டியின் பூட்டைத்திறந்து புதுப்பட்டாடை எடுத்துக் கொடுத்தார். காலில் சிலம்மை அணிவித்தார் கனகமணித்தண்டையிட்டு, முன்கையில்

முதாறி, வலையல்களை அணிவித்தார். தங்கச்சரத்தில் வைடூரியம் அணிவித்தார். இவ்வாபரணங்களை சிவபெருமான் திருக்கரத்தால் அணிவிக்கப்பட்டது. காதில் குண்டலங்கள், கதிரொளி போற்றான் அணிவிக்கப்பட்டது. முப்புரிநூல் வயிரப்பதக்கத்துடன் அணிவிக்கப்பட்டது. தும்பிபதக்கத்துடன் சூடாமணிக்கவசமும் பில்லைச்சரப்பளியும் வேணி பணியாபரணமும் பாதத்திலிருந்து முடிவரைக்கும் பல அணிகலன்கள் அணிவிக்கப்பட்டது. அதனை பார்வதியும் ஈஸ்வரரும் கண் குளிரப்பார்த்தனர்.

அக்குழந்தையை அழைத்து திருநீற்றுகாப்புமிட்டுச் சித்திரபுத்திரன் என்று உபதேசம் செய்தார். அவனுடைய திருவுளத்தாலாண்டவர் சிவன் உள்ளார். அதிகாரம் செய்த கணக்கு சிவன் அருளினார். சிவன் அவனுக்கு முத்திரை மோதிரம் கையிலிட்டு நீடுழிகாலம் வாழ்க என வாழ்த்திக் கணக்கெழுதினார். நீ நீண்ட காலம் வாழ்க என்று உத்தமராகிய சிவன் கூறினார். அப்பொழுது அன்னை பார்வதியும் இருந்தார். அருகில் நின்ற சித்திரபுத்திரரை வாரியெடுத்து மகனே என்று கூறி, எவருமறியாத அரும்பொருளே என மொழிந்து புகழ்ந்தார். சிவபெருமான் அவரது அருள் வழியில் உலகம் விரும்பும் பலமொழிகள் தப்பாமல் பல்லாயிரங்கோடி பலன்களை கணக்காக எழுதினார். சொல்லக்கூடிய கணக்குகளை உண்டாக்கி கருமை நிற நிழல்தந்து தினசரி எழுதும் கணக்கில் தொகைப்படுத்தி இயற்றும் பயன்படியே எழுதினார். அவ்வேடுகளை பழுதுகள் வராதவகையில் பார்த்து, அதனை எதிர்த்தவர்கள் வாசித்தனர். சிவனுடைய வரமாகும். அது பேசாமல் தன்னிழலே சாட்சி சொல்லும்படி உள்ளது. இச்சாட்சி இயல்பான கணக்கெழுதும் வகையில் உள்ளது. மகனே இது உனக்குப் பிரயாசை தவிர வேறென்றுமில்லை என்று சொன்னார். நீயே கணக்காய் இருந்து கைவேலம் கொண்டார். அந்நேரத்தில் உள்ள பழைய கணக்குள்ளதெல்லாம் ஆயிரம் பாரமுள்ள அசைக்க முடியாத பட்டோலை தப்பாமல் ஏற்றுவித்தார். அப்பட்டோலையை பாண்டிய மன்னன் கொடுத்தார். சீமான் என்று போற்றுகின்ற சித்திரபுத்திரனார் அதை வாங்கினார். உலகம் வாழவென்று அன்றாட கணக்குகளை எமதருமர் எழுதுகிறார். இருந்த கணக்கையும் எழுதுகிறார். சிவனாருடைய வாசலில் நின்று சிறப்பாக எழுதுகிறார்.

விருத்தம்

சிவனும் உமையாளும் கூடி கணக்கராக நின்று உண்மையுடன் சித்திரபுத்திரநயினாரை சிருஷ்டித்தார்கள். அதனைக் கணக்கும் பார்த்து செய்திகள் தவறாவண்ணம் சிவனது வாசலில் நின்று எமதருமர் எழுதலுற்றார்.

வசனம்

எப்படியென்றால், கைலாயத்திலே சிவனும் பரமேஸ்வரியும் முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் மகாரிஷிகளும் மற்றுமுள்ள போதனர்களும் நிறைந்திருக்கும் போது அண்ட புவனங்களெல்லாம் பாவ புண்ணியபலன் இரண்டு பேரின் காரணமான கதைகள் சில நடக்க வேண்டும். அதற்கு அவர்கள் வேண்டியதால் மற்றுமுள்ள போர்கள் இதற்கு ஆகத்தக்கானவர்களாருமில்லை. தங்கப்பலகை எடுத்துவரச்சொல்லி உருவகுக்க அதை உமையவள் கண்டு அதிசயப்பட்டார். மேலும் அவர் கருவுருவாய் பேசும்படி அப்படியே கிருபை செய்து விஞ்சை மந்திரம் உபதேசம் செய்து சித்திரபுத்திரன் என்று பேரு வைத்து ஆடை ஆபரண முதலானதும் பூட்டி மகனைக்கட்டு முகந்து அன்பு செய்தார். அண்ட புவனங்களிலுன்பின் முன்னாள் கணக்கும், சிவனும் விஷ்ணு மூர்த்தி பிரம்மா முதலானவர்களிடமுள்ள கணக்கையும் அறிந்து வரம் கொடுத்தார். மேலும் சிவன் பொக்கிஷ முதலான பாவ புண்ணிய வேண்டிய அளவு வரங்களும் கொடுத்தார். தினமும் நடக்கிற பாவ புண்ணிய முதலான பலகணக்கும் நமக்கு அறியும் என்று சிவன் உத்தரவு கொடுத்தார். அதன்படியே சித்திரபுத்திரரும் கைலாயிகிரி வாசகரான பரமேசுவரர் சந்நிதானத்திலிருந்து கணக்கெழுதி வந்தார். இப்படி கைலாயத்தில் நடந்து வரும் போது தேவேந்திரனும் மகன் வேண்டுமென்று ஆசைகொண்டு பல தருமங்களைச் செய்து வந்தார். அப்பொழுது ஈஸ்வரனை நோக்கி இந்திராணியுடன் தவசு பண்ணுகிற விஸ்திதாரத்தை இனிமேல் சொல்லுகிறோம் அதை அன்பு வைத்து ஒரே மனதாக கேட்க வேண்டும்.

நடை

எண்ணமுடியாத பல்வேறு சிவ பூசைகளை செய்ய வேணுமென்று திறமாக நினைத்து, தேவாதிளெல்லாம் சேரவே சூழ்ந்துவர, செம்பொன் மணித்தேரில் சிறப்புடன் கன்னியர்கள் சூழ்ந்து வர தேர் நடத்தி தவம் செய்ய வருகிறான். இந்திரன் தவம் செய்ய வருகிற வழியில் அகலிகையைக் கண்டான். புண்ணிய தீர்த்தமாடப் புறப்பட்டாள் அகலிகை அவளது அழகைக் கண்டு இந்திரன் மெய்சோர்ந்து தேர் மீது விழுந்தான். அவன் மாயத் தந்திரங்களோடு அவளை அடைய நினைத்தான்: தேர் மீது விழுந்த அவனை தேவர்கள் சென்று தூக்கினர். பார் மீது நடந்து பகல் பொழுதில் அகலிடுகையைக் கண்ட ஆசையினால், அவள் மீது காதல் கொண்டு, காமவினை நினைத்து, ஆதரவு பேசி, அவளைச் சேர நினைத்தான், அதனால் தேரை நிறுத்தினான். தேவர்களையும் நிறுத்திவிட்டு மாயமாய் மறைந்து சென்று மருந்துமாமணிக்குச் சென்றான். காரிருள் நிறைந்த அந்த மாலை நேரத்தில், அவன் காய்

கனிகளுடன் மாயாபாசத்தில் மகிமைத்தனை இழந்து ஆசை துயரமாதலால் அகலிகை வீட்டிற்குச் சென்றான். அவன் தெய்வீக உருமாறினான். அவன் அன்று இரவு நல்லுறக்க மறிந்து, நடுசாமத்தில் கூரையின் மீது ஏறி, விடியற்காலையில் கூவும் கோழியாய் நின்று கூவினான். அதனால் கௌதம் முனிவர் விடிந்து விட்டது என்று எழுந்து தெண்டு, கமண்டலம், திருநீற்றுப்பையுடன் கங்கைக்கரையில் வந்து நின்றார். அவர் கங்கையுறக்கத்தை அறிந்தார். அவர் மாயவிதியோ மாயமோ தெரியவில்லையென்று உண்மை அறிய நந்தவனம் சென்றார். அவர், அங்கு அந்திமலரும் அரும்பாமலிருந்ததைப் பார்த்தார். அவர், இதுவென்னா சோதனையோ, ஈஸ்வரனே தஞ்சமென்று அர்த்த சாம நேரம் அறியாமல், வந்தோமென்று மனக்கவலையுடன், அங்கிருந்து உண்மை அறிய வீட்டிற்கு திரும்பி வந்தார். அப்பொழுது அதனை அறிந்த இந்திரன் கௌதம முனிவர் போல் உருவம் எடுத்து அகலிகையின் வான்முகம் நோக்கினான். மனக்கவலையுடன் மையலோடு வந்தவரெல்லாம் சேருகென்று இனிமையாக சொன்னான். அதற்கு அகலிகை இந்திரனை நோக்கி, பாவி கெடுவாய், பத்தினியிடம் ஏதோ தீயவினையால் வந்தாயே, உன் மகிமையுடன் நீதியழிந்திடுவாய். நிச்சயம் இது தப்பாது என்று ஆசையில்லாது சொல்லி நின்றாள் அப்பொழுது முனிவர் அங்கு வந்தார் உண்மையாகப் போன முனிவர் மீண்டும் திரும்பி வந்தார். வீட்டிற்கு வந்த முனிவர் காரணங்களைக் கண்டு சொல்லி, இந்திரனை நோக்கி யாரடா? என்று கேட்டார். இந்திரன் பூனை உருவம் கொண்டான். யாரடா? அறிவு கெட்டு வந்துவிட்டியா? உனது பேரும் பிறப்பும், தவறாமல் சொல்லடா என்றார் முனிவர். முனிவரே , நான் இந்திரன் உன்னிடத்தில் வந்ததற்கான காரணம் ஒன்றுமில்லை. வருடபலன்களையும் சாஸ்திரங்களையும் கேட்கவே வந்தேன் என்றான் இந்திரன். இந்த இரவு நேரத்தில் நீயும் துன்பம் செய்ய வந்தவன் என்று கண்டேன்.

நீ அகலிகையின் மனசையடைந்தாய், என்ற முனிவருக்கு கண்சிவந்து, நெருப்புப் பொறிபறக்க இருந்தது. இப்பொழுது எறித்தால் இந்திரலோகம் அழியும் என்று நினைத்து, இந்திரன் மீது சாபம் செய்தார் முனிவர். இந்திரன் சரீரமெல்லாம் யோனியாய் போக சாபமிட்டார். ஆயிரம் யோனி அங்கமெல்லாம் வெடித்தது. முனிவர் சாபமிட்டவுடன் அந்நேரத்தில் அவனது உடலில் தப்பாமல் யோனி வெடித்தது, இந்நிலையைக் கண்டான். அவன் கண்கலங்கினான். முனிவரே, எனது பிழையை பொறுத்தல் வேண்டும். அரிய வினைகளானேன். ஆசையாகத்தான் விரும்பி வஞ்சகனும் ஆனேன். மாபாவியாகிவிட்டேன், வஞ்சகமாய் செய்த குற்றத்தை முனிவரே நீர் பொறுக்க வேண்டும், என்று இந்திரன்

முனிவரது காலில் விழுந்து பணிந்து தொழுதான். இந்திரலோகம் இழந்து போகாமலும் சாபம் தீர்த்து இரட்சிக்க வேண்டுமென்றும், அச்சாபத்தோடே அதனை தீர்க்க வழி வேண்டும் என்று இந்திரன் வேண்டியதால் முனிவர் மனம் இரங்கினார். இந்திரனே, முனிவர் சாபத்தைத் தீர்க்க முடியாது. ஆணவமானதானால் வந்த இந்திரனே சிவபெருமானை இப்பூமியில் பூசை செய்தால் ஆயிரம் யோனியும் ஆயிரம் கண்ணாக மாறும் என்றார். பூசை செய்வதற்காக இந்திரன் போனான். அப்போது முனிவர் அகலிகையைப் பார்த்து கருங்கல்லாய் போகவென்று கடுஞ்சாபம் விட்டார். அப்பொழுது அகலிகை முனிவரது பாதங்களைத் தொழுது சாப நிவர்த்தி அருள வேண்டும் என்றாள். அவள் வேர்த்து விரித்து உடல் கலங்கி நடுங்கி இச்சாபம் எனக்கா வரவேணும் என்று அழுதாள். இது என்ன மாயமோ? எம்பெருமானின் சோதனையோ? என்று வருந்தினாள். அகலிகை பணிந்து பாதங்களைத் தொழுது கேட்பதனால், கிருபையுடன் முனிவர் அரக்கர் குலத்தை அறுக்க அன்பாக மாயவனான இராமன் ரவிகுலத்தில் வந்து, தசரதனுக்கு மகனாகப் பிறந்து, நான்கு பேருடன் பிறந்து, அவ்வாறு பிறந்து வளர்ந்த நாளிலே விசுவாமித்திரர் செய்யும் வேள்வி கெடும்படிக்குத் தாடகை சிறுநீரால் அழித்தாள். அதனால் அம்முனிவர் தாடகையைச் சங்காரித்து அவரது வேள்வியை முடிப்பதற்கு தசரதனிடத்தில் விசுவாமித்திரர் வந்து இராமனை அனுப்பும்படி கேட்பார். அதன்படி இராமன், இலக்குவனன் ஆகிய இருவரையும் அழைத்து தாடகையை வதம் செய்து வேள்வியை முடித்த பின்பு மிதிலையை நோக்கி விரைந்து சென்றனர். கலியாணம் பண்ணவென்று ஸ்ரீ இராமன் வருகையிலே அவனது பாதம் சிறப்பாகபட்டவுடன் பெண்ணாக நீ வருவாய் தீர்ந்து விடும் முன் சாபம் அப்பொழுது நான் உன்னை அழைத்துக் கொள்வேன் என்றவுடன் கருங்கல்லுபாறையாய் போனாள் அகலிகை.

விருத்தம்

இந்திரலோகம் விட்டு எழிலான உருவம் பெற்று, சந்திரவானமெல்லாம் புடைசூழந்து வரும் போது மந்திர முனிவரின் பெண் வந்து, மலர் கொய்யும் நிலைகண்டு,இந்திரன் மயங்கி, மனம் வாடி அப்பெண்ணிருப்பிடம் சென்றான். இருப்பிடத்தை தேடிப் பார்த்து துயரருற்று கோழியைப் போல் இந்திரன் உருமாறினான். பிறகு கூவினான். முனிவர் பொழுது விடிந்தது என்று எண்ணி கங்கைக்கு நீராடச் சென்றார். பிறகு வீட்டிற்கு திரும்பி வந்த பொழுது கொடியோன் ஆகிய இந்திரன் மனைவியிடம் மயங்கியே சொல்லும் நிலை கண்டு முனிவர் சினத்துடன் சாபம் இட்டார். காமத்திருடனாய் வந்ததாலே வந்து ஓர் பெண் மேல் மோகம் கொண்டாதாலே முனிவர் சாபம் செய்தார். உடலெல்லாம் யோனியாகும் படி சாபமிட்டார். இது பொய்யன்று

உண்மை என்று சொல்லி அவர் போவென விடை கொடுத்தார். இந்த நற்சாபத்தாலே இந்திரன் தலை கவிழ்ந்து அந்த நல்ல முனிவரின் அடிபணிந்து வரம் கேட்டான். சிவனைப் பூசை செய்தால் சந்திரமேனியெல்லாம் ஆயிலம் கண்ணாரும் என்றார்.

வசனம்

இதனுடைய விபரம் எப்படி என்று தெளிவாக அறியலாம். தேவேந்திரன் குழந்தை ஆசையால் தவசு செய்யப்புறப்பட்டு வருகிற வழியில் மருந்து, மாமலைக்கு அருகில் முனிவரது மனைவி பத்தினி அகலிகை பெண்ணைக் கண்டான். முனிவருக்கு அகலிகை மலர் கொய்ய வந்த இடத்தில் இந்திரன் அப்பெண்ணினுடைய அழகு சவுந்தரியங்களைக் கண்டு தவசை மறந்து புத்திரனையும் விட்டு, மயக்கம் கொண்டு, அப்பெண் வாழுகிறவிடம் போய் கோழியாய் நின்று கூவினான். அதனால் பொழுதுவிடிந்தது என்று வெளியில் புறப்பட்டு முனிவர் தனஞ் செய்யப் போகப் புறப்பட்டார். அப்படியே முனிவர் விடிந்து போச்சுதென்று கங்கைக்கரையில் வந்தார். கங்கை நித்திரை செய்கிறதைப் பார்த்து நந்தவனம் சென்று புஷ்பவிரிவிபார்ப்போமென்று பார்க்கும் பொழுது மலர்களெல்லாம் அரும்புமயமாக மலராது கண்டு அது ஓர் காரணமாயிருக்கிறதென உணர்ந்தார். உடனே முனிவர் தன்னுடைய ஆசிரமத்திற்குசென்று பார்த்தால், அங்கு விரகதாபத்தைக் கேட்ட அகலிகை மனம் நொந்து சில கொடுமையான வார்த்தைகளைச் சொல்லுகிற நேரத்தில், முனிவர் வருகிற சாடையை இந்திரன் தெரிந்து பூனை உருவமாக மாறினான். இதனை முனவர் ஞான கண்ணால் அறிந்து கொண்டு யாரடா நீ? என்றார். உன்னுடைய அடியேன் தேவேந்திரன் இந்த வருடத்தின் பஞ்சாங்கப் பலன் கேட்க வந்தேன் என்று சொன்னான். இது உண்மை இல்லை என்று திருட்டுத்தனமாகச் சொன்னதைத் தெரிந்து, இவன் அகலிகையை கபடு செய்ய வந்தவன் என்று கடுங்கோபத்துடன் முனிவர் சாபமிட்டார். முனிவருடைய இரண்டு கண்களிலும் நெருப்புப் பொறி பறக்கும்படி இருந்தது. இந்திரன் தனது மனைவி இந்திராணி இருக்க, அதைவிட்டு முனிவருடைய மனைவி மீது ஆசைப்பட்டது தவறு. அதனால் முனிவர் உன் சரீரமெல்லாம் ஆயிரம் யோனிகளாக வெடிக்கக் கடவதென்று சாபமிட்டார் முனிவர். உடனே இந்திரன் பயந்து ஒரு நடுங்கி முனிவரைத் தொழுது நமஸ்காரம், எளியேன் செய்த குற்றம் பொறுக்க வேணுமென்று வேண்டி நமஸ்காரம் செய்தான். அதனால் முனிவர் சிவபெருமானை தரிசனம் செய்துவந்தால், பூசை செய்தால் இந்த சாபம் மாறும் சிவனாலே சாபம் தீர்ந்து யோனியும் ஆயிரம் கண்ணாகும் என்று முனிவர் விடை கொடுத்தார். அப்படியே தேவேந்திரன் தன்னுடைய பட்டணத்திற்கு வந்து சுவாமி

கயிலங்கிரிவாசனைப் பூசை செய்து வர முன்பு முனிவர் சொன்னபடியே ஆயிரங் கண்ணாகப் பெற்றுக் கொண்டான். அப்பால் நடக்கிற அதிசயங்களை இனிமேல் தவகுவிஸ்தாரமாகச் சொல்லுகிறோம். அகலிகைப் பெண்ணுக்கு நடக்கிறவிவரத்தைக் கேட்க வேண்டும்.

விருத்தம்

கவுதம முனிவர் அகலிகைப் பெண்ணைக் கண்டு அகலிகையை உன்மீது ஆசைப்பட்டு இந்திரன் சார்ந்ததாலே நீ கருங்கல்லாக போவாய். பொல்லாங்குகளைக் குறைப்பாய். சாபம் சாற்றினார் - உடனே அகலிகை முனிவரிடம் எனக்கு இட்ட சாபத்தினை தீர்ப்பதற்கு வழி கூறுங்கள் என்றாள். அதற்கு முனிவர் சாபம் தீர வழி கூறினார். அதாவது அழகான தசரதனுக்குப் பிறந்த இராமனுடைய பாதம் உனது மேல்பட்டவுடன் நீ சாபம் நீங்கிப் பெண்ணாக மாறுவாய் என்றார்.

அது எப்படி என்று கேட்கலாம். அகலிகையான பெண் எந்த ஒரு புருஷாள் வாடை படாத பெண்ணாகையால் இந்திரன் கண்டு மோகத்ததனால் இந்த தேகம் விட்டு மறுதேகமாற வேண்டியதற்கு கருங்கல்லாய் போகக்கட வதென்று கவுதம் முனிவர் சபித்தார். அதனால் அகலிகையானவள் முனிவரை தோத்திரம் செய்து எனக்கிட்ட சாபம் எப்போழுது நீங்கும் என்று கேட்க மகா விஷ்ணுவானவர் அரக்கர் குலத்தை அழிக்க வேண்டி தசரதர் புத்திரனாகப்பிறந்து இராமனாக வென்று வரும் காலத்தில் விஸ்வாமித்திரரானவர் வேள்வி செய்தார். அவ்வேள்வியை தாடகை என்ற அரக்கி சிறுநீரால் அழித்தாள். அவ்வாறு வேள்வியை அழிக்கும் வேதனையை நீங்க வேண்டி விஸ்வாமித்திரர் தசரதனிடம் சென்று கேட்டு ஸ்ரீ ராமனை அழைத்துக் கொண்டு போய் தாடகையை சம்மாரஞ்செய்து, மிதிலையில் சீதைக்குக் கலியாணஞ்செய்து வரும்போது அந்தராமனுடைய திருப்பாதம் உன்மீது பட்டவுடனே பெண்ணுருவாகி என்னிடம் வருவாய் அப்பொழுது உன்னைச் சேர்த்துக் கொள்ளுகிறேன் என்றார் கவுதமமுனிவர். சில நாட்கள் சென்று ஸ்ரீ ராமர் வந்து தாடகையைக் கொன்று விஸ்வாமித்திரருக்கு சந்தோசம் செய்துவித்து மிதிலையில் சீதையை கல்யாணம் செய்து வரும் வழியில் ஸ்ரீ ராமருடைய பாதம் அகலிகைப் பெண்மேல் பட்டு தன் சொரூபமத்தை, ஸ்ரீ ராமர் பார்த்து இது வென்ன விபரமென்று விஸ்வாமித்திரரும் கேட்க அகலிகையானவள் நடந்த விருத்தாந்தம் மெல்லாமவரிடம் சொல்ல, அப்பால் ஸ்ரீ ராமமூர்த்தி முனிவரிடம் போகும்படி உத்தரவு கொடுக்க அப்படியே முனிவரிடம் அகலிகைப் பெண் வந்து சேர்ந்து வாழ்ந்து கொண்டிருந்தாள். அப்பால் தேவேந்திரன் நடக்கிற விருத்தாந்தமும் அதன் மேல் நடக்கிறதையும் சொல்கிறேன் கேட்க

வேண்டும்.
நடை
இந்திரனுடைய கதையை சொல்லுகிறேன் கேட்க வேண்டும். ஆயிரம் யோனியும் கண்ணாகுமென்று கூறிய மாமுனியைப் பணிந்து இந்திரன் திரும்பினார். பிறகு சிவனைப் பூசை செய்ய மனதில் நினைத்து ஆணவமாயை அதனை நீக்கி, தான் செய்த குற்றமெல்லாம் தீர வேண்டும் என்று கவுதம முனிவர் இட்ட சாபத்தை நீக்க வேண்டும் என்று சிவனைப் பூசித்தான் இந்திரன். பூஜை செய்யும் பொழுது பல்வேறு புதுமைகளைக் கண்டான். அவ்வாறு பூசையை ஏற்றுக் கொண்ட சிவபெருமான் தயவு காட்டி வந்து இந்திரனுடைய ஆயிரம் யோனிகளை ஆயிரம் கண்ணாக மாற்றினார். ஆயிரவாதத்தோன் என்னும் இந்திரன் ஆயிரங் கண்ணுடையவனாக கூறப்பட்டான். மேலும் அவன் வரம் அதிகம் பெற்றான். அவ்வாறு அவன் வாழும் நாளையிலே அகலிகை சாபம் பிடித்து நீங்கிய நேரம், தெய்வலோகப் பட்டிணத்தில் வாழ்கின்ற தேவர்கள் தவித்தனர். தேவர்கள் எல்லோருக்குமாக பிடித்தது சாபமது. இந்திரன் மலடாய் நின்று தவிக்கிற புலியைப் போல இருந்தான். அது வானுலகெல்லாம் மலடாகப் போனது. அது மட்டுமல்ல மழை பெய்யவில்லை. காமன் நெருப்பில் எறிந்தது போல் காடுகளெல்லாம் எறிந்தது. காய்க்கும் மரங்கள் எல்லாம் காயுதிர்ந்து போனது. பால் பசுக்களெல்லாம் பால்வற்றி நின்றதைக் காணலாம். பறவைகள் எல்லாம் மலராக மாறியது. காட்டு மிருக்மெல்லாம் மலடாக ஆனது. புல்லும் கருகி பூக்களுமே இல்லாமல் இந்திரலோகம் எல்லாம். அழிந்து போனது. இந்திரனுடைய தேவி இதுவெல்லாம் தெரிந்துகொண்டு, இந்திராணி என்று நானிருக்க அடுத்தான் மனைவியை நினைத்ததினால் கேடு விளைந்ததே. இந்திரனே முனிவர் சாபம் பலித்தது அல்லாமல் பத்தினியின் சாபம் பலித்தது கண்டாயோ என்றார். அறிவு நிறைந்த வாழ்க்கையிலே அறிவு கெட்டு போனீரோ தவசுமறந்து கெட்டழிந்த காரணத்தால் மனம் துயரப்பட்டு மலடாக இருந்ததே பிச்சை இடுபவர்களைத் தடுத்தவர்கள் கெடுவார்கள். அதுபோல படுவார்கள் பாடெல்லாம் பட்டோமே இந்திரரே. அம்பலத்தில் நின்றலைவர் அநியாயம் செய்தவர்கள், ஊரார் உடைமைக்கு பேராசை கொண்டது அதுபோல தேவர்களெல்லாம் சேரமடலானோம். என்றவாறு இந்திராணி புலம்பினாள். இதே இந்திரன் கேட்டு இசைவுற்று வாடினான். எந்த விதியிலே எனக்குமே இந்தவினை வந்ததே என்றாள். மனக்கவலை கொண்டு இந்திராணி மானே குயிலே மரகதமே நீ கேடு. தேனே கனியே தெவிட்டாத தெள்ளமுதே அந்தரம்பை மடதை அருமை கொள்ளும் பெண்மையே நீ வாழ்வல்ல கண்டாயே. சேனைப் பலதானச்

சிறுவன் ஒருவனும் இல்லை. குழந்தைகள் இல்லாத வீட்டில் மறையோர் புசிப்பதில்லை. மகனில்லாத வீட்டில் மற்றொருவர் போகமாட்டார். வளர்ந்தவமையிலே வகையென்றாக சொல்லுகிறேன். சிவனை நோக்கி அதிகத்தவம் செய்தால் எல்லாப்பலனும் இயல்பும் உண்டாகும். இது மனைவிக்குச் சொல்லும் நெறியாகும். தூய்மையான நுட்பமான அறுவுடைய சுந்தரியும் இது பற்றி சொல்வாள். குழந்தை இல்லாத வீடு மழை காணாத பயிர்போல் வாடி மிகந்தளர்ந்து மயங்கி முகம் வாடி என்ற படி கூறினாள் சுந்தரி. இந்திரனால் எதுவும் சொல்ல முடியவில்லை.

விருத்தம்

மங்கையே சொல்வதைக் கேட்பாய். குழந்தை இல்லாத வீட்டில் வாழ்ந்திருத்தால் உலகம் குற்றமுற்றமையாக கருதும்படியாகும். கங்கையை தலையில் அணிந்த சிவனின் பாதங்களைக் கண்டு வரத்தைப்பெற்று இங்கு வருவோம். கைலைமலையில் இருக்கும் யோகியரை நோக்கி இருவரும் நடந்து சென்று சேர்ந்திருப்போம். குழந்தை வேண்டி தவம் இருப்போம். சங்கரனை முழுமையுடன் மனதில் வைத்து சிவனோடு உமையாளை சிந்தையில் நினைத்து இந்திரனும் தேவியும் ஈஸ்வரர் இருக்கும் இடம் போகலுற்றார். இந்திரனும், இந்திராணியும் ஒற்றுமையாய் கயிலையை நோக்கி விரைவில் சென்று அடைந்தார்கள். அவர்கள் கடுமையான வழிகளைக் கடந்து கயிலைக்குப் போனார்கள் என்பதைக் கண்டோம். தெற்கே இருக்கிற கயிலையைச் சேர்ந்து சிந்தனை கொண்டு இருப்போம். நந்திதனைக்கண்டு வணக்கம் செலுத்தினர். இருவரும் நின்று கைகூப்பி பெருமூச்சு விட்டனர். பெருமூச்சு விட்டு நொந்து நின்றாரைப் பார்த்து தடுமாற்றம் நீக்கித் தனதாக வார்த்தை சொல்லி தேவியும் நீயும் வந்த காரியம் என்ன? என்று சிவபெருமான் உரைத்தார். அந்த வார்த்தையாகக் கேட்ட இந்திரலோகத்து அரசன் மகன் இல்லாமல் எல்லோரும் சிரிப்பார்கள் மகன் இல்லாமல் உலகத்தை ஆண்டிருத்தாம் பொன்னு உலகை ஆள புத்திரனும் இல்லை. சந்ததிக்காக தவம்பெறவே இங்கு வந்தோம். எங்களைக் காத்து இரட்சிக்கவேண்டும் என்று இந்திரன் உரைத்தான். அதுகேட்டு நந்தி வந்தது. நன்று நன்று. உங்களுக்கு மகன் உண்டாகும். சிவனோடு உமையாளை மனதிலே நினைத்து தவமாய் மிகவும் நல்ல தலையிலே ஊசி வைத்து அவ்வூசிமேல் நின்று ஏற்ற தவஞ்செய்வீரானால் சிவனோடு உமையாளும் சிந்தை மகிழ்ந்து சந்ததி பாக்கியமும் தந்தருள்புரிவார். இதனை நந்தி எடுத்துரைத்தது. நந்தீசர் சொன்னபடி நாங்கள் தவம் செய்வோம் என்று இந்திரனும் நாயகியும் ஆற்றில் மூழ்கி அஞ்செழுத்து மந்திரத்தை மனதில் வைத்து ஊசியை நிறுத்தி அதில் ஒரு காலை தானூன்றி நின்றார். தவசு நிருமகனைத்தான் நினைத்து இந்திராணியும் இருந்தார். இரண்டுபேரும் ஈசனை

பிள்ளையருள் என்று மனதில் நினைத்து உள்ளங்காலில் ஊசி நிற்க. சுற்றில் புற்றும் தானே வளர்ந்திருந்தது கண்டாய். வேர்கள் அடி மரங்களும் உண்டாகி இருந்தது. நிலத்துக்குள் வேரோடிப் படர்ந்ததைப் பசு செய்தார். அந்த அருமையை சிவன் அறியவில்லை. ஆனபொழுது இந்திரனும் அவனது மனைவி தன்னுடனெ எந்தப்படி தவங்கள் செய்வோம் என்று நினைத்து பாதாளம் தோண்டி வெட்டி பாங்காயன் வளர்த்து வேதாள அக்கினி போல் வேலே படர்ந்தெரிய ஈசனே பிள்ளையிருளென்படி தவம் செய்தான். தண்ணீர் அருத்தாமல் சருகும் பொசியாமல் இந்தப்படி பசி இரண்டாயிரம் வருடம் அந்த பிள்ளைபெறும் வரம் சிவபெருமான் அளித்தார். பார்வதிக்கும் பரமன் அருள்செய்தார். பெண்ணேயவரருகே போவேமென உரைத்து சிவன் கண்டார். சிவனும் உமையாளும் முப்பத்து முக்கோடி தேவர்களும் போற்றிநிற்க நாற்பது நாற்கோடி முனிவர்களும் பயந்து தொழுதனர். தவத்து அருமைபார்த்து மகிழ்ச்சி உண்டாக உமையாளும் அங்கே உத்தரவு சொல்லுகின்றாள். பொன்னுலனை யாண்டுமிகப் போதும் படைத்தருளி மன்னுமுடத் தேவரெல்லாம் வந்து தொழுதனர். இந்தப்படியே தவத்தைக் தொடுத்தீரே. புத்திரனில்லாச் செல்வம் போதக் கொடுத்தீரே. புற்று வளர்ந்து போத மரம் உண்டாக்கி கண்ணீர் சொழுகிறதும் கண்ணிறை காண்பாய் என்றார். சிவனாரிடத்தில் செப்பினார் பார்வதியும் உள்ளபடி சொன்னாய் உமையாவளே என்று உரைத்தார். கள்வன் இந்திரன் கடுமையான குற்றம் செய்தான் பார்வதியே அவனது மனம்படி செய்வோம். தேனே அவன் செய்த தீவினைகள் அதிகம் உண்டு. ஒன்றும் அறியாமல் உபாயம் சொன்ன தென்ன? ஆனால் உனக்காக அருள் செய்வோம் பார்த்தாயா என்றார் சிவன். உமையாளும் அங்கே அடியார் ஏதுபிழை செய்தாலும் நேயமுடன் அதை நீர் பொறுக்க வேண்டும். என்றாள். சிவன் மனம் மகிழ்ந்து வெள்ளி மலைதனிலே வீற்றிருந்த நந்தியை அழைத்து நல்லதொரு இந்திரனைக் கூட்டுவரச் சொல்லி உத்தரவு தந்தார். நந்தி விரைந்தோடி இந்திரனையும் தேவியையும் அழைந்து வந்தது. இன்பமுடன் தான் எழுந்து நந்தியின் பின்னே நன்றாய் நடந்தனர். கந்தமலர்க் குழலும் விரைந்து அடைந்தார். இந்திரனும் தேவியும் தானும் சென்ற நந்தி இருவரையும் திருவாசலில் நிறுத்திவிட்டு எண்ணம் தொலையாத இடியேருதன் முழங்கி, வண்ணக்கடல் முரசு வகைவகையாய் முழங்க சிந்தை மகிழந்து நந்நிக் கொலுவில் வந்து படிந்து வலதுகைப் பிரம்பினால் இதங்கள் அறியாத எதிர்த்து நின்ற தேவர்களை ஒதுக்கி, விலக்கி ஒருபக்கமாக நிறுத்தினார். நேரே விலக்கி நிறுத்தினார். தேவர்களை பிரம்பார் ஒதுக்கி

ஒருபுறமாய் நிறுத்தி தலைவணங்கி திரண்டெழுந்ததேவர்களை நினைத்து அடித்து ஒருபால் நிறுத்தியடின் காலன் எமதூதரையும் கடக்க நிறுத்தினார். வருணன் முதல் மற்றவரை சீராக நிறுத்தி பின் ஈசனுக்குத் தோழனான குபேரனையும் சிவபொருமனையும் பக்கத்தில் நிறுத்து விநாயகருடன் முருகனையும் நிறுத்தி, சேனை நடுபத்தியில் வீரபத்திரனையும் நிறுத்தி, மேனகையோடு ரம்பையையும் ஊர்வசியையும் நிறுத்தி - அந்த சபைதனில் நாடகங்களாடும் நாரதரையும் சிவபெருமானின் புகழைத் தேடும் நந்தி பலர் நாதர்களை மிஞ்சும் நவக்கிரக வேடிக்கையுற்றவரை அஞ்சாமல் சொல்லி அடைவதாய் நிறுத்தினார் என்பதை காண்போம். காளிகளையெல்லாம் நிறுத்தியபின் சத்த முனிவர்களையும் கங்கையுடனே நிறுத்தி மற்று முள்ளவர்களை வகையாகத் தான் நிறுத்தி விருப்பமுடன் நந்தி விண்ணுலக வேந்தன் இந்திரன் கிட்ட வந்து சிவபெருமானின் பாதங்களை வணங்குவர் என்று சொல்ல அந்தபடியே சிவபெருமான் முன்பு சென்று புகுந்த இந்திரனும் தேவியும் காலில் விழுந்து மலர்களால் போற்றி செய்தனர். மனம் மகிழ்ந்து சிவனார் எழுந்து நின்றார். திருமால் மொழி கேட்டு தேவியுடன் இந்திரனும் எழுந்து நின்று கைகட்டு எதிராக நிற்க வந்த கருமத்தை வகையாகச் சொல்லுமென இந்திரனும் அப்போது இயல்பாகச் சொல்லுகிறான். மகன் இல்லாமல் பொன்னுலகை ஆண்டிருந்தேன் புத்திரனில்லாமல் எத்தனைதான் வாழ்வு இயங்கப்பெற்றாலும் புத்திரன் இல்லாதே புலை நரகில் போவேனோ, சந்ததிதான் தாருமென இந்திரன் கேட்டதற்பின் இந்திரனே சந்ததி தந்தேன் என்று உரைத்தார். சிவனின் சொற்படி சந்ததி கிடைத்து. இந்திரனும் இந்திராணியும் இன்பமுடன் மீண்டனர். அவ்வாறு திரும்பி இந்திரலோகம் சென்று கொண்டிருக்கும் வழியில் ஒரு அற்புதம் நிகழுந்தது. காமதேனு நல்ல பசுவை கயிலை மலைக்கு வரவழைத்து பசுவின்முகம் பார்த்து சிவபெருமானின் அருள் புரிந்தான். சந்ததி இல்லாமல் போகும் இந்திரனுடன் உன்னை அனுப்புகிறேன். செல்வாய் என்று சிவபெருமான் கூறினார். அன்புடனே நீ போய் அங்கிருந்து தான் வளர்த்து பாலகனை ஈன்று பாங்குடனே கொடுத்து வந்துவிடும் நீயும் மாதே ·இளம் பசுவே என்று சிவனார் கூறினார். சீவனைப் பார்த்து நெடுமூச்சுதான் உறிந்து தோத்திரங்கள் செய்து என்னுடல் என்றது. மேலும் பூலோகம் சென்று புத்திரனை ஈன்ற பின்பு எனக்கு மோட்சம் கதி எப்பொழுது என்று காமதேனு சிவனிடம் கேட்டது. அப்போது சிவபெருமான் சிவனே வருத்தமேலியாதே புத்திரன் ஈன்றவுடன் பூந்தேர் அனுப்புகின்றோம் என்று சிவனார் உளதாரக் கூறினார். அந்த பரமசிவனார் அன்பு விடைகொடுத்தார். பசுவும் மேயும்போது பரமன் அருட்படியே இடியும் கடலும் போலெங்கும் அதான் முழங்க அவரடியின் பின்னே அலறித் தொடர்ந்ததுலே.

விருத்தம்

அந்த நற்கயிலைவாசன் அருட்படியே காமதேனு இந்திரன் பின்னே நல்ல அளங்கன்று வேடங்கொண்டு பத்து பேர் குதித்து மெல்லப் பாரினில் வந்தது. வந்தபசுவை இந்திரன் துதித்தார்

வசனம்

கயிலங்கிரி வாசரான பரமேஸ்வரர் காமதேனுவாகிய பசுவைப் வரவழைத்து தவஞ் செய்கிற இந்திரன் இந்திராணிக்கு நீ போயிருந்து ஒரு புத்திரனை ஈன்று கொடுத்து வரவேன்று உரைத்தார். அப்பொழுது அப்பசுவானது எனக்கு மோட்சகெதி எப்பொழுது என்று கேட்க அதற்கு சிவபெருமான் புத்திரனை ஈன்று கொடுத்த உடனே உன்னை இவ்விடம் வரவழைத்துக் கொள்வோம்மென்று சொல்லி விடைகொடு;தார். அதனால் இளங்கன்றாக வேடம் கொண்டு அண்ட புவனங்கள் ல்லாம் இடி முழங்கும்படி இந்திராணியும் இந்திரனும் போன வழி தடம் நோக்கி அவர்கள் இருவரையும் கண்டு விபரத்தைக் கூறியது. அதனால் அவர்கள் இருவரும் பசுவாகிய கன்றைக்கண்டு ஈசனும் பார்வதியும் அனுப்பியதைக் கண்டு அப்பசுவை முத்தாட்டு ஆனந்தத்துடன் கூட்டுச்சென்றார்கள்.

நடை

ஈசனும் பார்வதியும் அனுப்பிய கன்றை வாரியெடுத்து அணைத்து அங்கயெல்லாம் குளித்து இன்று நமக்கு ஈந்தருளிய செல்வம் என்று கன்றையெடுத்து கருகவழி நடந்தார். எல்லோரும் பூமலர்கள் கொய்ததைக் கண்டனர். பிறர் எல்லாரும் மனமகிழ்ந்து கொண்டாடினர். பிரமா முதலானோர் பிரியமுடன் பார்த்து நின்றனர். நடந்து அவர்கள் இருவருமே நல்ல உலகம் என்று நோக்கி ஒருவருக்கெருவர் மகிழ்ந்து பேசி சந்ததியாக வந்த கன்றெத்தான் கொண்டு சென்றார்கள். பட்டணத்திலுள்ள எல்லாமக்களும் இந்திராணியும் இந்திரனும் ஆகிய இருவரும் சந்ததி பாக்கியம் பெற்றுவாரார்கள் என்று சொல்லி பறையடித்து புகழுந்தார்கள். பறைஓசை கேட்டவர்கள் பாக்கியம் செய்டதவர்கள் பட்டணம் சென்ற கணவன் இந்திரனும் இந்திராணியும் சிம்மாசனத்தில் இருந்தனர். அந்த இந்திரலோகத்தில் சிறப்புடனே இருந்து சுந்தரியாகிய இந்திராணியும் நன்றாக மனம் மகிழ்ந்து சிவபெருமான் எங்களுக்குத் தயவாகக் கொடுத்தகன்றை அழகான நல்ல கன்றை வளர்த்திட வேணும் என்று அங்கு உள்ள தாதியரை அழைத்து தயவுடன் உரைசெய்தான் என்பதைக் காணலாம். மானன்னையீர் நீங்கள் மகிழுந்து கொண்டாடி காட்டில் ஒட்டி விடாமல் கவனமாய் வளர்க்கனும் என்று கூறுகின்ற அந்தவார்த்தையைக் கேட்டு தாதியர்கள் போற்றினர். அப்பசுவை அவர்கள் நாள் வளர்கின்ற சந்திரன் போல அருமையாய் ஒரு நாளுக்கொரு அன்பாய் வளர்த்தனர் என்பதைக் காணலாம்.

பேரிடம் வேணுமென்று பேருக்கு முகூர்த்தம் பார்த்து பஞ்சாங்கம் பார்ப்பவரையும் பாங்காய் அழையுமென்றார். வேதப்பிராமணர்களை வேகமாய் அழையுமென்றார். சாத்திரவாதியெல்லாம் அழையுமென்றார். தபோதனரையெல்லாம் அழையுமென்றார். கட்டியக்காரர் சென்று கடிந்து மிகவாடி பார்ப்பரையெல்லாம் பாங்காய் அழைத்து வந்தார் தபோதனர் கேட்டவுடனே சந்தோஷமாக வந்தார். சாத்திவாதியெல்லாம் தானே வந்தனர் என்பதைக் காணலாம். நாளும் மூகூர்த்தம் நல்ல தினம் பார்த்திருந்தார். ஆர்பேரிடுவமென்று ஆலோசனை செய்தார். அப்பொழுது வியாச பபகவான் அருளினோடு இந்திரன் தாயார் இளங்கொடியார் தன்பெயரை இடுமென்று சொன்னபடி எல்லோரும் சொன்னார்கள் என்பதைக் காணுங்கள். ஆர்பேரிவோமென்று ஆலோசனை செய்தனர். அந்தப்படியே பெயரை அழைக்க வேணுமென்று வைகாசி மாதம் அமிர்த கணயோகம் அன்பாய் இருக்கமென்று கூறினார். அந்தப்படியே அவர்கள் மொழிதப்பாமல் பட்டணமெலாம் பதிவாயலங்கரித்து சோடித்தெல்லோரும் கொடுத்தாரே தட்ஷணைகள் தட்ஷணை கொடுத்தாரே திருபெயரை அழைத்தனர். மாச வந்தாரி என்று பசுவை வரவழைத்தனர். பசுவை அழைத்தவுடன் அனைவரும் தானமிட்டனர். மாதானம் கோதானம் வஸ்திரதானம் முதல் வாத்தியங்களெல்லாம் வரிசையாய் நின்று முழங்கின. பதினெட்டு வாத்தியங்கள் பாங்குடன் முழங்கின. நாடக கலைப் பெண்கள் நாட்டுயங்கள் ஆடினர். ஓமங்கள் பூசைகள் எல்லாம் நடந்தன. அன்பாக அன்னதானம் கொடுத்தனர். பட்டுபட்டாவளியும் சிறப்புடன் கொடுத்தனர். இதனை நல்ல பசுங்கன்றுக்காக இருபது நாள் வரை சிறப்புடன் பணியாகச் செய்தனர். பொன்னால் செய்யப்பட்ட தும்பும் புரிகயிறும் போட்டனர் என்பதைக் கண்டார். நான்கு காலிலுள்ள குழம்பில் நல்ல தொரு தங்கம் செய்துக்கட்டினர். மேனியெல்லாம் தங்க மதார=லான ஆடை வரை அழுத்தி அணிந்தனர். நவரத்தினவகையெல்லாம் நன்றாக அணிந்தனர். ஆபரணாதியெல்லாம் ஆணிமுத்து வயிரம் எல்லாம் கொம்புக்கு அணித்தனர். மேலும் நல்ல கோமேதகம் அழுத்தி அணிந்தனர். வயிரத்தாலான சிலம்பினை நாலுகாலிலும் அணிந்தனர். எல்லாமே வாரியே பூட்டி வளர்த்தார்கள். அந்த நல்ல பசுவை பாலமுதம் ஊட்டி போற்றி வளர்த்தனர். இப்படி நாளுக்கு நாள் சிறப்புடன் வளர்ந்து வந்தனர். கண்காகப் போற்றி கருணையுடன் வளர்த்தனர். நாலிரண்டும் எட்டு நாளிலே நல்ல பசுவாக வளர்ந்தது சந்திரனுடைய பிறை வளர்வது போல சீர்பெற்று வளர்ந்து பிள்ளையென்று சொல்லும்படி பெருமையுடன் வளர்ந்தது. இந்திராணி செய்யும் வகை என்னவென்று கேட்க, நத்தியப்படி நடப்பவைகளை சொல்லக் கேட்கலாம். பொய்கைசென்று நன்றாக

நீராடி, சிவ பூசை தவ பூசை சிறப்புடன் செய்து தங்கச்செம்பில் நீரினை ஊற்றி பூக்களையெல்லாம் வேண்டி அளவுக்கு கொண்டு வந்து பசுவின் பாதங்களைச் சுத்தம் செய்து மலர்களைச் சாத்தி சிவனை நினைத்து தோத்திரங்கள் செய்து வந்தாள் இந்திராணி. அவள் பசுவின் முகத்தைப் பார்த்து மனம் சலித்து நெடுநாளச்சு நீயும் என்னைப்போல நிற்கு வகையே என்று சிவனைத் தொழுதாள்.

விருத்தம்

இந்திராணி ஈசனிடம் ஐயையோ சிவனே நான் செய்யும் அறங்களில் கொடுமை உண்டோ? இந்த பூமியில் என்னை மலடி என்று வைத்து தூய்மையான நல்ல பசுவும் கூட சுரப்பிலர் மலடாய் நிற்கிறது. செய்வதில் ஏதாவது மாற்றம் இருகிறதோ என்று சிந்தை நொந்தபடி கூறினார்.

வசனம்

அது அப்படி என்றால் தேவேந்திரனும் இந்திராணியும் அதிக தவசு செய்து வரம் பெற்றனர். இந்திரன் இந்திராணியை நோக்கி வரும்போது சுவாமி உத்தரவு கொடுத்து அனுப்பிய காம மேனுவாகிய பசு தங்களிடம் சேர்ந்தது கண்டு சிவனும் உமையாளும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர். மிகுந்த சந்தோஷத்துடன் போற்றி வளர்த்தனர். நெடு நாட்கள் சென்றும் அதுவும் தம்மைப்போல் மலடாய் நிற்கிறதே அதற்கு காரணம் என்ன? உலகில் பேரெடுத்ததும் அல்லாமல் தபசு செய்ததும் அல்லாமல் பசுவும் இப்படி மலடாக நிற்கக் காரணம் என்ன? நெடுமூச்செறிந்து கூறினார். அவர்கள் இருவரும் புலம்பித் தவித்தனர். அதற்குப்பிறகு நடந்த விசயத்தைக் கூறினார்கள்.

நடை

நாம் காத்திருந்தோம் நாம் வளர்த்த நல்ல பசு தவத்தின் அருமையால் வந்த காமதேனு ஆகும். அது மலடாகி நின்று மயக்கமடைந்தது அதை பார்த்து இது விதியோ? என்று புலம்பி சொல்லும்படி இருந்தது. இந்திரரும் கேட்டு ஏங்கி முகம் வாடினார். நாகமடந்தையரோ நான் ஒன்று சொல்லுகின்றேன். இந்திரன் சுந்திரியை நோக்கி இதுவரையும் பாலன் எமக்கு வரக்காரணம் தெரியவில்லை இன்னமும் நான் போய் எங்கள் பரமேஸ்வரன் பால் தபசு செய்ய நான் போவேன். மாறாது இளங்கொடியே சங்கரனை நோக்கித்தபசு மிகச்செய்து வண்மையுள்ள கானகத்தில் சிவன் கமண்டலம் புலித்தோல் பிறம்பு கப்பறை புத்தகம் முழுவாள் முதலியன எடுத்துச்சென்றான். இந்திராணி அக்கினிரய வளர்த்து இயல்பாக அவனை அனுப்பினாள் என்பதை காண்போம். அவன் கானகத்தில் வந்து தபசு செய்ய சிவனாரை நோக்கி தவமிருந்தான். இந்திரன் கானகத்தில் தவமிருந்தான். அஞ்செழுத்து

மந்திரத்திரத்தை நெஞ்சில் வைத்து சிவனோமிக நினைத்து எவராலும் முடியாத வகையில் அதிக தவம் செய்தான். சற்றுமசையாமல் தவம் செய்த போது முப்பது முக்கோடி தேவர்களும் மூத்தோரும் நிடுபன் குபேர நிடுதி திசை பாலகரும் சந்திரரும் சூரியரும் சத்தமகாமுனியும் தேவர்கள் எல்லோரும் சேரவே மூவரையும் வணங்கி, முறைமையைச் சொல்லுகிறார். சித்தம் இறங்கும்படி சிவனையும் உமையும் வேண்டி, புத்திரன் பெறும் ஆசையால் பூமியை மறந்துவிட்டான் இந்திரன். குழந்தை வேண்டி மகாதபம் செய்கிறான் சிவனார் மனமகிழ்ந்து நந்தீசரை அழைத்து வள்ளுவனை இங்கே வரவழையும் என்று உரைத்தார். உண்மையில் சிவனார் திருவாய் மலர்ந்தருளினார். சித்திரபுத்திரனை தேடி அழையும் என்றார். சித்திரபுத்திரனை சிறப்பாக நந்தி கண்டு, சிவனும் உமையும் அழைப்பதைச் சொல்லி அவன் மனம் மகிழ்வோடு அழைத்து வரப்பட்டான். சித்திரபுத்திரன் சிவனின் பாதங்களை வீழந்து வணங்கினான். எல்லாதேசங்களிலும் விளையாடிய சித்திரபுத்திரனே கணக்கால் பெரியோனே, காரியத்தில் வல்லவனே தேவேந்திரனும் அங்கே பிள்ளையில்லாமல் திகைக்கின்றான், மைந்தனை வேண்டி வருந்துகின்றான் என்று சிவனார் கூறினார். சித்திரபுத்திரனும் செய்தி ஒன்றைச் சொல்லுகிறார் அரிய தவம் செய்தாலும் ஆனதாக இருந்தாலும் மைந்தன் பிறக்க வழியில்லையே நாயகரே என்றார் சித்திரபுத்திரன். சக்தியின் அருள்கொண்டு தவம் செய்து இருந்ததற்கு புத்திரனைக் கொடுக்க வேண்டும். பூதநாதனே என்றார் சிவன். பூமி விளையாடி வந்த புண்ணியரே தீருமொரு தீமையை குறையை நீக்குபவன் என்று சிவன் திருவாய் மலர்ந்தருளினான். பாலகராய் போய் பிறக்க பரமன் விடை கொடுத்தான். புத்திரராய் போய் சென்மமிக்கதல்ல. இந்திரருக்குப் பிள்ளை கணக்கில் எழுதவில்லை என்ற மொழியைக் கேட்டு சிவனார் மகிழ்ந்து எந்த வகையானலும் புத்திரபாக்கியம் கொடுக்க வேண்டும் என்று கூறினார். அன்புடன் இந்திரனுக்கு புத்திரனைக் கொடுக்க செந்தாமரைக் பூக்கள் நிறைந்திருக்கும் பொய்கையில் இந்திராணி வளர்த்த இளம்பசு தண்ணீர் குடிக்கும் பொழுது தாமரைப் பூவுடனும் தண்ணீருடனும் கலந்து அப்பசுவின் வயிற்றில் சென்றது அந்த அற்புதத்தைக் காணலாம். வளர்த்த பசு வயிற்றில் வரவேண்டும் என உரைத்தார். சிவபெருமானின் அருள் பெற்றேன் சுகம்பெற்றேன் என்று கும்பிட்டு எழுந்திருந்து தேவர் முனிவரையும் சிறப்பாக அனுப்பி வாய்புதைத்து நின்று மகவை மிக நோக்கினார்.

விருத்தம்

சிவனுடனே வாழும் தேவரான உயிர்க்கெல்லாம் பரமனுடன் பாவ புண்ணிய பத்திரம் எழுதவேண்டி கரமிசையுதித்த சித்திர புத்திர சிகாமணியை அருமையான அவனை ஈசன் வரவழைத்து அருள்

செய்தார். சித்திரபுத்திரனை சிவனும் வரவழைத்து பத்திரவாயில் பூவாய் என்று இந்திரன் வளர்த்த ஆவின் வயிற்றில் சென்று புகுந்து புத்திறனாய் பிறக்காயோ. என்று சிவன் விடைகொடுத்தார். எழுதிய கணக்கை நீயும் இறைவன் திருமால் வசத்தில் பழுதில்லாமல் பூமிதன்னில் பகுத்துரைத்து தெரிய வைத்தது. வழுவில்லா தொழுகநாமும் வரம் உனக்கருளிச் செய்தோம் எழுகின்ற பூமி பாரக் கணக்கையும் திருமாலுக்குக் கொடுத்தான்.

வசனம்

கயிலாச பருவத்திலும் வைகுண்டத்திலும் பிரம்ம லோகத்திலும் முன்பு தேவர்கள் முனிவர்கள் தயோதனர்கள் முதலானவர்கள் செய்கின்ற பாவ புண்ணிய கணக்கு கருவும் பார்த்து சிருஷ்டி செய்து சித்திரபுத்திரனை வரவழைத்தார். தேவேந்திரன் மகா கொடூரமாய் இந்தரமான தவசு செய்கிறதைப் பாரு என்று சொல்ல அப்போது சித்திரபுத்திரர் அவருக்கு சந்ததமில்லையே அவர் எப்படித் தவசு செய்தாலும் சிவன் எந்த விதமாகிலும் நீபோய் பிறந்து புத்திரக் குறையை நீக்கவே வேணும் என்று சொல்ல இந்திரன் வயிற்றில் பிறக்க காரணமில்லை என்று சித்திரபுத்திரர் சொன்னார். இந்திராணிக்கு நாம் அனுப்பிய காம தேனுவாகிய பசுவின் வயிற்றில் செனித்தற் குற்றமில்லை. அதற்கு சம்பு மகாப்பொய்கையாகிய தடாகத்தில் தாமரைப் புஷ்பமாய் அவதரித்தால் அப்பொழுது அந்தப் பசுவானது தண்ணீர் குடிக்கவரும் தண்ணீருடன் போய் செனத்து பிறப்பாய் உடனே மகவாருச தீரும் என்றார். பூமியில் உண்டாகிய பாவ புண்ணிய கணக்கெழுத்து எழுதி கொடுத்து எழுத்தாணியும் கொடுத்து அவ்விடத்தில் உண்டான கணக்கு கருவேலமும் மகாவிஷ்ணு வசம் ஒப்புவிக்க சொல்லிதர வரவழைத்தார். ஒப்புவித்து பின் சித்திரபுத்திரர் அவ்விடத்திலுள்ள பெரியோர்களையெல்லாம் உழைத்து சம்புமகாய் பொய்கையில் வந்து அவதரித்து கதையை இனிக் காணலாம். எந்த புத்தகத்தை எடுத்துப் போனான் கோவே. ஆயிரம் பேரானாலும் அசைக்க வெண்ணாத புத்தகத்தே ஞானநெறி நீதிமறை நன்னூலின் நீடுபுகழ் பூண்டவர்கள் புத்தகத்தை போயெடுத்துவாருமென போயெடுத்து வந்து பொற்பலகை தன்னில் வைத்தார். எழுத்தாணியுடன் பூத்தகமும் கொடுத்தார். முதற்கணக்கு பிற்கணக்கு முன்னிட்டனுப்பும்படி எக்கணக்குப் பார்த்து எழுதுமென்றார் புத்திரர். எழுதியந்த நாள் வரையில் எடுத்துக் கொடுத்தனார் என்பதைக் காணலாம். ஏழுஉலகக் கணக்கும் எழுதிக் கொடுத்து பாவிகணக்கும் பஞ்சபாதர் கணக்கையும், நகர லோகத்திலுள்ள நன்மையுள்ள கணக்கையும் பூமிதலை மாயவனார் புண்ணிய பாவ கணக்கையும் எல்லாக் கணக்கையும் எழுதிக் கொடுத்தார். ஆதிபரமசிவன் அண்டரண்டம்

வகுத்து மூத்த கணபதியும் முதுகுவலமிருக்க இளைய குமரன் இடது பக்கமிருக்க தோவாதிகளெல்லாம் சேர வேதானிருக்க முனிவர்கள் எல்லாரும் தானிருக்க சாதிபதினெட்டும் தப்பாமல் வகுத்து எமதருமநாசன் இயல்கால தூதருடன் பல்லாயிங்கோடி பகிரண்ட தான் வகுத்து புண்ணியபாவம் புதுமையாய் வகுத்து வைத்தான். பல்லாயிரங்கோடி பிகிரண்டம் வகுத்து புண்ணியபாவம் புதுமையாய்த்தான் வகுத்து அந்தவரைக் கணக்கை இயல்பாகத் தானெழுதும் வச்சிரகாயமாய் வரைந்து கணக்கெழுதும் பத்திரமாயதிகாரம் பலநாளும் உந்தனுக்கே தப்பாமல் உந்தனுக்கு தந்தோமென உரைத்தார். சந்திரசூரியர்கள் தங்கவொளி ஆபரணாதியெல்லாம் அழகழகாய் பூட்டி சிவனாரிடத்தில் அன்பாக விடைபெற்றார். எண்ணாயிரம் பூதம் எடுக்கின்ற எண்ணாத பட்டோலை சூட்டிச் சமைத்து கொடுத்தார்கள். கட்டுச்சுருட்டி கக்கத்திற்றானிடிக்குத் தாங்குவாயென்று தானே வரம் கொடுத்தார். தாமரைப் பூவாக ஸ்தாபித்தார் உத்தமரை சித்திரைக்குச் சித்திரை சிறந்த பௌர்ணமியில் அந்த தலைக்கிழமை யாதித்த வாரமதில் சித்திரபுத்திரனாய் சென்று அவதரிப்பாய் என்றார். புத்தகமும் நூல் கூடப்பிறக்கும் என்றார் சிவனார் அருள்பிடிக்கு சிறந்த விடை பெற்றார். அயிராவதங்கள் என்னும் ஆனைகளைப் பூட்டும் ஆகாதத் தேரும் அப்போதுதான் கொடுத்தார். ஆகாசத்தேரில் அப்போது ஏறி வாராரே உத்தமனார் என்று பாவிதனை நோக்கி செண்பகங்களாடும் அந்த சிறந்ததொரு பொய்கையிலே முத்துக்கள் வந்து முழங்கும் குளத்திலே சங்குகள் சூலம்கொண்டு தவழும் அந்த பொய்கையிலே கருடன் கூடி கொண்டாடுமே தாராக்கள் அமர்ந்திருந்து ஆடும் பொய்கையிலே வானரங்கள் மகிழ்ந்து விளையாடுமே மாடப்புறாக்களெல்லாம் வரிசையாக இருக்குமே. புனுகுடன்பிள்ளை பொருந்தி மிகு வாழும். சவ்வாதுடன் பிள்ளை தானமிகு வாழும் கஸ்தூரிபிள்ளை கலியுமந்த பொய்கையிலே கவரிமான் வந்து கலந்து விளையாடும் காண்டாமிருகம் குதித்தாடும். குளத்தில் பூக்கள் உண்டு. கனிவகைகள் எல்லாம் காய்க்கும் செந்நெல்விளையும் மல்லிகை, முல்லை, சிறுபிச்சிக்கும், இருவாட்சிபிச்சி, மருக்கொழுந்து முதலிய மணங்கள் வீசும் பொய்கை ஆகும். ஏலம், கிராம்பு, சாதிக்காய், பத்திரி முதலியன பொய்கையில் விளங்கும், வண்டுகள் தும்பி முதலியன மரத்திலிருந்து வந்து மலர்களில் தேனை உண்டன. மந்திகள் பாய்ந்து மது உண்டன. அந்த குளத்தில் செந்தாமரைப்பூத்து சிறப்பித்தன. அல்லிமலர் அப்படியே பூத்தன சந்திர சூரியர்கள் அப்பொய்கையில் உதிர்த்தன. ஆதியில் வந்த பிரம்மா அதில் நீராடினார். நாராயணர் முதல் நல்ல முனிவர்களும் ரிஷிகளும் அக்குளத்தில் முழுதும் தன்மை பெற்றனர். கன்னியர்கள் எல்லாம் கலந்து விளையாடுவர் பழவினைகள் எல்லாம் பரந்து

ஒடும். தீவினைகள் எல்லாம் திடுக்கிட்டு ஒடும். பனிகள் முதலாக பிற்கட்டு ஒடும். கிழவர் முழுகினால் பாலகராகிப் பிறப்பார். இந்த விதமாக இருக்கும் அப்பொய்கையிலே சித்திரபுத்திர் சீராக வந்து உதித்தார். தாமரைப்பூவாக வந்து அவதரித்தார் இனிமேல் நடக்கும் இக்கதையைக் கேளுங்கள். ஏலக்கருங்கிழலாள் இந்திராணி தனக்கு நித்திராதேவி நிறையவே படித்து பஞ்சனை மெத்தையினில் சயனித்தாள். அப்பைங்கொடி அப்போது சொர்ப்பனங்கள் அழகாகக் கண்டாள். அவள் கண்டு மகிழ்ந்து திடுக்கெட்டு எழுந்தாள். தாதியரை அழைத்து எடுத்து உரைத்தாள். இந்திரனைப் போல மடிமீதில் சந்திரர்கள் சூரியர்கள் தங்க ஒளியோலச் செம்பொன் எழுத்தாணியுடன் சேர்ந்து அமைந்த பிள்ளை போலிருந்தாள். பசுவிடம் நல்ல பால்கரக்கக் கண்டாள். காயாத வாழை காயவும் கண்டாள். இன்பம் பெருகி இருதோளும் பூரித்தார். கொட்டைப்பலாமரமும் கொழுந்துவிடக்கண்டாள். பதினாலுலோக முதல் பண்பாய் கணக்கெழுதக் கண்டாள். கைமேல் பசிக்கவென்று வேழமுகத்து விநாயகனை வேண்டிவிட்டு மயிலேறும் பெருமாளை மனம் மகிழந்து கொண்டாடி மூவரையும் அங்கு முழுவது கண்டு வணங்கினாள். சூரிய பகவானைத் தோத்திரங்கள் செய்யலுற்றான். கண்ட கனாவும் அப்படிய இருந்தது. காசினியிற் கொண்டாடி குணடலங்கள் மின்னக்குமாரன் வந்து தோன்றுவதால் பொறகன மாரி பொழிந்திடும். எல்லோரும் சிவனார் பாதம் ஏற்கப்பதிந்து நின்றார். இந்திராணி வளர்த்த இளம்பசுவை தும்புதரித்துவிட்டார். சூரியனும் அப்போது கட்ட விழ்த்துக் கொண்டு உடனே புறப்பட்டது. இந்திராணியம்மையாகிய இளங்கோதையும் ஓடிவந்து முந்தி முகந்து முகத்தை முகந்தடவி நான் மலடி என்று நாடெல்லாம் அறியும் - என்னோடு நீ மலடாகாமல் இனத்துடன் நல்ல இன்பமுற மேய்ந்திடுவாய் வனங்களில் வளர்கின்ற மிருகம் அதிகமுண்டு இனத்தாரைவிட்டு இனம் பிரிந்து மேயாமல் எல்லைக்கடவாமல் இளம்பயிரைத் தின்னாமல் ஈணாகசாலி விளஞ்சாலித் தின்னாமல் சூலேயோடு கண்டால் சுற்றியே மேயாதே. எள்கடுகு நாய்கடுகு முதலிய செடிகள் ஏறிட்டுப்பாராதே. கன்னிகளைத் தின்னாமல் கண்ட புல்லை மேயாதே. இத்தனையும் நீக்கி இதமாகத்தான் மேய்ந்து மாலைக்கருகருத்து மையிருளாகு முன்னே எல்லைக்கு வந்து விட வேண்டும் என் மகளே என்றாள் இந்திராணி. இந்தப்படியே இசைந்து சொல்லி மேய்ந்து வாவென்று சொல்லிவிட்டாள் பசுவை. மேய்ந்து வருவதற்கு மெய்குளிர்ந்து அந்தப்பசு சிலம்புகலகலென செஞ்சலங்கை ஓசையிட ஆபரணத்தோடே அசைந்து விளையாடியது. அடிமேல் அடிவைத்து அன்னம் போல் நடந்தது. காட்டோடு சென்று விசைந்து மேய்ந்து பொற்புல்லும் தின்று பின்புல்லும் தானுருகி தண்ணீர் தாகத்தை

தான் பொருக்கமாட்டாமல் கண்ணாயிரமுடைய காவலனை சோலையிலே இந்தப்படியே இருக்கிறது. சிவனார் அங்கு சிந்தை மகிழ்ந்து அலைமோதும் கடலிலே உதிக்கும் ஆதிபகவானை விரைந்து அழைத்து தேவேந்திரனுடைய தேவி பிள்ளையாக வளர்த்த பெரிய தெரு பசுவும் சம்பத்தலத்திலிருக்கும் சோலையிலே திருத்திசை தெரியாமல் நிற்கின்றது பார் வழித்தாய் காட்டி வரும்போது குளத்திலே தண்ணீர் குடிக்கும் தருவாயில் நீ செந்தாமரைப் பூவை சிறப்பாக முன்னிடுவாய் என்றார். உடனே ஏற்றபகவானும் திகைத்த பசுவுக்கு தெரியவழிக்காட்டிட வழியின் மடியே வந்தகவே நல்ல பசுவும் சம்புமகாப்பொய்கை தன்னருகே வந்து நின்றது. பொய்கைதனைக் கண்டு பூவித்து தேகமெல்லாம் சுற்றிவலம் வந்து துய்யநற்பசுவும் தங்கப்படித்துளைக் கண்டது. புதுமைகளையெல்லாம் பார்த்து பூரித்து இருதோரும் ஆவலுடன் தண்ணீர் அருந்தும் அந்த வேளையிலே தப்பாமல் தாமரைப் பூ பரித்து போடரே அதை தின்றது அப்பசு. அதனால் பொறிகலங்கி சூலாகி வாள் வீசிக்கரையேறி மயங்கியே சூளாகி முட்டுகளை அசைத்து முகம் குழைத்து வாயில் நுரை திரண்டு மயிர்க்குச்சுத்தான் தெரிந்தது. முட்டி மணங்கி முன்வயிறு தள்ளி நாலுதிக்கும் பார்த்து நடு நடுங்கி வழி நடந்து காது மடைத்து கண்ணுமிருளாகி சிவனார் மீது தோத்திரங்கள் செய்தது. எல்லைதனில் வரவும் ஏங்கி மிகத்தளர்ந்தது. செட்டியார் வீதியிலே சென்று காலை ஊன்றிப்படுத்தது. பல பேர்களும் ஓடி வந்து நாடாளும் இந்திரர்க்கும் நாக மடந்தையர்க்கும் தேடாத்திரவியாமாக சிறக்கும் தேவியம்மாவாக வந்தது. மயிலே நீ போகும் பாதையில் மலைநாகம் தீண்டியதோ? மாயமான் மிருகன் வளைத்து முட்டிதோ? நச்சுப்புல்லுத் தின்றதுவோ? நாகம் கடித்ததுவோ? என்று புலம்பி எல்லோரும் ஓடி வந்து விழித்துப்பார்த்து மேல் தடவி நீவிவிட்டனர். செட்டிச்சீகளெல்லாம் ஓடி வந்து சந்தனக்கும்பாவை எடுத்து வந்து பசுவின் உடம்பெல்லாம் பூசி விட்டனர். அப்போது ஒரு தாதி ஒரு வார்த்தை சொல்வாள் பசுவின் வடிவம் இல்லை. அது பாலன் வடிவம் என்று சொல்லி கழு நீரும் கலந்து குடிக்க வைத்து சந்தனமும் பன்னீரும் தானும் பூசினான். ஆலவட்டம் கொண்டு அருகிருந்து வீசினான். சுத்திரை கட்டி சூழவே காத்திருந்தனர். தாகம் தெரிந்து தான் விழித்துப் பார்த்தவுடன் பசுவின் வயிற்றிலிருக்கும் அந்த பாலனுக்கு சிறப்பாய் வந்திருக்க வேணும் என்றார்கள் செட்டிச்சிகள். அப்பொழுது எழுந்த அந்த பசு செம்பொன் மணி மண்டபத்தில் சேரவேணும் என்று ஆசாரமேறி அசையாமல் மணி அடித்தது. தங்கமணித் தூணோடு சார்ந்ததைப்பார். அது இந்திரனார் தேவி இளங்கோதை தான் கேட்டு அசையா மணியை அசைக்க வந்த காரியம் ஏன்? என்றாள். இந்திரரும் போனார்

தவத்துக்கே என்று சொல்லி எந்தவிதமோ தெரியவுமில்லை பாருங்கள் என்று சில தாதியரை விட்டாள் என்பதைக் காண வேண்டும். அந்த பொற்கொடியால் சொல்கேட்டு போனார்கள் தாதியர்கள். வந்து பார்த்து மறுபடியும் சொல்லுற்றார்கள் நாகமடந்தையரே நல்லதெரு தேவியரே வளர்த்த பசு மயங்கி கிடந்தது. எண்ணம் தொலையாத ஏற்ற பசுக்கள் உண்டு. எந்த பசுவென்று கண்டீர் ஏந்திழையீர் சொல்லுங்கள். கண்கள் பவளமுமாய் கண்டவர்க்கு நல்லூவாய் விளங்கும். நெற்றியிலே வெள்ளையுமாம் நிறமெல்லாம் பொன்னிரமாய் தோன்றியது என்று தாதையர்கள் சொன்னார்கள். அந்த மொழி கேட்டு இந்திராணி ஏங்கியே ஓடி வந்தாள். சிங்காதனத்தைவிட்டு திரும்பியே ஓடிவந்தாள். காறாவினன் அண்டையிலே கதறியே ஓடி வந்தாள். தேனே மரகதமே தியக்கம் வந்த காரியமென்ன? மானே மரகதமே மயங்கியது என்ன காரியம்? என்று துயத்துரன் இந்திராணி சொன்னாள்.

விருத்தம்

அந்தனன் அடைந்தது உண்டோ? வானுரை தவிர்ந்தது உண்டோ? நிந்தையாய் பெரியோர் முந்நூல் நெறிமுறை தவறினோமோ? கந்தன் மாலயன் வேறென்று கருத்தினில் நினைத்து உண்டோ? உந்தன் முன்னோர்கள் செய்யாத ஊழ்வினை முடிந்தவாரே

நடை

மானே உனக்கு வஞ்சனைகள் செய்தது உண்டோ? கொள்ளிக் கண்ணியான கொடும்பாவி பார்த்தாளோ? மலை மீது ஏறி மலைப்புல்லு தின்னும் போது விஷங்கள் கடித்ததுண்டோ? உந்தன் திருமேனி உள்ளடைந்து வாடுவது ஏன்? என்று எந்தனிடம் கூறுவாய். இந்த விதி வருமோ அறியேனே என்று சொல்லி, குங்குமம், சந்தனம் கூட்டிக் குழம்பு செய்தூ செங்கையில் வாரித் திமிர்ந்த நாளே ஆகும். அப்போது கூட தீரவில்லை மயக்கம். உத்தமியாள் காடிக் கழுநீரும் கஞ்சியும் தான் கலந்து விட்டபொழுது குடித்தது அந்த நல்ல பசு பாரக்களைத் தீர்த்து பார்த்துதேயந் நேரம் கண்கள் மனதையருவருக்கும் பூமியைப் பார்த்து பொறிகலங்கி சீறி நீற்கும் ஆனந்தமாகி அதிர நடனமிடும். சிவசிவா என்று திகைத்து நெடுமூச்சு விட்டது. அரகார என்று அலறுமதைக்கணடு தேவி அங்கே திகைத்து பேசினாள். பசுவுக்கு வந்த நோயைப் பார்த்தறிந்து சொல்வோரைக் கூட்டி வரவேண்டும். என்று கோதையிலான் அயர் இடையரை அழைத்து ஓடிவந்தார்கள் அவர்கள் பசுவை மதியோடே பார்த்தனர். அவர்கள் ஆரமுலைப் பசுவும் அங்கிமிகச் சுலாச்சு இன்று அல்லது நாளை அது ஈனும் அந்த மயக்கம் தான் இது. என்று தோகைமயிலான

இந்திராணிக்குக் கூறினார்கள். பசுவின் மயக்கத்தைப் பார்க்க முடியாது கோவிற்கால் தன்னிற்கொண்டுவா என்று உரைத்தாள். தாதியர்கள் கூடித்தானெடுத்து கொண்டுவந்து விட்டார்கள். பசுவுக்கு முன்பாக சூழ நிறைந்து தூயமிடம் பண்ணுவித்து வாய்த்தபரிகாரிகளை வரவழையும் என்று உரைத்தாள். பரிகாரிகள் வந்து பணிந்து வணங்கினர். பசுவைப் பிழைக்க வைத்தால் கோடிச்செல்வம் கொடுப்பேன் என்றாள் அது கேட்டு பரிகாரிகளும் காட்டு மருந்தும் கருமருந்தும் தர ஓடினர். சிவனை நினைத்து தோத்திரங்கள் இந்திராணி செய்கிறாள். அபயம் பயம் என்றாள் அல்லலை உழிப்பாய் என்றாள் செங்கை சிவப்ப திருவயிற்றில் அறைந்தாள். அய்யோ கோ என்று அடித்து விழுந்து அழுதாள் அப்போது அதனை சிவனும் அங்குள்ள தேவர்களும் கயிலாசமீது இருந்து கண்டார்கள். வானுலகந்தன்னை வழிதிறந்து பார்த்தனர். வைகுண்ட லோகம் வழி திறந்து பார்த்தனர். அணியாயமோ என்று அலறியழுத குரல் மகா தேவர் தானும் மனதாரக் கேட்டார் அங்கே சிவபெருமாள் திருவாய் மலர்ந்தருளினார் சிவபெருமான் ஈஸ்வரியின் முகம் நோக்கி உமையே நீ போய் புகழ்ந்து குறிசொல் பத்தினியாய் சென்று பகுத்துரைப்பாய் என்றார் அதனால் உமையாளும் சிவனாரின் சொல்படியே சென்றாள். உமையாள் கொக்கின் இறகெ கூடினாள். குறமாது போல தன்னை மாற்றினாள். பொற்கூடை, பொற்பிரம்பு, பொற் குடுக்கை முதலியன் எடுத்து பாடி நடந்து வந்தாள். நல்ல குறத்தியாக பார்வதியாள் மாறினாள். பாடினாள் பரமனருதாள் பணிந்து பாடியிருந்தவளைப் பார்த்து இறைவனை சிவன் குன்று மலைச்சி, கொடிச்சி, கொடியிடைச்சி, வள்ளக்குறமாது மலையரசன் மாமகளே என்றார். அவரைத் திகைத்துப பார்த்து ஏற்ற குறி சொல்லுகிறார். அப்போது குறிகளும் மண்ணும் சுமந்ததுண்டு மரத்தாலடியுமுண்டு சிறுதொண்டர்பிள்ளைக் கறிவுண்ணப் போன துண்டு.

மண்டோதரியுடனே வாள் அரக்கன் மாளிகையில் கூடியே வந்து குழந்தையாகப் போனதுண்டு. ஆரூரில் சோழன் அருமை மகனே என்று தேரூர்ந்து கொன்று எழச்செய்தது உண்டு. பின்னாளில் ஒரு மைந்தன் பெருவஹிரோடு அன்னைப் பிதாவுக்கு முன்னே வந்து பிறந்தான் என்றாள். இப்படி நல்லக்குறி இசைவாகச் தோணுது என்றாள். அப்போது சிவனும் உத்தமிக்கு அருள்ந்தார். கொச்சைக் குறத்து குறிபார்க்கும் குஞ்சி சிற்றிடைச்சி கழுவிலிருந்து கை காட்டினார். உமையாள் அவர்களை நோக்கி தங்கையரே உழுது திரிந்த பன்றி உங்கள் அண்ணன் அல்லவோ? ஆச்சியர் வீட்டில் அடிபட்டு கட்டுண்டு வெண்ணெய் திருடியுண்டவன் தங்கையல்லவோ? என்றாள். புன்னை மரத்திற் போபொறித்தார் தங்கையல்லவோ? என்றாள். இருபேரும் ஏற்றபடி கொண்டாடினர்.

சந்தோஷமாக விசன் உமையாளுக்கு விடை கொடுத்தார். திருவாபரணமெல்லாம் பூட்டி சிவனாரும் போய் வாரேன் என்று புனிதர் விடைபெற்றாள். மாதவும் அப்பொழுது வானுலகிலிருந்து விட்டிறங்கி தேவேந்திரலோகம் சென்றாள். குறமாதாகிய உமை, வானவர்கள் வாழும் கோவிலுக்கு வந்தாள். இந்திராணியம்மை எங்கிருக்கிறார் என்றாள். அதுகண்டு இந்திராணி ஓடி வந்தாள். வாராயே குறமாதே வந்தேன் என்று உரைத்தாள். இந்திராணி குறத்தியை நோக்கி பாராய் குறத்தியம்மா பசுவைப் பிழைப்பித்தால் வேண்டியதெல்லாம் தருவேன். விதவிதமாய் கொடுப்பேன் என்றாள். உடனே குறமாது உடை இந்திராணிக்கு குறிசொல்ல ஆரம்பித்தார். இந்திராணியை நோக்கி ஆசனங்கள் போட்டு அடிபணிந்து கேட்கவேண்டும் என்றவுடன் குறமாது உமை புன்சிறிப்பு கொண்டருளினார். விநாயகபூசை செய்ய வேணும் என்று சொன்னாள், வேண்டியதெல்லாம் வேணும்படி குவித்தாள். விநாயகனை நினைத்தாள் வெள்ளிமலைக் குறத்தி கணபதியும் அக்குவர கனமாய் படைத்தாள். உருட்டித் திரட்டி ஒரு உருண்டையாய் பிடித்து கவளம் கொடுக்க கணபதியும் வாங்கிக் கொண்டார். சிங்கியடித்து சிரித்தாள் குறமாது கேளாயோ என்குறியும் கேவலமாக எண்ணாதே. எந்தன் குறிதானும் எள்ளவும் தப்பாது. செங்கை வடிவேலனென சிறுமைந்தன் பார்த்தாயா? மூத்தமகன் அந்த மூர்த்தி விநாயகர்தான். கந்தன் மருமகள் வள்ளிதான் மாமி கங்கை நதியாக இருப்பாள். சடை ஈசருடைய பத்தினியாவாள். பரமேசுவருடைய பார்வதியும் நான் தாண்டி. உன்னுடைய சிந்தையிலே நினைத்தபடி சொல்லுகிறேன். வானுலகமாள உனக்கு மகன் வருவான். அன்புடனே கேட்பாய் இந்தப் பிறவியிலும் அடுத்த பிறவியிலும் ஆன எனது குறிகள் தப்பாது. இரத்னமுடிசூடி நல்ல மைந்தன் வருவான். பெற்றிடுவீர் இப்போது பெருமாள் திருவருளால் கண்ணிறைந்த பாலகனார் கணக்கெழுதத் தோன்றுகிறார். நீலகண்டர் அருளால் நினைத்தபடி கிடைக்கும். வளர்த்த பசு வயிற்றில் மைந்தனாய் வந்து தோன்றுகிறார். சித்திரைக்கு சித்திரையில் சிறந்த பவுரணையில் அத்தன் தலைக்கிழமை யாதித்தவாரமதில், புத்தகமும் பூநூலும் பொருந்திய பொற்குண்டலமும், ஆயிரங்கிங்கிலியர் அசைக்க முடியாக புத்தகமும் எழுத்தாணி கைப்பிடித்து பிறப்பாண்டி என்மகனே. உத்தளமாய் வெண்ணீரும் ஒளிருந்திரு அழுதாய் சித்தரார் புத்திரர் வந்து செனிக்கிறார் மாமயிலே. பூலோகம் ஆளப்பிறக்கிறார் பொறற்கொடியே எறும்புகடையானை தலையெல்லாம் எழுதவல்லார். புத்தகமுந்தன் தண்ணிற் புகழ்ந்தெழுதும் புண்ணியனார். அருளும் சிவனுக்கு, ஆன மகா விஷ்ணுவுக்கும் வகுக்கும் பிரம்மாவுக்கு வாழ்விக்கும் லட்சுமிக்கும்

கணக்காய் இருந்து காரியமெல்லாம் பார்ப்பார். இப்படியாரு இடுப்பான் என்பதைப்பார். ஏந்திழையே அரனார்கருவேரம் அவர் கையில் இருக்கும்பார். இந்திராணி மாதே இக்குறி பொய்யாகாது என்ற குறமாது உமை இந்திராணியிடம் கூறினாள். இன்பத்தோடு குளிர்ந்து இருதோரும் பூரித்து கும்பல் கும்பலாகப் பொன் குவித்தாள். அப்பொழுது அவள் முகம் பார்த்து உன்னுடைய அன்பு இருந்தால் போதும் இனி பொன்னும் பணமும் புலையன் படைக்கிலையோ. நிரை நாழிமுத்தை நேரே கொடு என்றாள் மங்கைரே போய் வரரேன் மகாதுயரமும் தீர்ந்து மகனுடனே நீயும் மகிழ்ந்து வாழ்ந்திருப்பாய் என்றார்.

விருத்தம்

உமையாள், குறிகள் சொல்லியுரைப்படி முடியுமென்று இந்திராணிக்கு மனதைத் தேற்றி வரத்தைக் கொடுத்து சிவனிடம் சென்றாள். உமையாள் நடந்தது எல்லாம் உரைத்து விட்டாள்.

நடை

அப்பால் நடக்கும் அதிசயத்தைக் கேரும் என்றார். நாகமடந்தையருக் நல்ல குறி சொன்னாள். பசுவின் வயிற்றில் பாலன் பிறப்பான் நிச்சயமாக எண்ணி நினைவுதன்னை விட்டான். கொலுச் சொப்பு மண்டபத்தில் கோதையராகிய இந்திராணி வீற்றிருந்தாள் வானம், பூலோகம், மண்டபூமி முதலியன எல்லாம் சிறப்பிக்க வேணுமென்று சீரான வள்ளுவனை அழையுமென்றார். அழையுமென்று போதே அழைத்து வந்துவிட்டார்கள். பசு வயிற்றில் இப்போது பாலன் பிறக்குதென்று, ஏழு உலகத்திலுள்ளோருக்கும் எல்லோருக்கும் அறிந்தனர்.பறைசாற்றும்படி பைங்கொடி இந்திராணி கூறினாள். வள்ளுவரின் அப்போது வாகாய் பறையரைந்தான் தெரு வீதிகளெல்லாம் சிறக்க பந்தளிட்டனர். முத்துவளைத்து முகப்பந்தலிட்டார்கள். வயிரக்கால் நாட்டி வகைவகையாய்த் தூண் நிறுத்தினார்கள். தங்கத்தாலோடு செய்து சதிர்ப்பந்தல் போட்டார்கள். பவளத்தால் காலும் பண்பாக நிறுத்தினார்கள். விதவிதமாய்ப் பந்தல் வேடிக்கையாய் செய்தார்கள். இந்திரன் நற்சபைக்கு எதிரான தென்புறத்தில் அன்பது காதம் பரப்பில் அகலமுள்ள பந்தல் ஒன்று செய்தார்கள். தங்கத்தால் கால்கள் விதவிதமாய் நிறுத்தினார்கள். நவரத்தினத்தாலே நன்றாகத் தான் அழுத்தினார்கள். இவ்வாறு சித்திரவிஸ்காரமாய் செய்யவேணூம் என்றார் இந்திராணி பத்திபத்தியாகப் பண்பாக செய்ததைப்பார். தேவாதிவேதரெல்லாம் சிறக்கவே வந்திருந்தனர். முனிவர்களெல்லாம் முக்கியமாய் வந்தனர். அந்தணர்கள் எல்லோரும் அப்படியே வந்தனர். சங்கீதம் மேளம் எல்லாம் தப்பாமல் வந்திருந்து பட்டணத்திலுள்ள பரிசனங்கள் வந்திருந்தனர். வகைவகையாய்ப்பத்தி வகுக்க வேணும் என்றாள். பந்திபந்தியாக பண்பாக செய்யும் என்றாள். அந்தபடியே அடைவாக

செய்யலுற்றார். பிள்ளை பிறக்கப் பெருமுகூர்த்தம் வந்தது என்று ஏழு உலகம் அறிய இடிபோல் முரசடித்தனர். வாருமென்றபோது வள்ளுவனும் பறை சாற்றினான். தேவர்முனிவர் சிறக்கவே வந்தனர். தபோதனர்கள் முதலியோர் தப்பாமல் வந்தார்கள். ரிஷிகள், அந்தணர்கள் எல்லாம் அப்படியே வந்தார்கள். பட்டணத்திலுள்ள பரிசனாங்கள் வந்தார்கள். கூன், குருடு, அவரவருக்குகெல்லாம் மயிராணியப்போது தானங்கள் வாங்க வந்திருந்தார்கள். வந்த பேர்கிளெல்லாம் வடிவாசனம் கொடுத்து திருமஞ்சனங்கள் சிறப்பாகக் கொண்டு வந்தார்கள் மாணிக்கச் சங்கு வலம்புறத்தே நின்றூத வேதப்பிராமணர்கள் வேதங்கள் தானோதினார்கள். மங்கயைர்கள் வந்து வாழ்த்தி குறவை பாட்டார்கள் கன்னியர்கள் எல்லாம் காவலாய் சூழந்து நின்றார்கள் அங்கயர்க் கண்ணம்மை அருகிருந்து கைகொடுத்தார் பார்வதியம்மை பண்பாக வந்தார் பார். பொன்னின் கலமேந்திப் புறப்பட்டாள் பூமாது. மன்னர் பெருமான் வரகிற அதிசயங்கள்.

நயினார்சிறப்பு

ஆயிரம் கிங்கிலியர் அசைக்க வொண்ணாதப் புத்தகமும் பொன்னியெழுத்தாணியும் பொற்பாகக் கைப்பிடித்து வந்தார். காதில் இரு குண்டலம் கனக்கவே பூட்டினார்கள். சிவன் திருமால் ஆவின் வயிறுவிட்டு பொன்னின் தலத்திற் பிறந்தார். புகழ்வீர் மின்னொளிபோலே வெளிப்பட்டார் உத்தமனார். பூமி வழி சிறக்கப் போர் வேந்தர்க்ள வந்து துதித்தார்கள் பாவ புண்ணியங்கள் பதிந்தெழுதவந்து துதித்தார்கள். ஏடும்பிடித்து இடது கையில் வெண்ணீரும் காதிலேயிட்ட கவரிமணி குண்டலனார். காரிந்திரன் மைந்தர் கணக்கவே என்பாரும், எந்த உலகிலிருந்து வந்தா என்பாரும் பிரமாவே என்று பெருத்த மொழி உரைத்தார். திருவழகைச் சொல்லத் தேவரால் கூடாது. எல்லாக் கணக்கையும் எழுதவென்றுதான் பிறந்தார். நமசிவாய என்கிற நாமத்தை சித்தமுடன் உச்சரித்தார். எமனுக்கு அதிகாரி நான் என்ற சத்தத்துடன் சித்திரபுத்திரர் சிறப்பாக வந்து உதித்தார். தெய்வ லோகப் பெண்கள் சிறக்கவே குறவையிட்டார்கள். கன்னியர்களெல்லாம் கனத்தகுறவையிட்டார்கள். பதினெட்டு வாத்தியமும் பாரெங்கும் முழங்கின. பூமாரி எங்கும் பொழிந்தார்கள் எல்லோரும் தேவர் அமிர்தத்தை திருசங்கில் ஏந்தினார்கள். சேனையும் சிவனும் உமையாளும் கொடுத்தார்கள். இந்திராணியான இளங்கோதை தீர்த்தமானாள் பட்டையிட்டு பகவானை வணங்கினாள். பிள்ளையைவாரி முகத்தோடு முத்தமிட்டாள். அப்போது பச்சுடம்பாக மேனியெல்லாம் ஆனது. பைங்கொடிக்கு. பாலுமுலையிரண்டும் சுரந்தது. தான் பெற்றது போல தாதிகையர் போனாள். கனமாகவுள்ளதெல்லாம் கூட்டியே

தானும் கொடுத்தாள். கோதைக்கு அப்போது அவ்வையாரும் அங்கே ஓடி வந்து மைந்தனை கையாலெடுத்து மடி மீது வைத்து கைகால் துருவி வாயிற்செவி மூக்கெடுத்து, சேரனை எடுத்து சுரி குழலால் கைமாற்றினாள். தொப்புளறத்து குலவை ஈரந்து வட்டியினையாடை தான் போட்டு பஞ்சாடைக்குள்ளே பலகையைத் தானமாற்றினாள். வேண்டுமுபசாரம் விதவிதமாய் செய்தான்பு தேவேந்திரன் புலம்பினாள். ஏங்கலுற்றாள் பாலகனைக் காண்பதற்கு என் அத்தாவைக் காணவில்லை என்றாள். சிவனாரும் அங்குள்ள தேவர்களும் வந்தவுடனே மகனாரை வாங்கி தாங்கியெடுத்து தழுவி முத்தம் தான் இட்டு உண்டான சந்தோஷம் உறைக்க முடியாது. அப்பொழுது இந்திரனும் அழகான தாதியரே சுந்தரியாரிடத்திற் கொண்டுபோ என்று சொன்னார். ஆவலுடன் வந்து அறிகின்ற மகனார்க்கு தேவப்பிராமனரை திரும்பியழைத்தார்கள். பிறந்தவிவரம் பிசகாமல் கேட்டனர். இந்தப்படி இருக்குமந்த வேளையிலே நவக்கிரமெல்லாம் நயமான நாளொன்றில் பேரிடவேணும் என்றது. சித்திரையில் பிறந்ததால் சித்திரபுத்திரன் என்றார். இந்திரன். அப்படியே எல்லோரும் பெயரை அழைத்தார்கள். சீறிட்ட பசுக்கள் சிறப்பாய் கொடுத்தனர். தான தருமங்கள் எல்லாம் கொடுத்தார்கள். மகனைப் பெற்றெடுத்த வாய்த்த தொரு பசுவும் நிற்குமனால் நினைவு மறந்து ஒரு நாள் பாலகன் நெஞ்சில் பசுக் குளம்பு பட்டது.

அதனால் இந்திராணிகண்டு ஏங்கிக் கயந்து மகனை எடுத்து மார்போடு அனைத்து இந்திராணி அப்பசுவை கரத்தாலடித்தாள். அப்பசுவுக்கு கண் சிவந்தது. திடமுடைய பால் பசுவும் தெய்வமே சாட்சி என்று சரணம் சரணமையா தற்காத்து கொள்ளென்று சிவனை நினைத்து தோத்திரங்கள் செய்தது. அப்போழுது சிவனும் அங்குள்ள தேவர்களும் பசுவையடித்த பாதகத்தைத்தான் தெரிந்தார்கள். இந்திர விமானத்தை எடுத்துக் கொண்டோடிப் போய் தட்ஷணைப் பசுவை இங்கே அழையும் என்றார் சிவன். தேர்கொண்டு வந்தவர்கள் தேன்மொழியாள் வாசலிலே நின்றவுடன் அப்பசு மகாதேவரைப் போற்றியது. தேரின்மேலேறி சிவனாரிடம் சேர்ந்தது. இந்திரர்க்கு பிள்ளை கொடுத்துவா என்று உரைத்தீர். பாலகனை ஈன்று கொடுத்தேன். உருவுடன் ஈன்று கொடுத்தவுடன் என்னை கோதையார் அடித்தாள். வந்துவிட்டேன் என்று காமதேனுபசு உரைத்தது. சிந்தை மகிழ்ந்து சிவனாரும் உன் மகனை இங்கே உனக்கழைத்து நான் தருவேன். வஞ்சகமில்லாமல் மனம் மகிழ்ந்து நில் என்றார். அப்படியே நற்பசுவும் ஆனந்தம் கொண்டது. இப்போழுது நடக்கின்ற வசனங்களைச் சொல்லுகிறேன். தேவரும் இந்திரரும் தேவியும் முதலானோர் அழுதனர். பாலன் பசித்து பதறி அழுத்து பாலமுதம் வாங்க பசுவினை தேடுமென்றார். பசுவை மிகத்தேடி பார்த்தார்கள்

எல்லோரும் கடலெல்லாம் தேடி காணவில்லை என உரைத்தார். இந்திராணியான இளங்கோதையும் அழுதாள். இந்திரனும் அப்போது இறங்கி மிக வாடினார். மாயையாய் வந்து மடியமாய் போச்சு என்றார். மற்றுமொரு பாற்பசு பால்முகத்தை மைந்தனுக்கு குற்றம் வராதபடி கொடுத்து வளர்த்னர். பாலர்க்குத் தொட்டிலைப் பாங்காகக் பார்த்தார் வைரம் வைடூரியம் வகை வகையாகச் செய்தார்கள். சித்திரபுத்திரை சீர்சிறந்த தொட்டிலே வைத்து தாலாட்ட மன்னவரும் சொன்னார். ஆவின் பாலூட்டி அரிய தொட்டில் மேல் கிடத்தி தொட்டிலைத்தான். அசைத்து சூழ்ந்து நின்றார்கள் தாதியர்கள். இந்த நல்ல தொட்டிலிலே என் மகனே நித்திரை செய் என்றாள். தேவேந்திரன் மணியே செம்பொன்னே உறங்காய். இந்திரனார் செல்வார்கள் ஈடேற வந்தவனோர வானுலகமகனே வந்து பிறந்தவனோ? மைந்தனாய் வந்து மகனாசை தீர்த்தவனோ? எங்கள் துயர் தீர இன்று வந்த பாலகனோ? தேசகணக்குள் சிறந்த பெருங்கணக்கும், மண்ணிற் கணக்கும் மகாதேவர் கணக்கும், விண்ணிற்கணக்கும் விரைந்தெழுத வந்தவனோ? சந்திரர் சூரியர் போல் சார்ந்த திருமகனே, ஆதிபரன் கட்டளையில் அவதரித்த பாலகனே. துட்டர்கணக்கும் துரோகியர்கள் கணக்கும், சிட்டர் கணக்கும் தெரிந்தெழுத வந்தவனோ. தேவேந்திரன் சிறியவர் செய்யும் நன்மைகளும் தீமைகளும் புண்ணியரை ஆராய்ந்து சொல்ல அறிவுடனே வந்தவனோ? ஆவின் வயிற்றில் அவதரித்த பாலகனோ எங்கள் அரும்பொருளே. இந்திரனார் கண்மணியோ எங்கள் குலம் வாழ எழுந்தருளும் நாயகமே இப்படி ஏங்கிய நின்று தாலாட்டி அந்தமகனை அரிதாய் வளர்த்தார்கள். தாதிமார்தன் பாலை உண்ணச் சொன்னார்கள். உங்கள் முலைப்பாலையுன்னவே நான் பிறந்தேன் என்று அறிந்து சொன்ன இளமை குழந்தைக்கு மந்திரநூல் வேதம் ஆகாய அறிவை உண்டாக்கு வாத்தியார் தம்மை வரவழைத்தார்கள்.

விருத்தம்

இந்திரன் புதல்வருக்கு இன்பமாயோதி வைத்து தந்திர வாத்திமார்கள் நான் அறிவோமென்றோத மந்திரப்புல்வனாரும் வகைச்சொலல்லுமென்று கேட்க, தந்திரசித்திர புத்திரர் சொற்களும் ஓதுவாரே

வசனம்

இந்திரன் இந்திராணி இவர்கள் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக வளர்த்த சித்திர புத்திரனாருக்கு வேதங்கள் பியாசம் பண்ணிவிக்க நினைத்தனர். அதனால் வாத்தியாரை அழைப்பித்து பட்டணமெல்லாம் அலங்காரம் செய்தனர். மகாதானம் கோதானம், வஸ்திரதானம் முதலான தானங்கள் செய்து ஹோமம் எக்கியங்களெல்லாம் செய்தனர்.

சித்திரபுத்திரருக்கு வாதத்தீயார் அறிவோ என்று சொல்ல அதற்கு பயன் சொல்லுமென்று வாத்தியார் இடத்திற் கேட்டனர். அதற்கு அவர் சொல்ல ஏதுமில்லாமல் சித்திரபுத்திரர் தானே பயன் சொன்னார். பின் நடக்கும் காரியங்களைச் சொல்லுவோம்.
நடை
விநாயகர் பூசை விதவிதமாய் முடிந்ததது. ஆதிமுதலான அரிவையும் கைகொடுத்து அரியோ மரியோ என்று ஆதரமாய் சொன்னார்கள். ஆயிரம் பார்ப்பார் அரியோ நமவெனவே என்றனர். அரி என்ற சொல்லுக்கு அருத்தங்கள் உரை என்றனர். அப்போது வாத்தியார் அதன் பொருள் சொல்லாதிருந்தார். நான் சொன்னபடிகேளும் நல்லதொரு உத்தமரே அரிக்குப் பொருள் சொன்னால் அண்ணாவி எனக்கு குருக்களுமாவீர். குற்றமில்லை கண்டீரே எனக்கு ஓர் அண்ணாவி ஈசனல்லால் வேறு முண்டோ. மேலான உங்களுக்கு வேதமது சொல்வன் நான் கிட்டியான வாசிக்க கேளுங்கள் என்று சொன்னான். நன்னொறி நூலவிழ்த்து நற்படம் மீது ஏறி சைவ நூல்வேதம் தழைக்கவே வாசித்தார். ஓரெட்டுக்குள்ளே உலகமெல்லாம் வாழவென்று தேவர்கள் வாழவென்று திருவேடு வாசித்தார். மூவர்கள் வாழவென்று முதலேடு வாசித்தார். அயன்றிராமல் செங்கையான ஒரு சிவனமும் நமன் அருகு வேந்தன் நடுக்கணக்கிலுள்ளவர் காண வேண்டும் சங்கர நாராயனர் தான் கொடுத்த பட்டோலை, அட்டவணைப்பட்டோலையை வாசிக்க வேண்டும். வாத்தியார் தன் கணக்கு வந்து வெளிப்பட்டது காண்பாய். தனது மனையல்லாமல் தலைநாளில் நீ ஒரு தகுதி மனையை அடிமை செய்தது கண்டீரே, உம்முடைய செய்கையும் உமக்கிய பேசாமல் என்னுடைய ஏட்டில் எழுதினேன். என்று சித்திரபுத்திரர் சொன்னார். வாத்தி மாரிருகையால் போற்றி செய்தார். ஈஸ்வரனார் கற்பனையோ என்று சொல்லி இருந்தார். இவ்வார்த்தைகள் கேட்டு இந்திரனும் இந்திராணியும் மைந்தனை மனமகிழ்ந்து முத்தமிட்டனர். இப்படியே இருக்கும் சிலநாளில் மைந்தர் பெருமான் மனம் மகிழுந்து சொல்வார். பூலோக சோதனைக்கும் வாரேன் என்று உரைத்தார். நகரங்கள் சோதனைக்கு நாம்போறோம் இந்திரரே என்றுரைத்தார் அங்கே சிவன் வாசலிருகிருக்கு நாம் போகிறோம். இவ்வாறு கணக்கை இதமுடன் சுருட்டி நன்றியுடன் புறப்பட்டார். நல்லகணக்கர் இப்படியே ஈஸ்வரனார். கொடுத்தார். கட்டளையிட்டபடி கணக்கு எழுத போகிறோம் என்கிறார். அந்த கையிலாய அரனார் கருவேலம் நித்தம் எழுதிவந்தார். சிவனார் அருள் கொடுத்தார். பத்திரமாயென் வசத்திற் வந்த தொருபட்டோலை. சீருடனே என் வசத்தில் சிறப்பாக இருக்குது காண்பாய். பரமனார் கொடுத்த பண்டார பொக்கிஷம் கொத்தவரிசைகளை கொற்றவரே கண்டீரே.

பொன்னுலகமட்டுமல்ல புண்ணியரே நீ பார்த்தாய் நிறைந்த புகழ் மாதாவு நீடு மிக தவசிருந்தாள். உங்களுக்குப் பிள்ளையாய் யுகம் தாளித்தார் பார்த்தாயே. அண்டரண்ட கோளமட்டும் அணுவளவும் தப்பாமல் எழுத்தாணி பட்டோலை என்கையில் கொடுத்தார். முத்திரை மோதிரமும் என் விரலில் அணிந்தார். பார்த்தீரே நீரும் கணையாழி மோதிரத்தை இவ்வுலக வாழ்வும் உங்களிருவரின் வாழ்வும் புதிதான காவியத்தைப் பார்க்க வேண்டும். போய் வருவேன் பொருந்த விடை தர வேண்டும். வாடவயசு வருமளவு நீரிருந்தால் பாலனால் வந்த பலிங்கிடைக்கு மென்று சொன்னார். அந்தப்பலனும் அறனாருக்கு அருள் கிடைக்கும். அப்படியே நானும் அவ்விடத்தில் இருந்துவிட்டேன். எப்படியும் என்றாயே அங்கும் இங்கும் இருப்பேன். போக விடையருளும் புண்ணியரே என்றுரைத்தார். மாதா வைத்த தந்தையே வணங்கி இருபாதமிதில் மலரது போட்டு பணிந்தாரே புண்ணியனார் அருமைத்திருமகனை என்னையுந்தான் வாழ்த்தினார் இந்திரவான் தேரில் ஏறியே சென்றார் உத்தமனார்.

விருத்தம்

உத்தமனார் சென்றான். ஈசனின் பாற்சீர்பாதம் வணங்கினான். வணங்கி நின்ற மகனை மகிழ்ச்சி கூர்ந்து நிகரில்லா உமையாள் தேவியே முகந்துகொண்டாள். வந்தனை மகனே என்று வாரினாள். மைந்தன் அங்கு வந்த வரன்முறை இயம்பினான்.

நடை

சித்திரபுத்திர நயினாரானவர் இந்திரன் இந்திராணி இவர்களை வணக்கத்துடன் அனுப்பிக் கொண்டு தேரின் மேலேறி சுவாமி கையிலயங்கிரிவாசன் பரமேசுவரனையும் பார்வதியம்மாவையும் கண்டு நமஸ்காரம் செய்து மனம் மகிழ்ச்சி கூர்ந்து நின்றார். பார்வதியம்மாளும் மகனைக்கட்டி வாரி முகந்து கொண்டவுடனே சித்திரபுத்திர நயினார் சுவாமியிடத்திலும் அம்மாளிடத்திலும் அவ்விடத்தில் நடந்த விருத்தாந்தமெல்லாம் சொல்லுகின்றார்.

நடை

அப்பால் நடக்கும் அதிசயங்களுள்ளதெல்லாம் செப்பமுடன் நானும் சொல்லுகிறேன். சீராக மாதாபிதாவை மறந்திருந்து இத்தனை நாள் ஈஸ்வரன் சொன்ன விடை எள்ளளவும் தப்பாமல் இருந்தது. தாமரைப் பூவாய் தடகத்தில் சென்றிருந்து ஆவின் வயிற்றில் அவதரித்தவன். இந்திரன் இந்திராணி இவர்கள் மனம் குளிர புத்திரனாகப் பிறந்தவர். அவர்கள் போற்றியேதான் வளர்ந்தார். பிறந்தவுடன் தருமம் பெருக்கவே செய்தார்கள். என்னையும் அங்கே ஈன்ற ஒரு நற்பசுவை என்னை மிதித்தது என்று இந்திராணி அடித்தாள். உடனே தானப்பசு கயிலைக்கு வந்தது. மற்ற ஒரு பசுபால் கொடுத்து என்னை வளர்த்தார்கள்.நன்றாய்

வளர்த்தார்கள். நாயகியும் நாயகனும் இந்தப்படியே இதுவரையும் நானிருந்தேன். இவ்விடத்து சிந்தையினால் ஏக்க மிக உண்டாகி போகின்றேன் என்று சொன்னான். போர் வேந்தனைப் போது பாலவயசு வேணும் என்றார். இங்கிருக்க நீதி எள்ளவுமில்லை என்றார். சிவன் கையிலை சென்று அவ்விடத்தில் நானிருப்பேன். அங்கும் இங்கும் இருப்பேன் என உரைத்தார். இந்திரன் இந்திராணி அவர்கள் இருவரின் அடிபணிந்து இங்கு வந்தேன் என்றார். இவ்வாறு இரக்கமாக சித்திரபுத்தினார் சொன்னவுடன் பசுவை அழைத்து பாலன் வந்தான் பார்த்தாய் என்று சிவன் கூற அதனை பசு ஏற்றுக் கொண்டது. அருகில் சென்று மகனின் திருமுகத்தை போந்து எழுந்து இருகொம்பால் இரங்கித்தடவினதே இப்படி இருக்கும் வேளையிலே இந்திரன் இந்திராணி இவர்கள் இரண்டு பேரும் மகளை போன வழிதடத்தை நோக்கி கைலை மலைக்கு வந்தனர். கயிலை மலையில் விண்ணவர் அரசன் அப்பால் நடக்கும் அதிசயத்தைக் கேரும் என்றார். இனி சிவனாரிடத்தில் தேவேந்திரன் புலம்பினான். புத்திரனும் சத்துருவாய் போனான் என உரைத்தார். உரைத்த மொழிகேட்டு உமைப்பாகரே உரைப்பார். சத்துரு என்று சரியாமல் சொன்னியே தாயருமாக தன்பிள்ளை வந்தது. பேமாயவுனக்கு போகக் கணக்குமுன்டோ. பித்தரைப் போல் பிதற்றுகிறாய். நீ நாட்டுக்கணக்கும் நம்மூர்கணக்கும் நன்மையும் தீமையும் நடுவாக நின்று எழுத வேண்டும் என்றார். எமதருமர் தன்னிடத்தில் இருந்து கணக்கு எழுத வேண்டும் என்று சொன்னார். விரும்பியே அழைத்தோம். எங்கிருந்தால் என்ன ஏற்ற தெரு இந்திரரே போ பிள்ளையாய் என்று உரைக்க போனாரே. இந்திரரும் ஈஸ்வரரும் ஏற்ற தொரு புத்திரரை இப்போது நீயும் எமனுடைய வாசலுக்கு சித்தாந்தம் ஆனதும் முறைப்படி செய்யவேண்டும். அந்தாந்திரக்கணக்கும் அடைவாய் எழுது என்றார். இதனால் எமதருமனை அழைத்து களியன்பு பத்திரத்தால் களிகள் முகிந்து அவயக்குறலுண்டாகும் என்றார். இப்போது எல்லாக் கணக்கும் இயல்பாக எழுதினார். சித்திரபுத்திரரைச் சிறப்பாக அருளினன்பார். இவ்வாறு எமனுக்கு சிவனார் இசைந்தார். நன்று நன்று என்று விடை வாங்கினார். நின்றபொழுது பிரமன் சிவனது அருளாலே இரண்டுபேரும் வாழவென்று ஏற்ற விடை கொடுத்தார். கட்டகருவுடனே கனத்தாண்ட சூலமுடன் குத்திடும், கோல் கொடுத்து, கோலக்கடாவளித்து இவ்வளவும் கொடுத்து ஏற்றபிரமாவும் வராய் சிவனும் வழியஷனமைச் செய்தனர். சிவனை நினைத்து திருத்தொண்டு செய்வார். தவத்தை நினைத்து பூசை செய்வார். கருமங்கள் செய்வார் மேல் சற்றுமே கொள்ளாமல் புத்திகரும் சொன்னார். போக விடை கொடுத்தார். கருங்கடாதே ஏறி கள்ளனை உதைத்து வலது கடா மீது ஏறி எமதருமர்வாரார்.

சித்திரபுத்திரர் சீராக தேரேறினார். நல்ல முரசு சின்னம் நன்றாக முழங்கிவந்தது. இரண்டுபேரும் ஒன்றாகி இந்திரலோகம் புகுந்தார். இருவரும் இசையவே பேசி பாரிலுள்ள கணக்கைப் பார்த்தார்கள். சிவகுருவே என்று திருநீரு அணியாதவர் நாராயணாவென்று நாமம் அணியாதவர் பெற்றதாய் தந்தையைப் பேணாதபாவியர்கள், மண்ணிலிருந்து வழக்கோரம் செய்தவர்கள், அம்பலத்தில் நின்று அநியாயம் சொன்னவர்கள் ஊருடைமைக்குப் பேராசை கொண்டவர்கள், கல்லாக்கசுடர் கணக்குப்படியாதோர், சிவனை வணங்காதவர் திருக்கோல் செல்லாதவர் அயனை வணங்காதவர் ஆலயத்தை மேவாதவர் பிச்சைக்கு வந்தவரை பின்னே வா என்பவர்கள். கன்று வருத்த கறந்த பாலுண்டவர்கள் போட்ட ஞாழி மறக்காமல் போட்டலிந்து பாவியர்கள் பிள்ளையழித்துப் பேதமுறச் சொன்னவர்கள் உள்ள பொருளை இல்லை என்றே உரைத்தவர்கள், தூதவழிக்குத் துணைவாரோம் என்று சொன்னவர்கள் யாருமில்லாத காட்டில் அடித்துப் பறித்தவர்கள், குளிசிலையின்றி குளித்திடும் பொல்லாதவர்கள், கொண்டவளையாளாது கூத்தியார்களை வைத்தவர்கள், மாதபிதா வருந்தும்படி வயிறு வளர்த்தவர்கள், நீட்டும் பிழைக்கையில் நின்று மெல்ல கேட்டவர்கள், காவல் போல் செய்யும் சண்டாளபாதகர்கள், கொண்ட கணவனுக்கு குறிபறிந்து செய்யாதவர்கள் இப்படியாக கொற்ற விழி தொழில் செய்வோரையெல்லாம் எமதருமன் பிடிப்பான். அவ்வாறு சொல்லுவதன் நல்ல செந்தமிழில் போட்டு பாசத்தை வீசி பதரவேதான் பிடிப்பான். வாசிதனில் நஞ்சையிட்டு பிடிப்பான். நாக்கில் துறட்டிவிட்டு பிடிப்பான். உச்சிமலையில் ஏங்கி முனையறிந்து அச்சம்படக் கண்ணில் ஆலிதனை நிறுத்துவான். கைகள் இரண்டையும் பின் கட்டாய் கட்டி இருகால்களையும் பிண்ணி, மார்பைத் துளைத்து மறுகதிருபாம்புடனே கூறிய நாறாசாய் கொடுஞ்சியிலுடே ஏற்றினார். ஆண் குறி பெண் குறியில் கூடைவாய் துரட்டியிட்டனர். பாறைதனில் போட்டு பாறையிழுத்திருந்தனர் வேறு வேறு நாய் உடலை வெட்டியே போட்டிழுப்பார்கள். காரமுள்ளவுப்பதை கரைத்ததிலே தானொழுக்குவார்கள் முள்ளுவனங்களில் முகம் கீழாய் போட்டிழுத்தார்கள். பள்ளம் மேடென்று பாராமல் இழுத்துச் சொல்வார்கள். இவர் - தங்களா ஏழாவது நரகத்தில் தள்ளவென்று பட்டோலே எழுதி கொண்டார்பார். அதில் நல்லோர் பெரியோரை நடுங்கவேச் சொன்வைவரை, கொண்ட கணவனுக்கு கொலை மருந்து செய்தவரை, அந்தணர்கள் சொத்தை அடித்துப்பறித்தவரை, பத்தினியாள் தன்னை பதரவே சொன்னவரை, வீதிவீதியாய் விபரமாக எழுதி, அவ்வீதிலிட்டு மறு வீதி வந்தார்கள் இவ்வாறு ஏழாவது நரகத்தில் உள்ளவர்களை எழுதினார். பெற்ற தாய்

சொத்தை சதி செய்யும் பேதையரை, அரைத்த அம்மிகாக்கா அரும்பாவியானவரை குத்துமுரலுலக்கை ஒதுங்க வெக்காதவரை, வாசற்படி நடக்கும் வழிசுத்தி செய்யாதவரை, எந்த பதார்த்தமும் ஏற்ற சுத்தி செய்யாதவரை, கண்ட போதொன்று சொல்லி காணாமலொன்று சொல்லுபவரை, குண்ணுணிகள் சொல்லு கொடும்பாவியானவரை பகல் உறக்கம் செய்யும் பாவிகள் இவர்கள் எல்லொரையும் நரகத்திலே அழுத்த நடுவோலை எழுதினார். சித்திரபுத்திரர். கள்ளிகளோடு கடுகவந்து சிக்கினது. குண்டுணிகள் சொல்லி குறளிகள் பெசி சண்டையிட்டு முன்னே காலங்கள் சொல்பவரை, கணவனை காணாமல் கள்ளியவள் வீடு விட்டு தீர்த்தமும் ஆடி திருநாளும் பார்த்தவர். பத்தா இருக்க பசியாற்றிக் கொண்டவள். அவர்களைப் போலே அணுக்கணக்கு தப்பாமல் செய்ய வென்று நல்கணக்கு சேரவே எழுதினார். செட்டிகள் வீதியிலே சிறப்பாக வந்தார். அவர்கள் எல்லாம் அடிபணிந்து வாய் புதைத்து வில்லாச்சரக்கை விலை சரக்காய் விற்றிடுவோம். சொல்லப்பணத்தை செலுத்துவோம் கண்டீரே. எல்லாப் பிழையும் பொறுத்தருளும் என்று சொன்னார். அவர்களுக்குச் சொல்லி அழைத்தபடி எழுதினார். வெள்ளாழரெல்லாம் வேண்டிய தெல்லாம் படைத்தார். நெல்லுகளை நாங்கள் உலர்த்தாமல் விட்டுடிவோம். கள்ளமரக்கால் நாழி கலந்து மிக விற்றிடுவோம். இவ்வாறு சொல்லி குற்றம் பொறுமென்று, இவர்களுக்குத்தக்க ஏற்றபடி எழுதினார். பட்டமார் வீதியிலே பரிவுடன் வந்தார். அவரை சேவிப்போம். கோயிலையும் பூசிப்போம். பால் தயிரும் நெய்யும் பசித்தெடுத்து சாப்பிடுவோம். ஏறாத மான் தனை ஏற்றிடுவோம் என்று சொன்னார். இவர்களும் அங்கே ஏற்றபடி எழுதினார். அந்தந்த சாதித்தெரு அடைவாகப் பார்த்து அவரவர்கள் செய்யும் வகையை எழுதினார். பாவ புண்ணியம் பகுத்து எழுதினார். புண்ணியம் செய்தவர்க்கு புதுமைகளைச் செய்யும் என்றார். புண்ணியஞ்செய்தவரை புதுமையாக எடுத்து எழுதினார். பசியாமல் அன்னம் பாங்குடன் கொடுத்தவர். இருக்கத்துடனே ஏமாற்றி வந்தவர். உடுத்தபுடவை உகந்து அளித்தவர்கள். பிச்சையிட்டு பெரிய இடம் கொடுத்தவர்கள். மகேசுர பூசைக்கு மடங்கட்டி வைத்தவர்கள். சாலை மரமும் சாத்திரமும் வைத்தவர்கள். சிவபூசை தவ பூசை குரு பூசை செய்தவர்கள். நான்குதிசை விளங்க நந்தவனம் வைத்தவர்கள். ஆலயங்கட்டி அன்னம் கொடுப்பவர்கள். இடிந்த பழங்கோயிலை எடுத்து புதுப்பித்தவர்கள். தாகத்துக்காக நல்ல தண்ணீர் கொடுத்தவர்கள். பொருந்த வயிறுதனக்கும் போதநீர் விட்டவர்கள். இரவுக்காலில் பட்டினியை இதமாகத் தீர்த்தவர்கள். அந்தணர்க்கு அக்ராரம் அடுக்கடுக்காய் செய்தவர்கள். பஞ்சம் வருங்காலம் பகுந்து அன்னம் இட்டவர்கள். பெரியோர்கள் தங்களையும் பேணி நடந்தவர்கள். விருந்தினர் வந்தால் மறைத்து

வைத்து உண்ணாதவர்கள். வகைவைத்து வஞ்சகங்கள் செய்தவர்கள். நெய்வதிக்கும் மாவிளக்கு நேமமாய் செய்தவர்கள். தானங்களெல்லாம் தயவாகச் செய்தவர்கள். வழக்கோரம் சொல்லாமல் மன்னருடன் முதலயாய் சிவனை வணங்கி சிவபூசை செய்தவர்கள். செருப்பு குடை முதலாய் சிறந்த பிராமணர்க்குக் கோடைகாலத்தில் கொடுத்து அன்னம் கொடுத்தவர்கள். பிள்ளைபோல் வளர்த்தவர்கள். பிணிக்கு மருந்து அளித்தவர்கள். பரதேசிக்கு அன்னமிட்டு உண்டவர்கள். சூரியரை எந்நாளும் தோத்திரங்கள் செய்தவர்கள். பௌர்ணமியில் நல்ல விரதம் பத்தியாய் இருந்தவர்கள். பத்தாவின் மேலாசை பண்பாக வைத்தவர்கள். கணவனிட்ட சொல்லை கட்டாயம் நடத்தினவர்கள் ஆறு குளத்தில் அணைகட்டி வைத்தவர்கள். வழிப்பறியாமல் வாக்குக் காத்தவர்கள்.கன்றுக்குப்பால் குடிக்குமட்டும் கருத்தாக விட்டவர்கள். தருமங்கள் செய்தவர்கள். இவர்கள் ெல்லோரையும் ஏட்டில் எழுதி வைத்தான். ஒளியுமறைந்தவர்க்கு ஊன்று கோல் தான் கொடுத்தார். காய்ந்த தலைக்கு எண்ணெய் கட்டாகத்தான் கொடுப்பார். பசுவை வணங்கி அனுதினமும் தொழுவோர். விநாயகர் பூசை விருப்பமாகச் செய்தவர்கள். பள்ளிக்கூடங்கட்டி பாங்காய் வைத்தவர்கள். சம்பளமும் பணமும் கொடுத்தவர்கள். கந்தனை எந்நாளும் கருதித் தொழுபவர்கள். மாதாபிதாவை மகிழ்ந்து நித்தம் தொழுவர்கள். வேதங்கள் ஆகமங்களின் விதிப்படி நடப்பவர்கள். குரு நன்றி செய்நன்றி குறையாமல் நடப்பவர்கள். விஷங்கள் நீக்க விருப்பமாய் செய்தவர்கள். வண்ணான் நாவிதன் கூலி மகிழ்ந்து கொடுப்பவர்கள். தருமங்கள் செய்தவர்கள் இவர்களை தப்பாமல் எழுதினார். சித்திரபுத்திரன். இப்படி கொத்து இயல்புடைய புண்ணியரை சொல்லி அறிந்து செய்தபிழை பொறுத்து தப்பாமல் ஈசுவரனார் தன்னடியில் சேர்த்தார். வைகுண்டலோகத்தில் வகையுடன் சேர்த்தார். புண்ணியம் செய்தவர்கள் எல்லோரும் வைகுண்ட உலகத்தில் கனகவனம் உண்டாக்கினார். பூங்காவனத்தில் மலர்கள் உண்டாக்கினார். காய்கனிகள் உள்ளதெல்லாம் கடுகெனவே உண்டாக்கினார். எப்பொதும் சிவனை இன்பமுடன் பூசை செய்தார். பணிவிடைகள் செய்யவே பாங்காக உண்டு பண்ணினார். அவ்விடத்தில் இருந்து அன்பாக செய்வித்து வைகுண்ட லோகத்தும் வாழ்ந்திருக்க எழுதினார் சித்திரபுத்திரனார். பாவியர்க்கு துன்பப்பலனை எழுதுகிறார். அட்டை குழியும் அழகு புழக்குழியும் இருமி வகைக்குழியும் வேறாக செய்தார்கள். அகில் கிடங்கு வெட்டி அதிலே அனல் வளர்த்து, முள்ளு மயிர்ப்பாலும் நூதனமாய் சேர்த்தார்கள். காடுங்கறடும் கல்லும் உண்டாக்கினார். சற்று நிழலில்லாமல் தவிக்கச் செய்தார்கள். நரக்குழியும் நடுநடுங்க செய்து

வைத்தார்கள். மெத்தவே உண்டாக்கினார். விமரிசையாய் ஆயுதமும் அயிரங்கிலியர் அசைக்க வொண்ணச் செக்கும் உண்டாக்கினார். இரும்புத்தூணும் காய்ச்சி சேரவே தானிருந்தினார். எந்நேரமும் இரும்பு முக்காலியை காய்ச்சி வைத்தனர். செவிகருக்கூ நாராசம் சேரவே உண்டாக்கினர். உச்சி முதலா உள்ளங்கால்வரைக்கும் வகை வகையாய் ஆணி வரிசையாய் அடித்தனர். தொரண்டி வகைகளை தொற்றிமிக உண்டாக்கி இந்த வகைப்படியே எற்றளவும் தப்பாமல் பாவ புண்ணியங்களுக்கு பகுத்து வகை செய்த பின்பு இந்திரன் இந்திராணி இவர்களிடம் போனார் சித்திரபுத்திரன். அப்பால் நடக்கும் அதிசயங்கள் எல்லாம் இயல்புடன் நானும் சொல்லுகிறேன் கேட்க வேண்டும் என்றார். மாதாவின் அருகே வந்தார். பெருங்கணக்கர். அங்கு எமதருமராசனும் இயல்பாக இருந்தார். தந்தையாகிய இந்திரனை வணங்கி, தாயார் இந்திராணியை வணங்கி அவர்கள். பாதத்தில் நமஸ்காரம் செய்த சித்திரபுத்திரனை நன்றாகவே வாழ்வாயே என்றார். அந்த உத்தமரை வாரியெடுத்து இந்திராணி தனது கனிவான வாயில் முத்தமிட்டாள். அவர்கள் முத்தமிட்ட போது முன்னின்ற தாதியர்கள் எண்ணைப்லகை தன்னில் போதவே யெண்ணையுட்டு, எண்ணெய் காப்பு செய்து உண்டாக்கினார். தீர்த்தமும் ஆடி திருநீறும் அணிந்தார் சிவனைத் தொழுது சிவபூசை முடித்தார். வேதப்பிராமணர்க்கு வேண்டிய தானம் கொடுத்தார். மகேசுர பூசை செய்தார். இது முடிந்தவுடன் ஆபரணமுள்ளதெல்லாம் அழகாக பணூடான். புட்பாதிகளெல்லாம் போகவே முடித்தார். போசன சாலைக்கு போயிருந்தார் உத்தமனார். நாடாருமிந்தரும் நாடக மடந்தையரும் தலை வாழை இலையறுத்து தங்கதகடமுத்து பூமிதனில் வைத்தார்கள். பொன்னின் முக்காலி வைத்தார்கள். முன்பாக மாணிக்க வட்டிலை வைத்தார்கள். கைக்கு நீர் வார்த்து கறிவகைகளுள்ளதெல்லாம் வைத்தார்கள். சுற்றிக்கறிகளெல்லாம் சேரவே படைத்தார்கள். தும்பைப் போல் அமுது சொறிந்து நறுநெய்வார்த்து தம்பியரை உண்வெண்ணு தடவினார் முதுகை. அப்போது உத்தமனார் அவர்கள் முகம் நோக்கி உன் வீட்டில் அமுது உண்பமேயாமாகில் உன் வயிற்றில் வந்து பிறப்பேன் தாயே என்றான். இது காண்பது உறுதி என்றான். என்ற பொழுது இயல்பானார் மாதா நின்று பாதவித்து நெடுமூச்சுதானெறிந்து அகமகிழ்ச்சி சந்ததிதான் அறியாதபாவி என்றாள் இந்திராணி. காதல் மிகவில்லாத கன்னியிருந்ததென்று போதமயங்கிய பஞ்சனையில் சேர்ந்தாள். மாதா மயங்கியபின் மைந்தர் எழுந்திருந்து உண்ணவே தருமென உவநவ்து நிற்கின்றான். அப்போது தண்ணீர் குடித்தவுடன் தாகம் தெரிந்தது. கைதொழுத பாலகனைக் கட்டியெடுத்து அணைத்தார். மைவிழியாள் தானும் மடியில் எடுத்து வைத்து

வருக்ரகப்பலாச்சுளையும் மற்றுமுள்ள நற்கனியும் சர்க்கரை சீனி தாரணியிலுள்ளதெல்லாம் தந்தாள். திரட்டுப்பால் தன்னையும் சிறக்கவே தான் படைத்தாள். உத்தமனார் பாங்குடன் பரிந்து அமுது செய்தார். கைகழுவிச் சுத்திபண்ணி கனகமணியாசனத்தில் அமர்ந்தாள். அடைக்காயும் வெற்றிலையும் ஆனபரிமளங்கள் சிறப்பாகத்தான் கொடுத்தார். சிந்தை மகிழ்ந்து அங்கு உரைப்பார். இமயலோக கணக்கு எழுதவே நீ போவாய் என்றார். அற்பமாங்குற்றங்கள் அக்கணக்கு எழுதாமல் அளபமாங்குற்றமதை தொகை படுத்தாமல் கணக்கை எழுதி முடித்திடுவாய் என்றார். என் மகனே என்று சொல்ல ஏது குற்றம்? சொன்னீர் என்றாள். என்னுடைய தாதாவே தலைவாழையிலையறுத்து தானெனுக்குப் போட்டதும் குற்றமென்று பட்டோலை பேசியிருக்கின்ற நேரம் எமதருமராசன் இயல்பாக அழைத்தார். அந்த மொழிகேட்டு அந்நேரம் மைந்தர் பெருமாள் மாளிகையினுள் புகுந்து போக விடைதாருமென்றார். பொருதந்த வேதா உரைத்தார். வந்து தொழுத மகனாரைப் பார்த்தார். வளியெடுத்து மார்போடு அணைத்தார். இந்திராணியுடனே இந்திரனும் மனம் மகிழ்ந்தார். தருமராசடத்தில் ஒரு வார்த்தை சொல்வார். புத்திரர் பின் வருவார் போங்கள் என்று உரைத்தார். அதனால் தருமராசன் போனார். போறாய் எமதருமர் பூவுலகில் சேனையுடன் அப்பால் நடக்கின்ற அதிசயங்களைக் கேளும் என்றார். மிருகண்டன் நற்கதையை உண்மையாக சொல்லுகின்றார். மகனுமே வேணுமென்று வருந்தி மிருகண்டன் பாதாளம் தோன்றினான். அதை வெட்டும் பொழுது பதிவாயனல் வளர்ந்தது. ஹோமகுண்டமத்தியிலே உயர்ந்த கம்பம் நாட்டினார். அந்த கம்பத்தில் ஏறி கால்விரலை ஊன்றினார். வேதங்கள் அக்கினியும் மேலே படர்ந்து எரிந்தது. ஈசனே பிள்ளை அருள் என்று தவம் இருந்தார். தண்ணீர் அருந்தாமல் சருகு பொசியாமல் இருந்தார். மூன்று வருடம் தவமிருந்தான். வருந்தி பசித்திருந்தான். மண்ணில் மிருகண்டன் தவத்தை சிவனார் அறிந்திருந்தார். அதனால் சிவன் தவசிவடிவாக வந்தார். அப்போது உமையாளும் அவரும் அப்படியே வந்தார். இருவரும் மிருகண்டன் செய்த தவத்திருகே சென்றார். அத்தவத்தை உண்மையாகக் கண்டனர் அப்பொழுது மிருகண்டன் சிவனாரைத் தொழுதான்.

விருத்தம்

அய்யனே போற்றி போற்றி அறவளர்தவனே போற்றி போற்றி
செய்யனே போற்றி போற்றி திருக்கயிராசா போற்றி போற்றி
தவசியாக பார்த்தனிலுதித்தாய் போற்றி அடியேனுக்கு ஒரு மகன் தந்தருள்வாய் போற்றி

நடை

இவ்வாறு மொழிகேட்டு சிவனும் உமையும் மகிழ்ந்தனர். சிந்தையுடன் திருவாக்கு உரைத்தார். வாராய் மிருகண்டா மதலையைத் தந்திடுவோம். சீராகவே வயசு தீர்க்காயுசும் இருந்தால் கல்வியறிவு இல்லாமல் கடனாக இருப்பான். அல்லது கல்வி அறிவுடையவனாக இருப்பான் அவன் பதினாறு வயதிலே இறந்துவிடுவான். ஆனதினாலந்த வகைதனில் ஆண்பிள்ளை இதில் எந்தவகையா இருக்க வேணும் என்றார் சிவன். அப்போது மிருகண்டன் ஆராயுங்கல்வியனாய்த் தவத்தினில் மிக்கவனாய் தந்தருள்வாய் பிள்ளை என்று வேண்டினான். இவ்வரத்தை நல்கிவிட்டு திருமதலை தானருளி அம்மையுமையாரும் ஆன பரமேஸ்வரரும் இடபவாகனத்தில் ஏறி கயிலை மலை சென்றார். மிருகண்டனாரு மிக்க தவ முடித்து நலம் பெறவே, இருந்து நன்றாக வாழ்க்கையிலே வந்து பிறந்தான். மார்கண்டன் மகனாக பிறந்தான். அவன் சாஸ்திரபுராணமெல்லாம் சதிராகத்தான் படித்தான். வேதங்களோடு விளங்கினான். இவ்வாறு கற்றான் மார்கண்டன். அதன் பிறகு நடக்கும் அதிசயத்தைக் கேளுங்கள் என்றார். வில்வமும் துளசியும் விருப்பமுடன் எடுத்து, மந்தாரப்பூச்சி மருவற்ற பூக்களுடனும், செண்பகமும் மல்லிகையும் சேர்த்து அலரியுடன் மலர்வகைகளெல்லாம் போதுமளவு எடுத்தான். தீர்த்தங்கள் ஆடி திருநீறு அணிந்தான். கண்டு பணிந்து ஐந்தெழுத்து மந்திரத்தை கருத்திலேஓதி தொழுதான். சிவபூசை செய்தான். அல்லும் பகலும் அரை நாழிபிரியாமல் அந்தமுடன் சிவனை அன்பாக பூசை செய்தான் தோத்திரங்கள் தானும் துலங்கவே சொல்லுகின்றான்.

விருத்தம்

அண்டர்கட்கரியால் போற்றி அடியவர்க்கெளியாய் போற்றி
வண்டமிழ்பாண்டி நாடு வாழ மண்சுமந்தாய் போற்றி
கண்டவர்க்கு அனிய மேனியை காட்டி என் தலைமீது
முண்டத்திருந்தாள் வைத்த முதனே போற்றி போற்றி. தேவ நாயகனே
போற்றி விண்ணவர் தலைவா போற்றி மாதொரு போற்றி
அறுசமயங்கள்மாயப் பேதகஞ்செய்வாள் போற்றி பிஞ்சகா போற்றி
போற்றி பாதமணத்தும் தீர்க்கும் பராபராம் போற்றி போற்றி

நடை

இப்படித்தோத்திரங்கள் இயம்பிமிகப்பணிந்து பழுதுகள் வாராமல் பரமனையே தொழுவார். இந்தப்படியே இருக்குந்தறுவாயில் ஆண்டுபதினாறும் முடிந்தது. அப்பொழுது எமதருமர் அருகில் நின்று தூதுவரை நோக்கி, மார்க்கண்ட மாமுனிக்கு வயது பதினறாச்சு, மார்கண்டன் தன்னை வரவழையும் என்று உரைத்தார். அது கேட்டு ஆன பெருந்தூதுவர்கள் சென்று மார்க்கண்டனைத் தேடி சீக்கிரத்தில் வந்தார்கள். அப்பபோது மார்க்கண்டன் ஆன

பெருங்கோவில் நிற்க கண்டார். நின்ற மார்கண்டனையும் நீர் வாரும் என்று உரைத்தார். அப்போது தூதரை அன்பாகப் பார்த்து நீங்கள் யாரென்று எடுத்துரைத்தான். நாஙகளெல்லாம் எமதருமராசன் தூதர் எங்கள் எமராசன் உம்மை இனிமையாய் அழைத்தார். உங்கள் வயசு பதினாறு ஆச்சு அதனால் வந்தோம் உம்மை அழைக்க வந்தோம் வாரும் என்று உரைத்தார். அதற்கு மார்க்கண்டேயர் மனம் நடுங்காது எமதூதரிடம் உரைத்தார். கொன்றை சூடுகின்ற சங்கரனை நினைத்து வந்ததொரு தூதவரே வார்த்தையொன்று கேளுங்கள் அந்த முடனங்களை அழைத்து வரச்சொன்னவனும் முந்தி இருந்தவனே முறைசெய்ய வந்தவனோ. எந்ந எமன் எனை அழைக்க சொன்னவன். அவனை என்னிடம் காட்டு என்று மார்கண்டன் எமதூதர்களிடம் உரைத்தான். அப்பொழுது எமதூதர் ஏங்கி நின்று மார்கண்டன் உயிரைப்பிடிக்க இசையாது என்று, ஓடி வந்து எமதருமராசனிடம் உரைத்தனர். தூதுவர்கள் எமனை நோக்கி மார்கண்டனை வரவழைக்கச் சொன்னீர்கள். அவன் சொன்ன வார்த்தைகளை அடியேன் உரைக்கின்றோம் கேட்கவேண்டும். முந்தியிருத்தவனோ? முறைசெய்ய வந்தவனோ? உங்கள் எமன் ஒழிந்தோடிப் போவான் பார் வந்தவழியே வழிபார்த்து ஓடும் என்றான். உடனே பயந்து ஒடிவந்தோம் என்றனர். அந்த மொழி கேட்டு அப்போது எமதருமன் கோவித்து கண் சிவந்து கூற்றுவரும் எழுந்தார்.

விருத்தம்

திருமாலும் பிரமனும் அறியாத சிவனை நோக்கி தவம் பண்ணும் தைரியமுடன், மிருகண்டன் பெற்ற பிள்ளை உயிர் சோர எரியும் குஞ்சியுள கூற்றுயெனடுத்தான். சூலம் சாபம் முதலியன விரியும் கடல் சூழந்த உலகமெல்லாம் பெரும்படி எமன் தோன்றினான். தெரியும் கடல்போல் கோபமுணட சேனையெல்லாம் புடைதெழக் கரியமலை போல் சொம்மலைபோல் நெடுக நடந்தான். வழியின் மேல் பெரிய கடாவின் மீது ஏறி பிறைபோல் வளர்ந்த வயிறுகளும், எரியும் விளக்கின் சுடர்போல இரண்டு விழியும் பொறி சிதற இருந்தது.

வசனம்

மார்ண்கணடனுக்கு வயசு பதினாறு ஆனவுடனே எமதூதர்களை அனுப்பி கூட்டிவரச் சொன்னார் எமதருமர். மார்க்கண்டன் சுவாமி கயிலையங்கிருவாசர் கிருபையை தியானத்துக் கொண்டு, வந்த தூதர்களை நிராகரித்து எமதருமராசனையும் சட்டை பண்ணாமல் சொன்ன செய்தியை எமதருமராசனிடம் போய்யறிவித்தனர். எமதருமன் கோபம் கொண்டு கண்கள் இரண்டும் நெருப்புப்பொறி பறக்கத்தக்காக அண்டங்கள் மலைகளெல்லாம் நடுநடுங்கின.

தேவர்களெல்லாம் வெருண்டோடத்தக்க வயிரமுடிகள் தரித்தான். பூசங்களிரண்டிலும் ஆயிரங்கால்கள் தூக்கப்படா நின்ற உடைவாளும் சரிகையும் கட்டினான். ஆயுத வரிசைகளில் சில ஆயுதமும் உண்டு. இடுப்புகளில் வரைந்து கட்டினான். பாசக்கயிறு தண்டாயமும் எடுத்தான். கருங்கடாவின் பேரில் ஏறினான். வெற்றிச்சங்கு ஊதிவர முரசங்கள் ஆயுதப்பணிகளும் வளர்ந்து இருக்கபடா நின்று கடுங்கடாவானதி. இரண்டாயிரம் வரவும் மீசைகள் படபடவென்று துடிக்கத்தக்கதாகவும் அண்ட புவனங்களெல்லாம் அதிரத்தக்கதாகவும் வலது துடைகட்டு மார்க்கண்டனைத் தேடப் புறப்பட்டான்.

நடை

மார்க்கண்டனைத் தேடி எமதருமன் வருகிறார். அந்த எமன் வரும் இரைச்சல் கேட்டு மார்க்கண்டன் மனது மிக நடுங்கினார். என்ன செய்வதேன்று ஈஸ்வரனைத் தியானித்து தஞ்சமென்று சொல்லி சரணம் சொல்லி பணிந்தான் மார்க்கண்டான்.

விருத்தம்

பாலனை மார்க்கண்டன் எமனைக் கண்டு கண்ணீர் மிகுந்து ததும்பி, அண்டர் எமனைப் பார்த்து. இடியேன் செய்த குற்றம் உண்டானாலும் பொருத்தருளிவாய் என்றான். காலன் எனது உயிரை இன்று கொண்டு போகாமல் விட மாட்டான். கோவே காத்தருள்வாயே என்று இறங்கி மார்க்கண்டன் இறைவன் பாதமலர் போற்றினான். நின்று தொழுது கும்பிட்டு நெடுமூச்சு சொறிந்தான். அருகில் நின்றவனும் நன்றேயுனது பக்கத்தில் இனி எமன் உனை பற்றிடியால் சென்றேதொலைப்போம் மார்க்கண்டா தெரிவாய் நீ என்றே சொன்னார். அஞ்சாது உனை நாம் காத்திடுவோம். யானை முகவன் தன்னானை துஞ்சாதே. நீயவனுடனே சொல்லாவென்றும் பேசாதே மஞ்சார் பொழில் துழுலகரிய மதியாதுன்மேல் வருவான் என்றார். நஞ்சார் கூர்வாள் மழுவாளே எமனைக் கொல்வோம் எனச் சொன்னான்.

கோலஞ்செய்து மலர் தூவி குறித்துன் பாதம் வணங்கிடுவோம் ஆல முண்டமிடற்றானே அடியேன் அச்சம் கலங்காமல் சூலபாசந்தன்னுடனே சுற்றி நின்று எனது உயிரைக் கொண்டு போகாமல் காத்துக் கொள்வாயே.

அத்தனே போற்றி போற்றி. அடியவர்க்கு எளியாய் போற்றி. பித்தனே போற்றி போற்றி. பிறைமுத்தாடி போற்றி நித்தனே போற்றி போற்றி. நிருமலா போற்றி போற்றி. உற்றதோர் கூத்தன் வந்தாலுறைத்துடன் சொல்லுவாயே.

ஆதிபொருளாயலை கடலா யணுவுக்ககணுவா, யாவருக்கும் நீதிபரனாய் விற்குணணாய் நினைவு மறியார் எளியாகப் போனாய். சோதிவடிவாய் சுடரொளியாய்த் தோன்றும் சிவனே மாமறவி, சோதிப்பாச எறியவரந்தான் முழுது

நானுன்னடைக்கலவே.

வசனம்

இப்படி மார்க்கண்டன் தோத்திரம் பண்ணுவதைக் கேட்டு எமதருமராசன் சொல்லுகிறான்.

வாடா கெடுவாய் மார்க்கண்டா மறந்தானாலும் விடுவேனோ! ஓடார் கர்த்தர் என் செய்வார் என்னைப் பிடித்து கொடுபொழுது துடாமணிசேர் வழி இரண்டும் சொருகச் சொருகச் சூலத்தாற் கூடா உயிரைப் பிடித்தே நான் கொண்டே போவேன், கண்டாயே என்றான் எமன்.

வசனம்

என்னடா மார்க்கண்டா என்னுடைய மனுவின் வந்து உன்னை அழைத்தால் இதற்கு வராமலிருந்தால் நடப்பது வேறு. மேலான வார்த்தை சொன்னாயல்லவா உன்னைவிடத்தக்க தில்லை கர்த்தா வானவர் உன்னைக் கொண்டோடடும் போது தடுக்க மாட்டா, சென்று வெகுவாய் தர்மராசன் மார்க்கண்டனைப் பயப்படுத்துகிறான்.

வருத்தம்

ஈசன்றன்னாலென் செயலாம், இந்தப் பதத்தையனிய வராமல் வாசம் மலரிட்டு வணங்கினாலும் மாற்றுதல் அரிது. மோட்சம் போக என்றைக்கு முடித்த நாளும் வந்தது. பாசக் கயிறு வீசி பற்றுடைய உனது உயிரைப் பறிப்பேன். பதினாறு வயசு முடிந்தது. மார்பைத்தட்டி எதிராடி வலிமை சொன்னாய் மார்க்கண்டா பார். அப்போது பரமேசுவரரும் பார்த்திருக்க, கூரிட்டு வேல் தன்னாலே, என்னுடனே கொண்டே போவேன் பார்ப்பாயா.

வசனம்

எமதர்மராசனானவன் மார்க்கண்டனைப் பார்த்து, அடா மார்க்கண்டா நீ எத்தனை தவத்தோடு கூடிய பூசை செய்தாலும் உனக்குப் பதினாறு வயசுக்குமேலிருக்க வாய்ப்பில்லை. கர்த்தர் தானென்ன செய்யமுடியும். அவர் பார்த்திருக்க கொண்டு போகிறேன் என்று கருங்கடாவின் மீது ஏறியிருந்த எமதருமன் கீழே இறங்கினான். இன்றைய தினம் உனது உயிரைக் கொண்டு போகிறேன் என்று எமதருமராசன் கோபத்துடன் சொல்ல அதைக் கேட்டு மார்க்கண்டன் சிவனைப் பார்த்து அபயஞ்சொல்லப் போகிறான்.

விருத்தம்

அடியேன் தொழுதேன். பரனேபயம் பரமேஸ்வரனே பயம் துடிசேரிடையாள் கணவாய பயம். தூயநெல்லைப்பதியாய பயம் கடிசேர் சூலக்கர்த்தாவபயம். கருணாலயனே பயம் பயம், கொடிதாகிய கூற்றுவணைக் கொன்று கொடுப்பாய் எல்லாவரமும் என்று மார்க்கண்டன் சிவனை வேண்டினான்.

விருத்தம்
பயந்து வந்து மார்க்கண்டா - நீ அஞ்சாதே ஐந்து கரத்தன்றானையை அந்த எமனை அணுகவிடாது. சிந்தை மகிழ்நதே இரு வென்று திருவெண்ணீறு காப்பணிந்து மைந்தன் தன்னை பிறகுவாவென்று அழைத்து வைத்தனர். கைலாசபதியானவர் மார்க்கண்டனை தன் கிட்ட வைத்ததைப் பார்த்து எமதருமராசன் சொல்லுகிறார்.
விருத்தம்
கூசகடாவேன வல்லவென்று கொடிய கோபத்துடன் எமன், ஈசருக்கு எதிரே சூழல் எழுவே புரியும் செக்கர் குஞ்சியுடன் பாசக்கயிற்றால்வன் தன்னை பற்றிப் பிடிப்போம் என்று எண்ணி, பேசிக்கொண்டுதான் வந்து பெரிய மலைப்போல் நின்றான்.
நின்ற எமன் நேசமுள்ள பாசக்கயிறை வீசியெறிந்தான். சிவன் மார்க்கண்டன் மேல் எறிந்தான் அப்பொழுது மார்க்ண்டன் சிவனைக் கட்டிப்பிடித்துக்கொண்டார். வீசின பாசக்கயிறு விரைந்து சிவனையும் மார்க்கண்டனையும் சிக்கெனவே தாமிருக்க சேர்த்து இழுத்தான்.
விருத்தம்
வட்டச்சடையார் திருமுதுகை வலுவாய் மார்க்கண்டனும் தாவின் கட்டுகொண்டான். தாமிருகக் கண்ணீர் நின்று மிகத்ததும்பினார். சிவனையும் மார்க்கண்டனையும் பாசக்கயிற்றால் சுழற்றி இழுத்தான் எமதருமன்.
எமதருமனுக்கு கோபம் உண்டாகி மார்க்கண்டன் பேரில் பாசத்தை வீசி மார்க்கண்டன் ஆனவன் சிவகாமியைத்தாவி சேர்த்துக்கட்டிக் கொள்ள அப்பாசக்கயிறு சிவன் மார்க்கண்டரையும் சேர்த்தது. அதைக்கண்ட மார்க்கணடனானவன் தன்னை பாசமிக்கிறது தார சுவாமியையும் பாசக்கயிறு பட்டு இழுத்தது. மார்க்கண்டேனுக்கு கண்ணீரானது. தாரை தாரையாக ஓடியது. அதனால் கோபம் அடைந்து எமதர்மராசனை சிவன் ஆக்கினை செய்யப்போகிறார்.
விருத்தம்
வாழும் உலகில் அருள் பெற்ற மார்க்கண்டனை காத்திடவே அழைப்பாக, எழுந்திருந்து இடதுகை இடதுகாலை நீட்டினான் எட்டி உதைத்தார். நிலம்பார்க்க விண்ணும் மண்ணும் உதிர அழியுடைத்தாற்போல் இயமன் அலறி வீழ்ந்தான் பூமியில்
நடை
அடுத்து நடக்கும் அதிசயத்தை சொல்லுகிறேன். சிவன் பாதத்தாலே உதைக்க எமன் பாதாலத்தே விழுந்தான். இறந்தானே எமன். சிவன் மார்க்கண்டரை நோக்கி நீ மயங்காதே என்று உரைத்தார். அன்று முதல் உலகிலுள்ள ஆருயிர்கள் இறவாமல் இருந்ததினாலேன்ன செய்வாள். ஏற்றதொரு பூமிமாது கன்ற முகம் வாடினாள். கண்ணிடத்து நீர் சொரிந்தாள். சாவார்களில்லாமல்

அரைப்பாரமாச்சு. இனி பூமிபொருக்காதிருக்கப் புனிதர் அருள் வேணுமென்றார். பைங்கொடியாள் மாது பாரஞ்சுமந்தலாகாது. இந்திரனார் தம்மிடத்தில் ஏகுவோம் என நினைத்து சித்திரபுத்திரைச் சென்று கண்டு சொல்வோம் என்றார். பூமாது அங்கே புனிதமாக ஓடிவந்தாள் வந்து நின்று, இந்திரனார் வாய்த்த திருமாளிகையில் முறையிட்டு சொன்னாள். முடித்ததைக் காணவேண்டும் என்னால் சுமக்க முடியவில்லை என்று உரைத்தாள். அப்போது சித்திரபுத்திரர் ஆதவாய் வந்து நின்றார். நாராயரிடத்தில் விரும்பி செல்லும் என்றவுடன் நின்று சலித்து நெடுமூச்சு விட்டாள். ஆரமுலைமாது அலறியே சென்று கண்டாள்.

விருத்தம்

பாலன் செய்த நல்ல பாக்கியத்தால் பரமேஸ்வரனார் பாரத்தாற் எமன் பட்டு விழுந்து இறந்தான். அதனால் உயிர்கள் காசினியில் சாலமிகுந்து சாவின்றித் தாரணியில் பாரமாச்சுதென்று பூமாதேவி வருத்தமுற்று நாராயணனைப் போற்றினாள்.

நடை

மாயவரை பூமிமாது வேண்டினாள். உன்னுடைய பாரமோழித் தருள்வேன் நான் தான். போ என்று சொல்வி பூமாதேவியை அனுப்பினார். பூமா தேவி கணத்து கண்டு அவளை அழைத்து அருள் புரிவார் உத்தமரை அழைத்து சம்பூ காலத்திற்கு இங்கே அழைத்தார். உத்தமரை இங்கே அழைத்து ஓடி வாருமென்றார் கண்களும் ஓடியே கணக்கரிடம் வந்து கண்டார்கள். நாராயணரும் உம்மை ஒன்றாழைக்க வேண்டும் என்றாள். அந்த மொழிகேட்டு ஏற்றதொரு புத்திரரும் சிந்தை மகிழ்ந்து சீக்கிரமாய் தாமெழுத்து வநதார். இந்திரருக்கும் இந்திராணிக்கும் இருவருக்கும் வணக்கம் தெரிவித்து கூப்பிட்டு எழுந்திருந்தார். இனிதாக அனுப்பும் படி இணையடியை கைதொழுதார். நல்ல இந்திரரும் இந்திராணியும் இருவருக்கும் வணக்கம் தெரிவித்து கூப்பிட்டு எழுந்திருந்தார். இனிதாக அனுப்பும்படி இணையடியை கைதொழுதார் நல்ல இந்திரரும் இந்திராணியும் மனமகிழ்ந்து போய் வா வென்று புகழுந்து விடை கொடுத்தார்கள். சேனைகள் சூழுந்து வர செம்பொன்னின் தேரேறினார். சித்திரபுத்தினார். அவர் சிவன் இருக்கும் கயிலைபோய் சேர்ந்தார் முப்பதுமுக்கோடி தேவர்களும் வந்தனர். நாற்பத்து நாற்கோடி ரிஷிகளும் வந்தனர். சந்திரரும் சூரியரும் வானவரும் வந்தனர். முனிவர்களெல்லாம் வந்து வணங்கினார். சித்திர புத்திரரும் சிவனாரை வணங்கினார். அர்ச்சனைகள் செய்து சிவனார் பாதம் போய் பணிந்தார் வந்து பணிந்த மகனாரைத் தானெடுத்தார். நன்மையும் தீமையும் ஒரு வெழுத வந்தீரோ என்றார். சிவனார் மகிழ்ந்து கூற சித்திரபுத்திரர் அதை ஏற்று வந்தார் பக்தியுடன் பட்டோலை வாசித்தார் அப்போது

விஷ்ணுவும் அகமகிழ்ந்து அடி வணங்கினார். சிவனது கயிலை சென்று நல்லவசனம் கூறுகின்றார். பூமாது எமதருமராசனுக்காய் இரங்கினார். சாகாமல் இருந்த உயிரை சுமக்க மாட்டாமல் அல்லல் படுந்துயரம் ஆற்றவே வேணும் என்றார். சிவனிடம் அப்போது சொன்னார். எல்லோரும் சிவனிடத்தில் விருப்பம் தெரிவித்தனர். சிவனார் அங்கு மனம் மகிழ்ந்தார். பிரமாவும் அப்போது பெருமையாய் உரைத்தார். வயசு பதினாறு என்று சீராட்டி பாராட்டி வளர்த்த மார்க்கண்டனின் கணக்குப்படி எமன் சென்றான். காலத்தையறிந்து எமன் தவத்தைப் பாராமல் சென்றதனால் அவன் இறந்தான். புத்திகுறைச்சலில்போய் மாண்டான் எமன் பிள்ளைகள் செய்த குற்றம் பொருத்தருள வேணும் என்றான். யாரிடத்தில் செல்வோம் சிவனே நீ இல்லாமல் வேறெருவர் உண்டோ? என்று விண்ணப்பம் கேட்டார். இப்படியே வானவர்கள் எல்லோரும் முறையிட்டனர். மனம் இரங்கி சிவனார் சொல்லுகின்றார். இப்படியே எமனிடம் மேலும் செய்யாமல் சொல்லுகிறோம். கேளுங்கள் சுருக்கமாக என்று சிவனார் சொன்னார். அன்னதானம் செய்வோர் அருங்கோவில் கட்டினவர் கன்னிகாதானம் செய்வோர். கன்றுக்குப்பால் விட்டார். சிவன்பாதம் தொழுதவர்கள். பார்வதி பூசை பத்தியாய் செய்வோர்கள். வைகுண்ட நாதருக்கு வழியடிமை செய்வோர்கள். நன்மை செய்தவர்கள் மேல் நாடாதே என்று சொன்னார். இவ்வளவு பேரையும் இன்பமுடன் என்னிடத்தில் கொண்டு வர வேணும் என்று கூறியே பின்பு சொன்னார். எமனை எழும்பி இன்பமுடன் மகிழந்து கூப்பிடுங்கள் என்றூ சொன்னார்கள். கோமான் விடைகொடுத்தார் அருள் அளிப்பாய் என்று சொன்னார். எமனை எழுப்ப, தண்டாயுத்ததோடு எழுந்தான். எமன் அமைதியாக சிவனை வணங்கினான் அப்போது சிவனார் மனம் மகிழ்ந்து எமனைப் பார்த்து நன்மைகள் செய்தவர்மேல் நாடாதே என்று சொன்னார். அன்பாக ஆயுதங்களெல்லாம் கொடுத்தார். மக்கள் கணக்கு எழுதும் உத்தமரை நோக்கி நன்மையும் தீமையும் உள்ளபடி எமனருகே இருந்து வாக்குடனே சொல்லும் என்று மகிழ்ந்து உரைத்தார். இருபேரும் நன்றாய் எல்லோரையும் அனுப்பி எமலோகப்பட்டணத்தைச் சேருகிறார். பேரும் பட்டைகள் மிக வெண் சாமரைப் போட்ட, கணக்கரும் நல்ல கற்பகத்து தேர் ஏறி எமதருமன் இசைத்து வந்தார். எட்டுத் திசையும் எங்குமே உத்தமனார் முழங்கினார். திக்குத்திசைகளெல்லாம் சிறப்பான பந்தலிலே கவிவானவர் பாடக்ககூட்டியர்கள் ஆடிவந்தவனர் நாடக சாலைப் பெண்கள் நாட்டியங்கள் ஆடிவந்தனர். பதினெட்டு வாத்தியங்கள் பண்பாக முழுங்கின. வாசங்கள் வீசின வான்கவரிதான் வீசின. பொன்னுலகத்தாரும் போதவே சுழ்ந்து வந்தது. மலர்மாரி பொழிந்தது. பொன்னுலகோர் வாழ்த்தினர்

தேவாதி தேவர்களெல்லாம் சிறப்புடனே வந்தனர். இந்தப்படியே இல்பேரும் அமர்ந்தார். வானமும் புவியும் மற்றும் உலகிலுள்ள எல்லாம் நன்மையும் தீமையும் நன்றாக கணக்கு எழுதினார். எமதருமர் மாளிகையில் நல்லகணக்கர் இருக்கிறார். நான்கு வாசல் வழிக்கு நடுவே ஓர் மாளிகைஹில் சித்தரபுத்திரரும் சிறப்பாக இருந்தனர். பட்டோலை தன்னை பதிவாக வாசித்தார். திருந்தவே நன்மை செய்யதோர் சிறந்த வழிவருவதற்கு வடக்கு வாசல் வழியை வரிசையாய் செய்தார். மாணக்கஞ் சேர்ந்து வயிரக்கால் நாட்டு இடம் பெறவே பந்தல் எழிற்காவணம் போட்டு மாடங்கள் கூட்டி வயிர விளக்கு ஏற்றினார். கூடங்கள் கட்டி குளிர்ந்த மலர் கட்டி நல்ல தண்ணீர் பந்தல்கள் நன்றாக உண்டு பண்ணினார். புண்ணியம் செய்வதற்கு பொருந்த மிக உண்டாகும். அதுக்காக பேரை அவ்வழிக்கு காவல் வைத்தனர். இது தான் கயிலை வழி என்று புண்ணியர்க்கு சொல்லும்படி இசையும் காவலரை திட்டங்கள் செய்து சிறப்புடன் வைத்தார்கள். கீழ்வாசல் அருகே சேவகனை நோக்கி ஞான நிஷ்டை செய்தவர்கள் நல்ல வழிவருவதற்கு, சிவஞான பக்தர் தெரிவிக்க வருவதற்கு பராசக்தி பக்தர்கள் பண்பாயிருபதற்கு மணடபசூளிமையும் வகையுடனே வைத்தார்கள். மாளிகை கூடம் வகுப்பாக செய்தனர். வெள்ளிக்கதவுமிட்டு வேதியரைக் காவல் வைத்தனர். வைகுண்டநாதருக்கு வாழயடிமை செய்தார்கள் வரக்கூடிய வழி ஒன்று வைத்தார்கள். வேறு ஒரு வாசல் விரைவாக வகுத்துத்தரும்படி தூதுவரைக் கூறினர்கள். தெற்கு வாசல் வழிதோறும் முட்கள் பரப்பி, நெருப்பு பரந்து எங்கும் நின்னு எரியும்படி உண்டு பண்ணினார். சுண்ணாம்புஞ்சோறும் தருமணலும் உண்டாக்கினார். பெருங்கழுக்கள் வெட்டி நாட்டினார். கூறை வெளிப்புறத்தில் குளித்த நிழல் இல்லாமல் வைத்தனர். நாயும், நரியும், கட்டெறும்பு கொட்டும் தேன், கொடுமையான விசமுடைய பாம்பு முதலியன நன்றாக உண்டாக்கினார். அரிய பாதகரை அடித்து இழுத்து வரச்சொன்னார். கல்லும் கரடும் கடிய மணல் பரப்பி பாதகரை தண்டிக்க பாவிகளை காவல் வைத்தனர். மேற்கே ஒரு வாசல் வைத்து விதவிதமாய் செய்யும். பார்க்க புழுக்குழியும் நன்றாக உண்டாக்கினார். கருநாயும் செந்நாயும் கலந்துகட்டி நிறுத்துனார்கள்.

குரைக்குந்தலைப் பேய்களை கூட்டமாய் நிறுத்தி வைத்தார். செக்கு உலக்கை, திருகை முதலியன சிறப்பாக உண்டு பண்ணினார். செம்புத்தூளை நாட்டி அதில் தீ எறிய நிறுத்தி வைத்தார். இரும்பிலே தூண்டில்களை எங்கும் நாட்டினார். நிகரில்லாத தரையில் நெருப்பு எரிய, செம்பை உருக்கி பஞ்சமா பதகர்க்கும் பரப்பியே செய்து வைத்தனர். கிங்கிலயர் அங்கு கெட்டியாய் காவல் வைத்தனர்.

இப்படியே வாசல்களெல்லாம் வகுத்து, செப்பமுடன் இருபேரும் சிறப்பாக இருந்தார். இங்கிதங்கள் பேசி இருப்போரும் மகிழ்ந்து வள்ளுவனுக்காள்விட்டு வரவழைத்தார். வள்ளுவனும் வந்து வலமாக வந்து நின்றான். அடியேனை இங்கே அழைத்தது எதுக்கு? என்றான். படி ஏழும் சென்று பறையடிக்க நீ கேளு சீவசெஞ்துக்களெல்லாம் சிறப்பாக தாறைிந்தார். காயிருக்கப் பழமுதிரும் படியடியும் முரசை, அடித்து வாவென்று சொல்ல அனுப்பினார். அதனால் வள்ளுவன் யானையைக் கொண்டு வந்து யானக்குள்ள வரிசைகளை அழமாய் அழங்கரித்து ஆபரணமுள்ளதெல்லாம் அடைவாக பூட்டி, தம்பட்டம் வைத்து தனிக்காவல் வழியேதான், யானை மீது ஏறி புறப்பட்டான் அப்போது துர்க்கை திருக்கோவில் தூரத்தில் தெரிந்தது. யானையை விட்டிறங்கி துர்க்கையப் பணிந்தான். காளி அப்போது அரக்குமதுவு அளவின்றி குடித்தான். பதினாலுலகரிய பறையறைந்து கூறுகின்றான். ஆண்சாதிபெண்சாதி ஆதியே தான் பிறந்த நாலுவகை சாதிகளும் நன்றாகத் தெரிந்தது. பழமுதிரக் வீதியில் வந்து நின்று முறையிட்டு பறையை முழங்கினான். இந்தமொழி கேட்டுடனே எல்லாரும் மகிழ்ந்தனர். அப்பொழுது சிறு புள்ளைகள் பலபேர்கூடி இரைச்சலிட்டுக் கொண்டு எதிராக நின்றார். அப்போது வள்ளுவன் பிள்ளைகள் மீது உண்டான கோபத்தால் அடித்தான் முரசு. அக்குழந்தைகள் கையில் மணலெடுத்து காற்றிலே தூற்றிவிட்டனர். கண்ணில் மணல் விழுந்து கசங்கினான் வள்ளுவன் பூஉதிர, பிஞ்சுதிர பொருக்கனவே மொட்டு உதிர, காயும் பழமும் கலந்து உதிர வேணும் என்று அடி அடி என்று அடித்தான் முரசு. அவனுக்கு மது குடித்த வெறியாலிரங்கால்லை சித்திரபுத்திர் பாற் சென்றே அடி பணிந்தார். எல்லோரும் ஒன்றாக எமலோகம் போய் புகுந்தார். வள்ளுவன் நல்ல தர்மராசனையும் நற்கணக்கு நாதரையும் வந்து முகப்பணிந்தான். மன்னவரே நீங்கள் சொன்ன மாற்றத்தை விட்டு விட்டு கருங்குழியில் பூ முதலும் கருத்தரித்து முன்முதலும், வடு, பிஞ்சு, காயுதிர என்று வள்ளுவன் உரைத்தான். ஏற்றதொரு பறையடித்தான். எல்லோரும் கேட்டனர் என்று தொழுது சொன்னார். இருபேரும் பார்த்து அப்போழுது அவர்களுக்கு அதிககோபம் உண்டாகியது. சொன்னமொழி ஒன்றிருக்கு சொல்லாத மொழிகளை அடித்த வள்ளுவனை கூட்டி வரச் சொன்னார். அவருக்கு கோபம் பெரிதாகிறது. வள்ளுவன் வந்து மலரடியைப் போற்றி செய்தான். வாராய் நீ வள்ளுவன் வாய் மதங்களே உரைப்பாய் என்ற பொழுது வள்ளுவன் அடிபணிந்து உரைத்தான். இப்போது வந்த குறை என்னாலே வந்தது. காளியம்மை எனக்கு அரக்குமது கொடுத்தாள். அரக்குமது வெறியால் முழக்கினேன் முரசை. பிள்ளைகள் துர்ச்சனர் பிரழகேடாய் சொல்லிவிட்டேன். இந்தப்

பிழையை பொருத்தருள வேணும். ஐயா குடித்த வெறியால் குணம்மாறி உறுதியாகும் என்று வள்ளுவன் சொல்லில் மாற்றம் ஏதுமில்லை. வள்ளுவன் எல்லாம் வள்ளுவன் சொல்படியே பூமியில் மகிழ்ந்து வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இதனை எமதருமர் மகிழ்ச்சியுடன் வாழ்வு பெற உரைத்தார். அப்போது புகழ்ந்து,மனுவையெல்லாம் பூலோகத்தில் அவரவரிடத்தில் வீசினார். எமதருமன் சித்திரபுத்திரன் இருவரும் இரத்ன மணிமண்டபத்தில் மணி முடிவைச் சூட்டி வண்மையுடன் இருந்தனர். பட்டோலைகள் தன்னை பரிந்து மிகவாசித்தனர். அப்போது செட்டிச்சி, அம்மையொரு சீமாட்டி, அமராவதிப்பெருமாள் முதலியானவர்கள் அன்னை போல் காத்து அளிப்பார்கள். இப்போது தக்கராசன் தேவி செய்த புண்ணியங்கள் எல்லாம் புத்தகத்தில் அகப்பட்டது. எமதருமர் அதனை இயல்பாக வாசித்தார். இனிமேல் இந்த விவரங்களைக் கூறுகின்றேன். இந்தக் கதையைக் கேட்டவர்கள் ஈசனின் பதம் பெறுவார். நன்றிப் பெருங்கதையை நாள்தோறும் படித்தவர்கள் பாடிப்படிப்பது மட்டுமல்லாமல் பக்தியுடன் கேட்டவர்கள். நாடி எழுதினவர். நல்விரதம் எடுத்தோர். இவர்களுடன் கற்றவரெல்லாம் மகிழ்ச்சி மிகப் படிப்பர். மேலும் அவர் பலமாக பெருஞ்செல்வம் படைத்து வாழ்ந்திருப்பார். ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றி மூங்கில் போல் சுற்றம் பரியாது வாழ்த்தும்படி வாழ வேண்டும்.

அமராவதிகதை

செட்டியம்மை என்ற சீமாட்டியாகிய அமராவதி கதையை பாடுவதற்கு கணபதியே முன்னின்று வந்து உதவவேண்டும். அமராவதி கதை வளர்ந்த காரணத்தை நான் பாடுகின்றேன். தர்மராசாவின் தயவான தேவியாக இருப்பவள் அமராவதி. அது அவரின் நல்ல பெயராகும். பூமியில் செல்வம் பொருந்திமிக உண்டாகியது. மட்டிலாச் செல்வம் வளர்ந்து மிக உண்டாகியது. அன்னை சுற்றத்துடன் அருள் பெறவே வாழ்ந்தனர். முத்தாகிய தொட்டில் கட்டி முடியும் வாழ்வு உண்டாக்கினாள். தவறாமல் தருமங்கள் செய்து வந்தாள் பாவங்களைச் சற்றுப் பக்கத்தில் கூட கேட்டறியவில்லை. இவ்வாறு இயல்புடன் அமராவது வாழ்ந்து வந்தாள். நாவினால் எடுத்து எறியும் தனிநோன்பு கூட இல்லை. நயினார் எழுதிய கணக்கை கனவிலும் கேட்டறியவில்லை. முப்பாலும் காய்ச்சி முடியாமல் வாழுகின்றாள். சிவதலம், விஷ்ணு தலம் முதலிய தலங்களில் தரிசனம் செய்து அறியவில்லை. சித்திரபுத்திரர் நோன்பு சிந்தையிலே வைத்து அறியவில்லை. இவளது செய்திகளை கணக்கர் அறிந்து எமதருமராசனிடம் மகிழ்வுடன் உரைத்தார். அமராவதியின் தருமங்களின் கணக்கை

அணுவளவு கூட விடாமல் கேட்டரிய எமதருமர் கருணையோடு இருந்தார். அவள் செய்த புண்ணியங்களை வரிசையாக கூறுகின்றார். விருந்து என்றால் ஆராய்தறிந்து தட்டியில் அன்னம் கொட்டி, படைபொடிகட்டி பட்டணமேல்லாம் மற்றாருக்கும் அவர்களை ஆராய்ந்து தேடி அமுது மிகக் கொடுப்பாள். நாவில் கேட்டவர்க்கு அமுது கொடுப்பாள். மகேசுர பூசை முதல் எல்லாம் மனம் மகிழ்ந்து செய்வாள். கோட்டையில் தண்ணீர் குளிர்ச்சி மிக உண்டாக்கி பயணாக்கும் நீர் மோர் அருமையாக செய்து வைத்து சித்திரை மாதத்தில் அனைவருக்கும் கொடுப்பாள். சித்திரை மாதத்தில் செழிப்புடன் நற்குடையும் விசிரியும் கொடுத்து வெப்பங்கள் தணித்திருவாள். கன்னிகாதானம் கருதிமுடித்து வைப்பாள். வேதியர்கள் உள்ளமெல்லாம் வரும்பியே கொடுத்திடுவாள். ஆடையில்லாத பேர்களுக்கு ஆடை மிகக் கொடுத்திடுவாள். வாரத்தில் சனிக்கிழமை தவறாமல் எண்ணெய் கொடுத்து வந்தாள். நந்தவனத்தை உண்டாக்கினாள். அதிலுள்ள மலர்களைப் பறித்து கோவில்கள் தோறும் அர்ச்சனை செய்தாள். தூரத்துக்குத் தூரம் சுமைதாங்கி என்ற பட்டியக்கல்லை நட்டு வைப்பாள். தாகத்துக்குத் தாகம் கல் கிணறு தோண்டி வைத்தாள். பிள்ளைகளுக்கு தீன்பண்டங்களை வைத்தாள். வெட்டப்படும் தலைக்கு போருள் கோடுத்து உயிர் மீட்டு வாள். வட்டியில்லால் பிறருக்கு கடன் கொடுத்து வாங்குவாள். வேந்தனுக்கு அஞ்சி, விரும்யவர்க்கு தேறுதலைச் சொல்லி படைக்கலங்கள் படைப்பாள். கன்னாங்களைக்குத்தி களவு செய்ய வருபவர்களுக்கு பயப்படாதே போ என்று ஆதரவு சொல்லுவாள். ஏழை, பரதேசிகளுக்கு இல்லமும், இடமும் கட்டி வைத்தாள். இடிந்த மட்ட முதலானவைகளை எடுத்துமே புதுப்பித்து கட்டுவாள். அதில் பூப்பந்தல் போட்டு புதுக்கனிகளை அனைவருக்கும் கொடுப்பாள். அனாதிப்பிணத்தை அடக்கி வைப்பாள் பார்த்தீரே. ஆயிரம் கோட்டை அளவு அரிசி அன்றைக்கன்று செலவிடுவாள். அதற்கான காய்கறியும் அப்படியே கொடுப்பாள். சம்சாரம் செல்லுவன முழுதும் தடையில்லாமல் கொடுப்பாள். இதுபோல் தருமம் குறையாமல் செய்து அமராவதி தானும் மகிழ்ச்சியுடன் இருந்தாள். விரதமும் நோன்பும் விரும்பாத பாவி என்று கணக்கும் அங்கு கடுங்கோபம் கொண்டார். கடுங்கோபம் உண்டாகினாலும் என்னதான் செய்தாலும் ஏழையாளானாலும் விடமாட்டோம் என்று உறுதி கொண்டார். பூமியில் பொருந்திய வாழவில்லை அதனால் அமராவதிரைய அழைக்க வேணும் என்று கருனக்கருக்குக் கை கூலியிடம் கூறினார். கணக்கருக்குக் கூலி கட்டுவார் உலகில், ஆனால் இது எள்ளளவும் தெரியாமல் அமராவதி இருந்தாள். எமதூதரை ஏவி அமராவதியை அழையுங்கள் என்றார். அதற்கு அவளது வீட்டின் வாசலை அடைய அடையாளம் என்றார்.

அமராவதியை வீட்டின் வாசலை அடைய அடையாளம் கேட்டீரே. தென்னை மரங்களும் சேரவே சூழ்ந்து நிற்கும். கப்பலும், படகு முதலியன கரையருகே வந்து நிற்கும். தீவுகளிலுள்ளதுகள் சேகரமாய் வந்து நிற்கும். பசுக்கள் ஒரு கோடி நிற்கும் இதெல்லாம் பைங்கொடியாள் அமராவதி வாசலிலே வந்து நிற்கும் பிச்சைக்காரர், பரதேசிகளுக்கு அன்னம் வழங்கிடுவாள். இதனால் நற்கணக்கர் தூது வரை ஏவினார். அப்பொழுது அவர்களுக்கு அதிகக் கோபம் உண்டானது. இரும்புத்தடியும், ஆயுதமும் பாசக்கயிறும் பெருவலையும் எடுத்து மனையாட்டியாகி அமராவதி வாசலில் சுற்றி வளைந்தனர். அப்பொழுது வாசலில் நின்றபடி அமராவதியின் வலிமையை அறிந்தார்கள். பரதேசிக்கு அன்னம் கொடுக்கிறது. கூனர் குருடர் குறைக்கால் முடவர்க்கு ஆராய்ந்து பார்த்து அமுது கொடுக்கிறது தருமங்களெல்லாம் தயவுடனே செய்கிறதும் இதெல்லாம் கண்ட எமதூதர்கள் இயல்பான அமராவதியை அழைத்து வரச் சொன்னார்கள். அமராவதியை அழைத்து போனோம் என்றால் தருமகங்ளெல்லாம் தவிர்ந்து விடும் பார்த்தீரே. அன்னக்கொடிகளெல்லாம் அலைந்து பார்த்தீரே. இவ்வாறு தூதர்கள் சொல்லி மனம் கலங்கினர். கையிலுள்ள தடியை கீழே போட்டு விட்டனர். அவர்கள் நின்று பெருமூச்சும் நெடுமூச்சும் சொறிந்தனர். அப்பொழுது அமராவதி ஓடிவந்தாள். அவள் தூதுவர்கள் கலங்கி இருப்பதைக் கண்டாள். அமராவதி அத்தூதுவர்களின் முகத்தைப் பார்த்து வாருங்கள் மக்களே மயங்கி ஏன் இருக்க வேண்டும்? இத்தனை நேரமட்டும் இளைப்பாயிருந்தீரே. அடியாளாகிய என் பேரில் அபராதம் ஒன்று உண்டு பார்த்தீர்களா? என்று சொல்லி அமுதுகொள்ளுங்கள் என்றார். அதற்கு எமதூதர்கள் இப்பொழுது நாங்கள் இனியமுது கொள்ளவில்லை என்றனர். அமராவதி அவர்களை நோக்கி வாருங்கள் மக்களே வருந்தி மெலிவது ஏன்? கன்னமிட வந்தீரே? களவு செய்ய வந்தீரே? வேந்தனுக்கு அஞ்சி வேண்டி வந்தீரே? தாய்க்குத்தாயாகி தானிருந்து உதவுங்கள் தங்களுக்கு உண்ண உணவும் உடுத்த உடையும் நான் தருவேன். பயப்படாமல் நீங்கள் அன்னங்கள் யோசிக்க வேண்டும். வாருங்கள் என்று எமதூதர்களை விரும்பி அழைத்தாள். இவ்விடத்தில் அமுது பொசித்தோம் என்றார். எங்களது நயினார் பட்டோலையில் எழுதிவிடுவார். இதனால் நாங்கள் அமுது பொசிப்பதில்லை. நீங்கள் இருந்து அரசாள வேண்டும் என்று அமராவதியிடம் கூறிவிட்டு தூதுவர்கள் சென்றார்கள். தூதுவர்கள் கணக்கராகிய சித்திரபுத்திரருடைய பாதங்களை தொழுதுவிட்டு சித்திர புத்திரரே சீமானே கேளுங்கள். ஐயா செட்டிச்சியினால் எங்களுக்கு தீங்கழுவில் போட்டாலும் பரவாயில்லை. அமராவதியாகிய

செட்டிச்சியை நாங்கள் ஒரு நாளும் தீண்டமாட்டோம் என்று கூறினார்கள். அதனால் கணக்கருக்கு இருகண்ணும் சிவந்தது. உங்களை உண்ணு என்று உபசாரம் சொன்னாளோ என்று கூறிவிட்டு வெறு ஒரு தூதுவரை வரவழைத்து, விவரம் சொல்லி அனுப்ப நினைத்தார். அத்தூதுவரை அழைத்து அமராவதி என்று ஒருத்தி ஆன தருமம் செய்து கொண்டு வாழ்கிறாள். என் மீது நோன்பு கொள்ளவில்லை என்னையும் நினைக்கவில்லை. பூமியில் செல்வம், புகழ் பெறும்படி இருக்கிறாள். பூமியில் இருப்பவர்களுக்கு அமுது செய்கிறாள். அவளை இங்கு இப்பொழுது அழைத்து வர என்று சித்திரபுத்திரன் அயல்பாக கூறி அனுப்பினார். அப்பொழுது அந்த தூதர்களுக்கு கோபம் உண்டானது. அரும்புத் தடியை எடுத்தார் வாழ்வரசியாகிய அமராவதி வாசலில் எமதூதராகிய ஏற்றகிங்கிலியர் வந்து வளைத்தார்கள். நந்தவனம் வைத்து வாசனை மிகும் பூவை பறிக்கிறதும் அன்னங்கொடுத்து ஆதவரு சொல்லுவதும் சத்திரங்கள் கட்டு தயவாய் நடக்கிறதும் தருமங்களெல்லாம் தவறாமல் செய்கிறதும் முதலிய அமராவதியின் செயல்களை எமதூதர்கள் கண்டவுடன் கவலைப்பட்டனர். தூமர்களாகிய கிங்கிலியர் கவலை அதிகம் உண்டாகி கைத்தடியை கீழே விட்டெறிந்தார். தலையிலே கையை சலிப்பாயிருந்தனர். அப்பொழுது அங்கு அமராவதி வந்தார். அமராவதி அவ்வெமதூதரை நோக்கி வாருங்கள் மக்களே வாடி இருக்க காரணம் என்ன? அமுது உண்ண வாருங்கள் என்று அழைத்தாள். அப்பொழுது அவளிடம் பாணக்கம் வாங்கி எமதூதர்கள் பசியாறக்குடித்தார்கள். இப்பொழுது இந்த அமராவதியை அழைத்துப் போனால் தருமங்கள் எல்லாம் தவறிவிடும் என்று சொல்லியும், ஒரு குறையும் இல்லையே என்று கிங்கிலராகிய எமதூதர்கள் அமராவதியை படிக்காமல். சித்திரபுத்திரனே! சீமானே கேளும். ஐயா எங்களையும் நீங்கள் என்னபழி செய்தாலும் செட்டிச்சியைக் கூட்டி வரமாட்டோம் என்று கிங்கிலியர் கூறியவுடன் கணக்கர் அதிகோபம் உண்டானது. உங்களுக்குக் கூலி கொடுத்தாளா ஊதாரி, பாணக்கம் வாங்கிப் பதிவாய் குடித்தீர்கள். இதுக்குத்தான் உங்களை அனுப்பி வைத்தேனா என்று உத்தமனார் அக்கிங்கிலியர்களை கோபமுடன் கூறினார். அவர் அதையும் கணக்கில் எழுதிக்கொண்டார். சினந்தூ நீறி மிகவும் உரைத்தார். இப்போது வேறு தூதுவர் ஒருரை வரவழைத்தார். பெற்றதாயைக் கொண்டற பெரும்பாவியான மோட்டையனையும் கொண்ட கணவனைக் கொன்ற சொலைப் பிராமணியையும் அழைத்தார் உத்தமனார். அவர்களை அழைத்து ஏவினார் அரை நாழிகைப் பொழுதில் அழைத்து ஓடி வாரும் என்று அந்த மொட்டையனையும், பிராமணியும் அனுப்பினார் கணக்கர். இருவரும் ஆயுதங்களை எடுத்து அமராவதியின் வாசலை

அடைந்தார்கள். வாழ்வரசியாகிய அமராவதியின் வாசலிலே வந்து நின்றார்கள். வீட்டின் ஒரு புறத்தில் மறைந்து இருந்தார்கள். தான தருமங்கள் தயவாய் நடக்கிறதை இத்தனையும் கண்டு கணக்கரிடம் எடுத்துரைத்தான் மொட்டையன். அமராவதி எத்தனை தருமங்கள் செய்தாலும் அவளை விடுவதில்லை என்று நயினாரின் சொல்படி நடந்தான் மொட்டையன். அவனது இரண்டு கண்ணும் சீறியது. அப்பொழுது அமராவதி தீர்த்தமும் ஆடி தெரு வீதியில் குறுக்கிட்டான். அப்பொழுது செட்டிச்சியான அமராவதி கவலையுற்றாள். துக்கம் உண்டாகித்துடித்தாள். வலது கண்ணும் துடித்தது. மயக்கம் பிறந்தது. மதி மறந்தது அப்பொழுது ஏதோ கொடுமை இனி கேட்க வேணுமென்று நினைத்தாள். பூனை குறுக்கிட்டதால் கொடுமை சேரும் என்றாள். தருமங்கள் செய்ததால் தப்பித்தோம் என்றாள். அமுதுகரிகளை அப்போது எடுத்து தெருவெல்லாம் திரிந்து ஆராய்ந்து தேடி அமுது கொடுத்தாள் அமராவதி. சட்டதிட்டமெல்லாம் செய்வித்தாள் அமராவதி. ஒன்று தவறாமல் உள்ளபடியே நடத்தினாள். வாழ்வரசியான அமராவதி மனையில் வாழ வந்தாள். இருக்கும் இடத்தில் இயல்பாக இருந்தாள். பாட்டிமார் பேத்திமார் இவர்களோடு பிரியமுடன் இருந்தாள். பாலோடு நெய்யும் பதிவாக அமுது அருந்தினாள். சாந்தும் யுனுகும் சவ்வாது முதல் அணிந்தாள். மலர்களெல்லாம் போதும்படி சூடினாள். மகிழ்ச்சியாக இருந்தாள். இவ்வேளையில் சொல்லவந்த கூற்றுவனும் கோலப்பிராமணியும் வந்தனர். அமராவதி இருக்கும் அவ்வேளை பார்த்து அவளது வீட்டின் வாசற்படியில் வந்து நின்றார்கள். இதனைக் கண்ட அமராவதி கர்மமோ என்று கூறினாள். இத்தனை நேர மட்டும் இளைப்பாயிருந்தீரே நீங்கள் இருவரும் இனிய அமுது கொள்ளுங்கள். சத்திரத்தில் வாரும் என்று தான் விரும்பிச் சொன்னாள். அதற்கு கூற்றுவனும் மான பிராமணியும் இப்பொழுது நாங்கள் அமுது கொள்வதில்லை என்று அமராவதிக்கு கூறினர். பலகாரம் நான் தருவேன் பதிவாக கொள்ளும் என்று அமராவதி கூற்றுவனுக்கும் பிராமணிக்கும் கூறினாள். அதற்கு அவர்கள் நாங்கள் பலகாரம் பொசிப்பதில்லை என்று அமராவதியுடம் கூறினர். அப்போது எதன் மீது ஆசை என்று அமராவதி கேட்க அதற்கு பிராமணி பாலின் மேல் ஆசை என்றாள். பிராமணிக்கு பாலும் பழமும் பரிவாகக் கொண்டு வந்தாள். நாங்கள் காய்ச்சின பால் கண்ணில் பார்த்ததில்லை. கணக்கில் காணாத பால் கறந்து தரவேணும் என்று பிராமணி கேட்டாள். இதுவும் ஒரு சோதனையோ என்று மனதினுள் எண்ணி பாலைக் கயிறும் கடக்காலும் எடுத்து அன்பாக தந்தாள். பசுவின் பாலை கொண்டு அமராவதி வரும் பொழுது கொல்ல வந்த கூற்றுவன் குடுகுடுன்னு

ஓடிவந்து கொம்புதனிலே ஏறி அமர்ந்தான். கொற்றவனும் இருந்தான் அணைய வென்று அதிக கோபம் உண்டானது. ஏனெனில் அந்த பசுவுக்கு காடி கழு நீர் கலந்து வைக்கவில்லை. வைக்கல் பிடுங்கி வாரி வைக்கவில்லை. பசுவுக்கு குத்தி எடுக்கும் கூறிய கொம்பு இருப்பதால் அமராவதி கலங்கினாள். பசுவின் கோபம் கண்டு அமராவதி கலங்கினாள். கதறத் கொடுத்தாள். காரிகையாளான அமராவதி ஏங்கி அழுதாள். தருமங்கள் செய்ததிலே கேடு வந்ததுண்டோ? எமலோகம் தெரிந்ததோ? என்று அமராவதி ஏங்கி அழுதாள். பொல்லாதக் காலமாய் பூனை குறுக்கிட்டது. துர்க்குளிகள் காட்டினதும் சோதனைகள் உண்டாச்சு. குறைகள் எதுவோ? என்னமோ என்று தெரியவில்லை. எண்ணாததை எண்ணி ஏங்கி அமராவதி உயிர் விடுத்தாள். கொல்ல வந்த கூற்றுவனும் பிராமணியும் இருவரும் சேர்ந்து பாசக்கயிறும் பறுவலையும் எடுத்து கண்மண்டை பிதுங்க கட்டினார்கள். இரும்புத்தடியால் இரக்கம் இல்லாமல் கள்ளியவள் பாசக்கயிறு பிடித்து அடித்தான். கூற்றுவனும் அமராவதியை காமவல்லி என்று ஒரு காற்று வந்து வீசியது. ஆகாரம் தரும் முன்னொளி அதிக கோபத்தோடு வந்தது. இரும்பு தடி முறிந்து இறக்கம் இல்லாதவர் விழுந்தனர். பாசக்கயிறும் பருவலையும் தெறிந்தது. அப்பொழுது கூற்றுவனும் பிராமணியும் திடுக்கிட்டு நின்று தடுமாறினார்கள். இவ்வளவு தருமங்கள் அனிதாக செய்தாள் அமராவதி. இவளை நாம் பிடிக்காது விட்டு விட்டால் இயல்பு கணக்கர் என்ன சொல்வாள்? கோபித்து கண் சிவந்து கொலைகளால் போட்டிடுவார். எப்படியாவது அமராவதியை அங்கு கொண்டு போக நினைத்தார்கள். இரண்டு பேரும் பூட்டினார்கள். அமராவதியைக் கட்டி இழுத்தார்கள் அரசர் முன்பாக கொண்டு வந்து விட்டார்கள். சித்திரபுத்திரரும் சீறியே சொன்னார். தருமத்தைத் தாயவாய் நினைத்தாயே என்று சொல்லி அங்குள்ள தூதரிடம் அமராவதியை பிடரியிலே குத்து என்றார். கணக்கர் இரு கண்ணும் சிவந்தார். அமராவதியை கட்டாய் கட்டி பிடரியிலே குத்தி செப்புத்தூயோடு சேர்த்து கட்டினார். நாராசங்கினைக் காய்சிசெயின் நடுவிலே ஊத்து. உச்சியில் ஆணி ஓங்கி அடி என்று தூதரிடம் கூறினார் கணக்கர். அமராவதிக்கு அதிக கோபம் உண்டானது. தண்ணீர் தவிக்குது என்றாள். அமராவதியின் அந்த வார்த்தையை சித்திரபுத்திரனார் சீமானார் கேட்டார். செம்பை உருக்கி தெளியவைத்து கொடுங்கள் என்றார். அதன்படி எமதூதர்கள் அமராவதிக்கு செம்பை உருக்கி தெளிய வைத்து கொடுத்தார்கள். அது பாணக்கம் என்று மகிழ்வோடு அமராவதி குடித்தாள். இதை அறிந்த கணக்கர், மழுவையும் காய்ச்சி வைக்கச் சொன்னார். சந்தனச் சேறாக குளிர்ச்சியென்று அமராவதி அமராவதி பூசிக்கொண்டாள். அப்பொழுது ஒரு காற்று பூமியில் வந்து வீசியது.

அதனால் அமராவதியைக் கட்டிய கயிறு தெரித்து அதிகத்தொலைவில் விழுந்தது. எனவே கணக்கர் அதிக கோபம் கொண்டார். ஐந்நூறு காத அகலமுள்ள பெரிய கட்டுகளின் ஊடே, கல்லும் கறடும். காரமுள்ள முதலியன அமராவதி மேல் படும் படி கட்டியிழுங்கள் என்றார் கணக்கர். அதனால் கண்விழி பிதுங்கியது இதுபோல தூதுவர்கள் நாடொங்குச் இழுத்தனர். அப்பொழுது அதிசயங்கள் உண்டானது. பொல்லாத காடாக இருந்தவையெல்லாம் பூங்காவனமாக மாறியது. மலர்கள் மலர்ந்து பூஞ்சோலை உண்டானது. அதனால் சாந்து புனு சவ்வாது மணம் வீசியது. தாமரைத் தடாகங்கள் உண்டானது. இந்திரலோகத்திலுள்ள பொன்கொடியான இந்திராணியைப் போல வாசம் பொருந்தியே மன மகிழ்ந்து இருந்தாள். அமராவதியைத் தருமங்களெல்லாம் காத்து நின்றன. அங்கு காற்று வந்து அமராவதியைக் கட்டிய கயிறை தெரித்திப்போகச் செய்தது. தூதுவர்கள் ஓடி வந்து கணக்கரிடம் உரைத்தனர். பொல்லாத காடெல்லாம் பூங்கா வனைமாச்சு ஆனையைக் கட்டும் கயிறும் விழுந்தது என்று எமதூதர்கள் கணக்கரிடம் கூறினார். அதைக் கேட்ட கணக்கர் செப்புத் தூணை நாட்டி அது சிறக்கும்படி காய்ச்சி அந்த செப்புத்தூணோடு சேர்த்து இருக்கு என்று தூதர்க்குச் சொன்னார். கொல்லரைக் கூட்டி வந்தனர். குறடுகளை காய்ச்சி கம்மாளர் வந்து நின்றனர். குறடுகளை காய்ச்சி பிடுங்கவே அமராவது எமபயமுடன் இருந்தாள். அமராவதியின் கண்கள் தெரித்து விழுமாறு கன்னத்தில் போடு என்று கணக்கர் தூதரிடம் சொன்னார். தண்ணீர் தவிக்குது என்று அமாவதி கூறினாள். ஈயத்தைக் காயச்சி இதம்பெறும்படி கொடுத்தார்கள். அதை பண்ணீராக நினைத்து அமராவதி குடித்தாள். அதையும் அறிந்து கணக்கர், இரும்பு உலக்கையால் அடி என்று தூதரிடம் கூறினார். உத்தமனார் சொல் கேட்டு அடித்தவுடன் யானை போல் வீறிட்டுக் கத்தினாள் அமராவதி. அந்த சத்தத்தை சிவபெருமான் அறிந்தார். அதனால் அந்த செட்டிச்சியான அமராவதி நோகாமல் இருப்பதற்கு மின்னலையும் மழையும் உண்டாக்கினார். அங்கு காற்றும் புயலும் கனமாக வந்தது. காய்ச்சிய செம்புத்தூண் எல்லாம் குளிந்து போனது. காய்ச்சியே கொல்லர் குறடு குளிந்து போனது. அமராவதி சுயரூபத்துடன் தெளிவாக இருந்தார். அதனால் அடுத்த உபாயம் செய்தார் உத்தமனார். அரை அளவுள்ள குழிகளை அழகாக வெட்டினார். அதில் செட்டிச்சியம்மை அமராவதியைச் சீராக நிறுத்தினாள். கைகளைப் பின்னக்கட்டி உருட்டுக்கட்டாக நிறுத்தினார் கணக்கர். உச்சி மயிரை ஒரு மிக்க வகிர்ந்து ஒரு முடியை மூன்று வகையாகப் பிரித்து மூன்று திசையிலுள்ள மரத்தில் முடிந்தார் கணக்கர். ஆனையைக் கொண்டுவந்து இடித்து

விடு என்று தூதரிடம் கணக்கர் கூறினார். இதைக் கேட்டவுடன் அமராவதி ஏங்கினாள். அப்போது தூதுவர்கள் அங்கு வந்து யானையை இடரிட செய்தனர். அப்பொழுது செய்த தருமங்களெல்லாம் அழைத்து மிக ஓடிவந்தது. காற்றும் புயலும் கடுகெனவே தான் அடித்தது. பூமியில் அக்காற்று எல்லோரையும் அமுக்கி ஏறிந்தது. கணக்கர் அதையும் அறிந்தார். உடனே அட்டை வாழும் குளத்தில்அமுத்தத்தள்ளு என்று எமதூதர்களுக்கு கட்டளையிட்டார். அமராவதியை அட்டைக்குளத்தில் தள்ளியவுடன் அவ்வட்டைக் குளம் தாமரை நிறைந்த தடாகமாக மாறியது. அந்த அட்டைக்குளத்தில் தள்ளப்பட்ட பாவிகள் எல்லாம் அமராவதியால் மோட்சம் அடைந்து சிவலோகம் சென்றார்கள். அந்த குளம் செட்டிச்சியாகிய அமராவதியால், வாசம் மிகுந்து மணந்து இருந்தது. அதனை அறிந்த கணக்கர் அமராவதியை செக்கிலே போட்டு திடுகு என்று ஆழிகைக்கு கட்டளையிட்டார். அழிகை சென்று வாணியரைக் கூட்டி வந்துடங்களை எல்லாம் முறுக்கினார். அந்த சமயத்தில் அங்கு உருவரும் இல்லாமல் தாயில்லாத பிள்ளை நின்று தவித்துக் கொண்டிருந்தது. அதனைக் கண்ட அமராவதி அந்த பிள்ளை எடுத்துப் புழுதி எல்லாம் முடைத்தாள். கண்ணீரைத் துடைத்தார்கள். அக்குழந்தையை உடனே அனுப்பினாள். அப்பிள்ளைக்கு ஆதவரு சொல்லி அனுப்பினாள். வாணியர் வடத்தை முறுக்கி உடனே ஒடி வந்தார்கள். அவர்கள் செட்டிச்சியான அமராவதியை செக்கிலே போட்டு ஆட்ட வேணுமென்று அங்கு வந்தார்கள். அப்பொழுது அமராவதி சிவனை நினைத்து அழுதாள். அப்பொழுது ஒரு காற் பூமியில் உண்டானது. அதனால் ஆலைகள்பட்டு அழகு வடம் எல்லாம் முறிந்தது. செப்பும் தகர்ந்தது. செக்கு உலக்கையும் முறிந்தது. அப்பொழுது தூதவர்கள் எவரையும் காணவில்லை என்று ஒடி வந்து வாணியர்கள் கணக்கரிடம் முறையிட்டனர். ஆகாயத்திலிருந்து வந்த காற்று அதிக கோபம் உண்டாகி செக்கைத் தகர்ந்தது. செக்குலக்கையை முறித்தது. ஓடினார் தூதவர்கள் அவர்கள் எவரையும் காணவில்லை. ஆனால் அமராவதி மட்டும் மன்னரைப் போல வீற்றிருந்தாள் என்று வாணியர் கணக்கரிடம் முறையிட்டனர். கணக்கர் அதைக்கேட்டு கண்கள் இரண்டும் சிவந்தார். அமராவதியை அழிநரகில் தள்ளும் என்று சொன்னவுடன் வாணியர்கள் அமராவதியை அழிநரகில் தள்ளனர். நல்ல பெண்ணாக விளங்கிய அமராவதி நரகத்தைக் கண்டாள். அப்பொழுது நரகத்திலுள்ள நரகத்திலே கிடந்த பாவியர்கள் எல்லோரும் அமராவதியைப் பார்த்தவுடன் சிவலோகம் சேர்ந்தார்கள். நரகக் குழியெல்லாம் நல்லகுழி ஆனது. அதையும் கணக்கர் அறிந்து கொண்டார். எண்ணையும் பிண்ணாக்கையும் எடுத்து அமராவதி தலையில் வைத்து விற்றுவரச்சொல்லி விடைகொடுத்து அனுப்பினார் கணக்கர். அமராவதி தலையில்

எண்ணையும் பிணக்கையும் ஏற்றி வைத்து ஏழு தெருவும் போயி விற்று வரும்படி எமதூதர்கள் சொன்னார்கள். ஆனால் அங்கு வாங்க ஆள் இல்லை. கூடப்பிடுவாரும் இல்லை. பட்டணத்துள் வந்தவுடன் பலபேர்கள் எல்லாரும் அமராவதியாகிய புண்ணிய ரைக் கண்டனர். புகழ்ந்து கொண்டாடினர். அவரிடம் எண்ணையும் புண்ணாக்கும் வாங்ககலாமென்று வந்தவரை வரவிடாமல் எமதூதர்கள் ˚ தெருக்கதவை அடைத்தனர். உண்மையும் அமராவதி கண்டாள். அதனால் எண்ணையும் பிண்ணக்கையும் தெருவெல்லாம் சேரும்படி சுமந்தாள். கழுத்து தெரித்து கண்மண்டைதான் பிதுங்கியது. இது அநியாயம் என்று அமராதி அழுதாள். ஐயயோ தெய்வமே அரும்பாவம் செய்யாதே என்று அழுதாள். இந்த விதிகளெல்லாம் எனக்கோ வரவேணும் என்று அமராவதி அழுதாள். இந்த விதியை நினைத்த அந்தணர் வீதியில் வந்தாள். அப்பொழுது பிராமணியும் ஓடி வந்து எண்ணையும் பிண்ணாக்கும் இறக்கு மென்று அமராவதிணைக் கூறினாள். அந்தக்கணமே அப்போதே தலைகாட்டை இறக்கினார் அமராவதி தண்ணீர் தவிக்கு என்று அமராவதி கூறினாள். உடனே பிராமணி நீர் மோர் அமராவதி நிறைய கொண்டுவந்து கொடுத்தாள். அந்த நீர் மோரை அமராவதி வாங்கி வயிறு முட்ட கொடுத்தாள். அதனால் தாகம் தீர்ந்து. செட்டிச்சியாகிய அமராவதிக்கு பிராமணி நல்லமொழிகளை உரைத்தாள். அமராவதி அதை கேட்டக முனைந்தாள். அன்னமே தேனே அமராவதியாளே நீ எத்தனை தருமங்கள் நிலையாகச் செய்தாலும் சித்திரபுத்திரரைச் சிந்தையில் நினைக்கவில்லை. புண்ணியவன் என்று கூறவில்லை. அறிவில் கூட திட்டவில்லை. பசுவின் வயிற்றிலிருந்து பாலகனாய் பிறந்தவர் சித்திரபுத்திரன். அவர் எமதருமர் வாசலிலே இருந்து கணக்கு எழுதுகிறார். அவரை நினையாமல் அநியாயம் வந்தது. தருமங்கள் எல்லாம் தவிடு பொடி ஆனது. அண்ட புவனங்கள் எல்லாம் அறிந்து கணக்கெழுதக்கூடியவர். புண்ணியனர் வந்து பிறந்தது. அறியவில்லையா? இத்தனை பாடுபட்டும் எள்ளளவும் புத்தியில்லை. அவரை நினைக்காமல் அவதிமகப்பட்டாயே அவர் மீது நோன்பு இருக்க அறிவிக்க வேணும். உன்னால் இது உலகெங்கும் அறியப்பட்டது. அதனால் உன்னை கூட்டி வந்து கோரணிகள் செய்கின்றார். இவ்வாறு பிராமணி எடுத்துரைத்தாள். அதனால் அமராவதிக்கு அறிவு உண்டானது என்று பிராமணி அமராவதிக்கு கூறினாள். சித்திராபுத்திரரே சிவனார் பெருங்கணக்கர் பாவங்கள் புண்ணியங்கள் பகுத்து எழுத வந்தவரே. காணாத காட்சியெல்லாம் காட்டினார். சீமானும் அவரை நினைக்கவில்லை. அல்லல் எல்லாம் பட்டேனே. நான்

அறியாமல் அவதியுற்றேன். என்று அமராவதி கூறி மண்ணில் விழுந்து மலரடியை வணங்கினாள். அறிவு எனக்கு வந்தது. பசுவயிற்றில் பிறந்த பாலகரே செய்தபிழையை பொறுப்பீர் என்று மலரடியை வணங்கினாள். உடனே கணக்கருக்கு கருணை மிக உண்டானது. மனம் கருணை காட்டத்திரும்பியது.அதனால் அவர் சிலவார்த்தைகளை அமராவதிக்கு கூறினார். உடலெல்லாம் குளிர்ந்தது. மனம் மகிழ்ந்தது. என்னை நினைத்ததனால் எனது உடன் பிறப்பும் நானும் உனக்கு நல்ல பலன் கொடுப்போம் என்று கணக்கர் அமராவதிக்குக் கூறினார். தானங்கள் பண்ணிவர உடனே அமராவதியின் வீட்டிற்கு கணக்கர் அனுப்பினார். பிராத்தனை செய்து தவத்தையும் முடித்து, அமராவதி சிவனை நினைத்தாள். திருநீறு அணிந்தாள். சித்திரபுத்திரரே சீமானே என்று சொல்லி கணக்கரிடத்திலே அமராவதி வந்து நின்றாள். அப்பொழுது கணக்கர் யானையை வரவழைத்தார். பட்டு முதலுள்ளதெல்லாம் பண்பாகத்தான் கொடுத்தார். ஆபரணமெல்லாம் அழகாகக் கொடுத்தார். எல்லாப் பழங்களையும் இனிமையாகக் கொடுத்தாள். அப்பொழுது அமராவதி தருமத்தை எல்லாம் தவறாமல் செய்தாள். என்னை இழுத்து வந்து இடதுகள் செய்வது ஏன்? அதை வகைவிபரமாக சொல்லவேண்டும் என்றாள். அப்பொழுது கணக்கர் அறிவித்தார் அந்த அமராவதிக்கு உத்தமியே பிழை பொறுப்பாய் உன்னாலே எனது பேரு உலகமெல்லாம் புகழ்பெற்றது. அமராவதியே நான் செய்த பிழைப்பொறுப்பாய் எனது நோன்பு இருந்தவர்கள் பரகதி அடைவார்கள். இந்தளரதம் எடுக்காமல் போனவர்கள் நீ பட்டதண்டனைகள் நிலையாகக் கிடைக்கும். அந்த நிலை வராமல் உன்னை அழைத்தார்கள். என்னால் நீ மோட்சம் அடையவே உன்னை நான் இங்கு கூட்டி வந்தேன் என்று கணக்கர் அறிவித்த செய்தியை கேட்டார் அமராவதி. அதை அறிவித்தால் நானும் கணக்கருடம் கூறினாள். சுகமான என் பிறப்பே உனக்குச் சொல்லுகிறேன் கேட்பாயாக சித்திரை மாதம் பதினெட்டாம் தேதியில் சித்திரைக்குச் சித்திரையில் சீரர் பவுர்ணமியில் சூரியனைப் பார்த்து தொழுது வணங்க வேண்டும். இதுவே சூரிய நமஸ்காரம் ஆகும். புதுப்பணிகளை எல்லாம் பூட்டி அலங்கரிக்க வேண்டும். வீட்டினை மொழுக வேண்டும். சந்தனத்தால் கோலமிட வேண்டும். வாழை, கமுக முதலியவற்யை வான் நிறுத்த வேண்டும். பழக்குலைகளைக் கொண்டு பாங்காய் அலங்கரிக்க வேண்டும். மஞ்சள் குலையும் மாங்குலையும் கட்ட வேண்டும். அங்கு பலகையை போட்டு பாவாடையை மேல்விரிக்க வேண்டும். வேழமுகத்து விநாயகனை முன்பு வைக்க வேண்டும். பூரண கும்பம் வைக்க வேண்டும். பொன்னின் விளக்கேற்ற வேண்டும். நிறை நாழி வைத்து நிறைமரக்காலும் வைக்க வேணடும். அடைக்காயும்

வெள்ளிலையும் அன்புடன் படைக்க வேண்டும். கடலை, துவரை முதல் தட்டப்பயிறு வரை வைக்க வேண்டும். பயிறு வகை உள்ளதெல்லாம் பாங்குடன் படைக்க வேண்டும். பலகார வகைகள் பாங்குடன் செய்து வைக்க வேண்டும். பச்சரிசி பாணக்கம் முதலியன தரவேண்டும். உப்பு முதல் கற்பூரம் எல்லாம் படைக்க வேண்டும். எள்ளு பருத்தி முத்து முதலியன வைக்க வேண்டும். இத்தனையும் நன்றாக இயல்பாக வைக்க வேண்டும். புதுப்பானையில் பொங்கள் வைத்து இறக்கி வைக்க வேண்டும். திருக்கணகம் அமுது சேகரமாய் வைக்க வேண்டும். உருக்கு நெய்யும், பொறிக்கறியும், பாற்குழம்பும் கறிவகைகளுள்ள எல்லாம் கட்டாயம் வைக்க வேண்டும். தயிர் முறையுடன் சகலகறி வாகத்துடன் படைக்க வேண்டும். நேம நிட்டையாக நைவேத்தியம் செய்ய வேண்டும். அரகா என்று அடிபணிய வேண்டும். தூவப்புகை காட்டி தேத்திரங்கள் செய்ய வேண்டும். நன்றாக துடம் பணிமாறி காட்ட வேண்டும். குரவையிடவேண்டும். வாத்தியங்கள் எல்லாம் வகை வகையாக முழங்கவேண்டும். ஆண்டவரே என்று அடிபணிந்து வணங்கவேண்டும். ஆசாரியர் தன்னை அன்புடன் கூட்டி வந்தார். சூட்டாக நன்றாக கதைகள் படிக்க வேண்டும் அதை இன்பாக இப்படி நோன்பு இயல்பாக இருந்தவர்க்கு இந்தக்கதைணை எழுதிப்படித்தோர்க்கு புண்ணியம் உண்டு. எல்லாப்புகழும் கொடுப்போம் எல்லாம் நாமே அமராவதியே புத்திசம்பத்தும் புண்ணியம் உண்டாகும். மாங்கிலியம் வாழ்ந்து மக்கள் தழைத்திருந்தனர். இப்படி நோன்பு எல்லாரும் இருக்க வேண்டும். பூலோகம் எல்லாம் பறைந்து புகழ வேண்டும். இவ்வாறு அமராவதிக்கு கணக்கர் இயல்பாய் உரைத்தார். நயினார் இருந்த நன்றாக கருத்தில் வைத்து தவறாமல் நோன்பு இருந்து தவம் பெறலாம். இதை உரைத்த கணக்கரிடம் அமராவதி கேட்டாள். உத்தமரே சித்திரபுத்திரரே சீமானே நீ கேட்க வேண்டும். உயிரோடு சொர்க்கம் வரவழைத்து கொண்டால் என்ன நிகழும்? இப்போது என்னை இங்கு அழைத்தால் எனது தருமமெல்லாம் தவிர்த்துவிடும் என்று கூறினாள் அமராவதி. சித்திரபுத்திரற்கு மனம் மிக உண்டாகியது. பூலோகத்தில் போய் பொருந்தும்படி வந்து தருமங்கள் எல்லாம் தவறாமல் செய்ய வேண்டும். போக விடை கொடுப்போம். பொற்கொடியே நீ கேட்பாயாக நூறு வயது இருப்பாய். நூற்றாண்டு சென்றபின் உன்னை நான் எம்முடன் அழைத்துக் கொள்கிறேன். அதனால் இந்த உடல் அழியுமுன்னே நீ பூந்தேர் ஏறி பூலோகம் செல்ல வேண்டும். போய் வாரும் என்று கணக்கர் அமராவதிக்கு கூறினார். அப்படியே தேர் அமராவதி வருமுன்னே அங்கு நடக்கும் அதிசயங்களைக் கேட்க வேண்டும் கூரிய கொம்பால் கொன்ற பசு இறை அருந்தவில்லை.

இதைக்தோடும் கூடவில்லை, கண்ணீர் ஒழுகியது. அந்தப்பசு பதறுகிறது. அமராவதியே அன்னை இறந்தாள். ஊரார் உறவு உள்ளார் உற்றார்கள் கூடினர். கூப்பிட்டழுது கோவிந்தா என்றனர். ஆண்டி பரதேசி அநியாயம் என்றார். அமராவதி கூட்டை அன்பாக எடுத்தனர். செய்யும் சடங்குகளைக் செய்து சீக்கிரமாய் முடித்தனர். மஞ்சளையும் பூசி மலர்களையும் சூடினர். பட்டு உடுத்தி பாவாடையை மேல் போட்டனர். மாலையைக் கழுத்தில் இட்டு மருக்கொழுந்தை அணிந்தனர். பூந்தெரும் கட்டி புஷ்பமலர் அலங்கரித்தனர். வாத்தியங்களெல்லாம் வரிசையாய் முழங்கினர். குரவைதனை முழங்கினர். கோவிந்தா என்று சென்னார்கள். அமராவதி கூட்டை ஒரு பூந்தேரில் வைத்தனர். வாலைமெல்லாம் முழங்கினர். மயானக்கரையில் வகையாய் பந்தலிட்டனர். சந்தனக்கட்டையை சதிராக அடுக்கினர். கருமங்கள் செய்தனர். அந்தக் கரிகைக்கு அப்பபோது கொள்ளிகள் வைத்து குடம் உடைத்தார்கள். இப்படி இருக்கின்ற நேரத்தில் வாய்க்கரிசி போட்டார்கள். அங்கு வந்தவர்களெல்லாம் அமராவதியையாளை அனுப்பினார். தேரோடு மயானக்கரைக்கு வந்தாள். கட்டையில் இட்ட கனத்தவுடல் புகுந்தது. அமராவதிக்கு சீவன் பிறந்தது. நித்திரை தெளிந்தது போல் நினைவு உண்டானது. சிவசிவ என்று சிவனைத் தொழுதாள். திசைகளை நோக்கி பணிந்தாள் நன்மையும் தீமையும் நடுவாக எழுத வந்தவர் காணாத காட்சியெல்லாம் காட்டி வைத்தார் சீமானே படாதபாடெல்லாம் படுத்தி வைத்த சீமானே என்று அமராவதி கூறி ஏகினாள். அதனால் அடுக்கின கட்டையெல்லாம் சூல்போல் தளர்ந்தது. அமராவதியாளின் அகத்திலே வந்தவுடன் உற்றார் உறவுடையார் உறாரைக் கூட்டுவந்து யோசனம் பண்ணுவித்து பேகவிடைகொடுத்தனர். தருமங்கள் எல்லாம் குறைவில்லாமல் செய்தாள். நயினார் நோன்பு நன்றாக இருக்கவென்று விரும்பினாள். தான் மிகப்பயந்து நயினார்க்கு நோன்பு இருந்தாள். தன்னுடைய கணவனும் சிறக்க வேண்டுமென்று நோன்பு இருந்தாள். சித்திரை மாதம் பதினெட்டாம் தேதியில் சித்திரைக்குச் சித்திரையிற் சீரான பவுர்ணமயில் பறையோசை கேட்டு பதம் பெற்றோம் என்றனர். புலோகத்திலுள்ள புகழந்த மனிதர்களெல்லாம் நயினார் மீது நோன்பு நன்றாக இருங்கள் என்று வள்ளுவனும் புகழந்து பறை சாற்றினான். பலகையைப் போட்டு பாவாடையை மேல் விரித்தார். நிறைநாழியை வைத்து நிறை மரக்கால் வைத்தனர். தேங்காய் பழமும் சிறக்கும் படி வைத்தனர். சர்க்கரை, எள்ளுருண்டை சகலமும் வைத்தனர். பருப்பு, அரிசி, பாணக்கம் முதலியன படைத்தனர். கறிவகை உள்ள தெல்லாம் படைத்தனர். பொங்கல் இட்டுப் படைத்தனர். திருக்கண்ணமுது சேகரமும் வைத்தனர். புதிதாக உருக்கிய

நெய்யும் படைத்தனர். தூபம் தீபம் காட்டினர். தோத்திரங்கள் செய்தனர். திருநீறு அணிந்து பணிந்து வணங்கினர். ஏங்கிப்பிரத வித்து இருக்கும் போது உத்தமனார் உடனே அறிந்தார்கள். பார்வதியும் என்ன செய்வது என்று ஏற்றபடி நினைத்தார். பார்வதியும் பண்பாகச் சொன்னார். இதைச் சித்திரா புத்திரரும் சிறப்பாகச் பார்த்தனர். எந்தனுடைய பிறப்பு வளர்ப்பு பற்றி எல்லோரும் அறிந்தனர். எனது நோன்பு பற்றியும் நல்ல விரதம் பற்றியும் எல்லோரும் அறிந்தனர். வேணுமென்று நினைத்தேன். மேன்மையுள்ள செட்டிச்சி அமராவதியாளை அன்புடைய மாதரசை வரவழைத்து அவளிடம் வகைப்படி சொல்லிவிட்டேன். சொன்னபடி அவளும் தோத்திரங்கள் செய்தாள். பூலோகத்திலுள்ள மானிடற்குப் புகழுந்து உரைத்தாள். விரதமிருந்து விஸ்தாரம் செய்து வைத்தாள், எந்தன் பிறப்பை எடுத்துரைக்க யாருமில்லை என்று கணக்கர் சிவனிடம் கூறினார். அப்பொழுது சிவனாரும் மனம் உண்டாகியது. பார்வதியம்மாளைப் பக்கத்தில் அழைத்து புத்திர நற்பிறப்பு என்பது பெரிய ரகசியம். நீயும் பார்பாத்தி வேஷம் புகுந்தாளே பார்வதி. கைகயில் பிரம்பும் கனத்ததொரு உத்தமியே ஏதுக்கும் நீ உரைத்திடு என்றார் சிவன். உடனே அமராவதிக்கு அறிவு மிக உண்டானது. நயினார் திருநோன்பு நாங்கள் இருக்கின்றோம். அவருடைய பிறப்பை அறிவுப்பாரில்லை தயங்குகின்றோம் என்று அமராவதி கூறினாள். அப்போது பிரியாமணி புத்தகத்தை தாழ்த்தாள் கதையைக் கேளுங்கள். கிருபையுடன் சொல்லுகின்றேன் என்றார் நாட்டுக்கணக்கர். எமதருமன் பெருங்கணக்கர். பூலோகத்திலுள்ள மனிதர்களெல்லாம் புகழும்படி நன்மையும் தீமையும் நடுவாக எழுத வேணும் என்றவர். எமதர்மர் வாசலிலே இருந்து கணக்கை எழுதுபவர். பிறப்பும் வளர்ப்பும் பேரான நல்வளமும், தவத்தாலே வந்த கதையும் மற்ற வையும் உரைத்திடுவாள். பசுவின் வயிற்றில் பாலன் பிறந்ததுவும் சம்பு தலத்தில் தாமரையிருந்ததுயும் முதலிய எல்லாக் கதையும் எடுத்துரைத்தாள் பிராமணி. புத்தகம் எல்லாம் பொன்னின் எழுத்தாணியுடன் கேட்டார்கள். எல்லோரும் கிருபையுடன் இருந்து வணங்கினர். பணிந்தனர் திருநீறு வாங்கி அணிந்தனர். சாந்து, சவ்வாது, சந்தனம் முதலியன கொடுத்தார். மாலையைக் கழுத்தில் அணிந்தார். இதை மண்டலமெல்லாம் அறிந்தனர். ஆபரணம் பூவுணம் முதலியன பண்பாக கொடுத்தார். இப்படி வரிசைபெற்று பார்வதி கூறினார். பார்வதி சிவனாரிடத்தில் சேர்ந்திருந்தார் சித்திரபுத்திரனாரிடம் போன சேதியெல்லாம் சிவனாரும் மனம் மகிழ்ந்து கூர்ந்து கேட்டனர். அதனால் பார்வதி வசதியெல்லாம் தப்பாமல் கூறினார். புத்திரரும் புகழந்து தொழுதாள். எமனிடம் வருவதற்கு ஏற்ற விடை வாங்கினார்.


புத்திரரும் வந்து புகழுந்தார். இந்தக் கதையை இன்பாய் கேட்டார்கள் அமராவதிக்கு அறிவுமிக உண்டானது. செல்வங்கள் எல்லாம் சேரவே உண்டானது. நாளுக்கு நாள் அதிகம் உண்டானது. அவர்களை அழைத்து காணவேண்டும். கேட்டவர்கள் எல்லாம் கிளைகளுடன் வாழ்ந்திருப்பார். நினைத்தபடி முழுவதுமாக நீண்டகாலம் வாழ்ந்திருப்பார். அமராவதிக்கு அது திகைத்தது. நோன்பு செய்து நூற்றாண்டு முடிந்தவுடன் சித்திரபுத்திரன் மனதில் தெரிந்தது. நோன்பு மாறாமல் நூற்றாண்டு வாழ்ந்தாள். அமராவதிணை அழைக்க வேணும் என்றார். உடலோடு அமராவதியை சொர்க்கத்திற்கு கூட்டி வர வேணும் என்றார். புண்ணியர் பூந்தேரை அனுப்பினர். அப்பொழுது அமராவதி நூறு வயது வாழ நோன்பு இருந்தாள். பூமியில் வாழும் புண்ணியரே சிவலோகம் போக வேண்டும். நோன்பு விரதத்தை நுணுக்கமாய் அறிந்தார். கிருபை பெறுவதற்கு கதையை கேட்க வேண்டும். பயபக்தியுடன் பலன் பெறவேண்டும் புண்ணியரே என்று அமராவதி கூறினாள். அந்த காலம் அடுக்கடுக்காய் வந்தது. தயவுடன் தானதருமங்கள் கொடுத்தாள். பிராமண போஜனங்கள் பிரியமாய் நடத்திவைத்தார். சிவபூசை குருபூசை முதலியன செய்தாள். கூட்டோடு சொர்க்கத்திற்கு கூடுகிறேன் என்று உரைத்தாள். இந்தப்படி சொல்லி இருக்கும் தருவாயில் அழகான பூந்தேர் வந்தது. அமராவதியும் அவள் தர்மராஜாவும் இருபேரும் நன்றாக அந்த தேர் மீது ஏறினார்கள். சிவகணங்கள் வந்து தேரை கொண்டு போனார்கள் அப்பொழுது தேவர்கள் பூமாரி பொழிந்தனர். இதனைப்பார்த்த பரமசிவனும் பார்வதியும் சொற்கவாசலைத் திறக்கச் சொன்னார்கள். சித்திரபுத்திரரை சென்று வணங்கினார்கள். சிவனோடு உமையாளை சேரவே நினைத்தார்கள். உத்தமியாகிய அமராவதி சிவனிடம் கூறினார். தருமங்கள் செய்வது இந்ததரணியில் புகழுடன் இருப்பதற்கு சமம். அதுபோல் சித்திரபுத்திரரும் பொருந்துவர். அப்போழுது சிவனார் பிராமாவைப் பார்த்து சிறப்பிக்கச் சொன்னார். அதனால் பிரமாவும் பார்த்து சிறப்பிக்கச் சொன்னார். அதனால் தலைமகளாகப் பிறப்பித்தார். தருமராசவும் தலைமகனாகப் பிறந்தார். ஒருவருக்கு ஒருவர் ஒற்றுமையாய் வாழ்ந்தனர். தர்மம் அடுத்த பிறவியலும் அப்படியே தான் உண்டு. புண்ணியங்கள் எல்லாம் புகழுந்து நடத்தினர். அன்னக் கொடிகட்டி அடைவாக வாழ்ந்தனர். தவறாமல் நோன்பு இருந்தவரைப் பார்த்து ஆசைப்படி வாழ்ந்தனர். ஆண்டு நூறான பின்பு சித்திரபுத்திரரும் தேரை அனுப்பினர். அவர்கள் இருவரையும் கூட்டு வந்து விட்டார்கள். அவர்கள் குற்றம் இல்லாதவர்கள் இன்னமும் பிறக்க வேணும் என்றார்கள். சித்திரபுத்திரர் இதனை இதமாகக் கேட்டனர். இறப்பதுவும்

பிறப்பதுவும் எனக்கு இனி ஆகாது என்றனர். வந்து அழிக்குமே புண்ணியரே என்று கூறினர். நட்சேத்திரப்பதவி நலமாக அருளும் என்றனர். அவர் சிவனாரிடத்தில் மேற்கண்ட செய்திகளை உரைத்தனர். அதனால் பிரமா அப்படியே அதை செய்து வைக்க நட்சத்திரப்பதத்தில் ஒன்றாக வாழ்ந்தனர். இந்தக் கதையை எடுத்துரைக்கக் கேட்டவர்கள் ஆல்போல் தழைத்து அருகு போல் வேரூன்றி மூங்கில் போல சுற்றம் பிரியாமல் வாழவேண்டும். சித்திரபுத்தினார் சீமானும் வாழ வேண்டும். பொன் எழுத்தானியுடன் புத்தகமும் வாழ வேண்டும். நெல்வேலி நாதர் நெடுங்காலம் வாழ வேண்டும். காந்தியம்மாளும் கணபதியும் வாழ வேண்டும்.



அறுபதாம் ஆண்டு நிறைவு

சாந்தி கல்யாண மணி விழா



எங்கள் மணிவிழாவிற்கு வருகை தந்து ஆசீர்வதித்த அனைவருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றி!

இவண் :

AT. சங்கர் - புவனா சங்கர், S. அர்விந்த், S. ஆகாஷ்